விலை : 20.00 website : www.valampurii.lk
பக்கங்கள் : இருபத்து நான்கு
Registered as a Newspaper in SriLanka

# வலம்புரி
Valampurii

E-mail : valampurii@sltnet.lk
valampurii@yahoo.com

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 மாசி 29 சனிக்கிழமை (12.03.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 084

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

# திருட்டில் அவனென்ன? இவனென்ன?

# அனைவர் மீதும் சட்ட நடவடிக்கை


## தனியார் துறைக்கு இரு கட்டங்களில் சம்பள உயர்வு

(கொழும்பு)
சேவையாளர்களின் வரவு - செலவுத்திட்ட நிவாரணக் கொடுப்பனவு தொடர்பிலான சட்ட மூலத்தின் ஊடாக தனியார் துறையினருக்கான 04ஆம் பக்கம் பார்க்க....

## ராஜபக்ஷ வரி!

(கொழும்பு)
ஆயிரத்து 42.8 பில்லியன் வெளிநாட்டு கடன் சம்பந்தமான விடயம் தெரியவந்ததன் காரணமாக பெறுமதி சேர் வரியை அதிகரிக்க நேர்ந்துள்ளதாகவும் இதனால், அதனை ராஜபக்ஷ வரி என அடை 23ஆம் பக்கம் பார்க்க....

## சிறந்த சட்டத்தரணிகளை ராஜபக்ஷவினர் தேடவேண்டும்



(கொழும்பு)
மகிந்த அரசாங்கத்தில் இடம்பெற்ற ஊழல் மோசடிகளால் நாம் தொடர்ந்தும் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்க முடியாது எனத் தெரிவித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்வரும் மூன்று மாத காலப்பகுதிக்குள் நிதி மோசடிகளுடன் தொடர்புடைய அனைவர் மீதும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அறிவித்துள்ளார்.
(23ஆம் பக்கம் பார்க்க)



வடமேல் மாகாணத்தில் தங்கொட்டுவ, புஜ்ஜம்பொல பிரதேசத்தில் நேற்று அதிகாலை எரிந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்ட வான் ஒன்றிலிருந்து மீட்கப்பட்ட சர்ச்சைக்குரிய ஐந்து சடலங்கள் தொடர்பில் காவல்துறையின் குற்றப்புலனாய்வு பிரிவினர் விசாரணையை ஆரம்பித்துள்ளனர்.

## ‘கொள்ளையடிக்கப்பட்ட அரச பணத்தில் வீடல்ல மாளிகையே கட்டியிருக்கலாம்’

(கொழும்பு)
மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தினால் கொள்ளையடிக்கப்பட்ட அரச பணத்தைக் கொண்டு போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடு அல்ல மாளிகையே கட்டிக் கொடுத்திருக் கலாம் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.
பெருந்தோட்டத் துறை சமூகத்தின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவது தொடர்பான ஐந்தாண்டு திட்ட அங்குரார்ப்பண நிகழ்வு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. குறித்த நிகழ்வில் கலந்துக் கொண்டு உரையாற்றுகையிலேயே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இதுவரை மகந்த அரசாங்கத்தினால் கொள்ளையடிக்கப்பட்ட சுமார ஆயிரம் பில்லியன் ரூபாய் பணம் தற்போதைய 23ஆம் பக்கம் பார்க்க....

## ஜனாதிபதி இன்று யாழ் வருகை

## நடேஸ்வராக் கல்லூரி மற்றும் 701 ஏக்கர் காணி கையளிக்கப்படும்

(யாழ்ப்பாணம்)
காங்கேசன்துறை நடேஸ்வரா கல்லூரி மற்றும் வலிவடக்கு பகுதிகளில் விடுவிக்கப்பட்ட 701.5 ஏக்கர் காணிகளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்றையதினம் பொதுமக்களிடம் நேரில் வந்து உத்தியோகபூர்வமாக கையளிக்கவுள்ளார்.
இந்த நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு காங்கேசன்துறை நடேஸ்வரா கல்லூரியில் 23ஆம் பக்கம் பார்க்க....

## அமைச்சர் சரத் பொன்சேகா சொல்வதெல்லாம் பொய்

### அரசியல் வேட்டை என்கிறார் பசில்



(கொழும்பு)
2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவதற்காக விடுதலைப் புலிகள் அமைப்புக்கு பணம் கொடுத்ததாக பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவிடம் தான் கூறவில்லை என முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவத்துள்ளார்.
நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றிய பிரதேச அபி விருத்தி அமைச்சர் சரத் பொனசேகா இந்த குற்றச்சாட்டை சுமத்தியிருந்தார். 24ஆம் பக்கம் பார்க்க....

### வழக்கு தாக்கல் • பிணை • புனர்வாழ்வு • உறுதி

## 14 தமிழ் அரசியல் கைதிகளின் உணவு தவிர்ப்பு இடைநிறுத்தம்

(கொழும்பு)
கொழும்பு மகசின் சிறைச்சாலையில் 17 நாட்களாக உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகள் 14 பேரும் நேற்று மதியத்திலிருநது தமது போராட்டத்தினை இடைநிறுத்தியுள்ளனர்.
உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் இருந்த தமிழ் கைதிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் அவர்களை பிணையில் அல்லது புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்வதற்குரிய நடவடிக்கை எடுப்பதாக சட்டமா அதிபர் திணைக்களத்தால் கொழும்பு நீதவான் நீதிமன்றில் தெரிவித்ததை அடுத்து கைதிகள் உணவுதவிர்ப்பு போராட்டத்தை இடைநிறுத்தியுள்ளனர்.
புதிய மகசின் சிறைச்சாலையில் உள்ள 14 அரசியல் கைதிகள் தமது விடுதலையைவலியுறுத்தி கடந்த 23 ஆம் திகதியிலிருந்து உணவு தவிர்ப்புப்போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.
குறித்த 14தமிழ் அரசியல் கைதிகளும் நேற்றையதினம் கொழும்பு நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.
இதன் போதுகுறித்த சந்தேக நபர்களுக்கு எதிராகுற்றச்சாட்டு பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு அதன் பின்னர் அவர்களை பிணையில அல்லது புனர்வாழ்வளிக்கப்பட்டு 23ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்




## விற்பனைக்கு

புறோயிலர் சுத்தம் செய்தது 1Kg 440 /=
அத்தோடு கல்பேட், பேரன்ஸ்,
ஊர்ச்சேவல் விற்கப்படும். (3854)

**தாசன் பாம்**
**158/2, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.**

## விற்பனையாளர் தேவை

எமது ஜவுளி நிறுவனத்துக்கு பிடவை அனுபவம் உள்ள ஆண்கள் தேவை. (O/L, A/L) படித்த, பழக ஆர்வம் உள்ளவர்களும் விரும்பத்தக்கது.

**சிவகணேசன் TEX**
**41, பெரிய கடை, யாழ்ப்பாணம்.**
(3866)




## பிரதிக் கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வு



(யாழ்ப்பாணம்)

நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் அ.அகிலதாஸ் யாழ்ப்பாண கல்வி வலயத்தின பிரதிக் கல்விப் பணிப்பாளராக (முகாமைத்துவம்) பதவி உயர்வு பெற்றுள்ளார்.

இவருக்கான பதவி உயர்வை வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் வழங்கியுள்ளார்.

பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.அகிலதாஸ் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி ஆகியவற்றின் அதிபராக கடமையாற்றியவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ந)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
**021 221 7603, 021 567 1532**

## மணிவிழா வாழ்த்து

**E.S.P. நாகரத்தினம்**




**கொக்குவில் மேற்கு சி.சி.த.க பாடசாலைச் சமூகம்,**
**கொக்குவில் மேற்கு சனசமூக நிலையம்,**
**கொக்குவில் மேற்கு மாலதி சுப்பிரமணியம்,**
**ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையமும்,**
**முன்பள்ளியும்.**

## மணிவிழா வாழ்த்து

"பொன்மனச் செம்மல்"
"மனிதநேய ஈகையாளன்"
"கல்விக் காருண்யன்"

உயர்திரு.
**E.S.பேரம்பலம்**
**நாகரத்தினம்**
அவர்கள்



நானிலம் போற்றும் நற்றவா
நற்பணி செய்து நற்பட்டங்கள் பெற்றவா
நான்கு பதினைந்து அகவையில்
வந்துதித்து இன்று நன் மக்களுடன்
நான்கு திசையிலும் புகழ் பரப்பி வாழ
நான் மறை வேதங்களும் நல்லாசி கூற
நால்வரில் ஒருவராம் மாணிக்கவாசகர் மடத்தில்
நாசுவைக்கை நாவிருந்தளித்த உமை
நாவார வாழ்த்துகிறோம்.

(C-3961)

**வாழ்த்துவோர் :**
**T.B.M அன் Brothers**
மகாலட்சுமி தேநீரகம் ( பாஸ்கரன் )
கே.கே.எஸ் றோட், கொக்குவில்.

## கோத்தா ஆஜர்

(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, ரக்னா ஆரக்சக லங்கா சர்ச்சை குறித்து வாக்குமூலம் அளிப்பதற்கான நிதிக் குற்றவியல் தொடர்பான விசேட பொலிஸ் பிரிவின் அலுவலகத்தில் நேற்று ஆஜராகியுள்ளார்.

தங்களுக்கு கிடைத்த முறைப்பாடு தொடர்பாக முன்னாள் பாதுகாப்பு செயலாளரிடம் வாக்குமூலங்களை பெறுவதாக குற்றவியல் பிரிவு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (செ-12)

## இதய ஒலியில் இதய பூர்வமான காணிக்கை

### சந்திரசேகரி பராசக்தி



இணுவில் மேற்கைச் சேர்ந்த சந்திரசேகரி பராசக்தி அவர்கள் 05.03.2016 இறைவனடி சேர்ந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாராயணர் கந்தையா-அன்னப்பிள்ளையின் அன்பு மகளும் சந்திரசேகரியின் அன்பு மனைவியும், முருகதாஸின் பாசமிகு தாயாரும் ஆவார்.

இவர் இணுவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவியும் இணுவில் இந்து கல்வி அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தின் ஆரம்ப உறுப்பினரும் செயலாளரும், வலிகாமம் வலய இந்து சமய முதன்மை ஆசிரியையும், இந்து சமய சமூக சேவையாளரும், இணுவை நகர் பிரமகுமாரிகள் இராஜயோக தள அமைப்பாளராகவும் இருந்துள்ளார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் (12-03.2016) இன்று லண்டனில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தகவல் :
S.J வரதன் ( Master )
(பெறாமகன்)
இணுவில் மேற்கு,
(3863)

## மாநகரசபை எல்லைக்குள் குழாய்க்கிணறு நிர்மாணித்தல்

மாநகரசபை எல்லைக்குள் குழாய்க்கிணறு நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளும் நிறுவனங்கள் மாநகரசபையில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். **15.03.2015 ஆம் திகதியின் பின்னர்** மாநகரசபையில் பதிவு செய்யப்பட்டு அனுமதி பெற்ற நிறுவனங்கள் மாத்திரம் குழாய்க்கிணற்றினை நிர்மாணிக்க முடியும்.

குழாய்க்கிணறு நிர்மாணிக்க உத்தேசிப்பவர்கள் மாநகரசபையூடாக தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையிடம் அனுமதி பெற்ற பின்னர் மாநகர சபையில் பதிவு செய்த நிறுவனங்களினூடாக குழாய்க்கிணற்றினை நிர்மாணிக்க முடியும் என்பதுடன் மாநகரசபையின் அனுமதியின்றி குழாய்க்கிணறு நிர்மாணிக்கும் நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

(C-3959)

**ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்.**

# பலாலி விமான நிலைய விஸ்தரிப்பு வேண்டாம்

# மீள்குடியேற்றத்தினை வலியுறுத்தி மக்கள் உண்ணாவிரதப் போராட்டம்

## மல்லாகம் நலன்புரி முகாமில்






**(யாழ்ப்பாணம்)**

***மீள்குடியேற்றத்தை வலியுறுத்தி வலி.வடக்கு நலன்புரி நிலைய பொதுநிர்வாக அமைப்பினரின் ஏற்பாட்டில், மல்லாகம் நீதவான் முகாமில் வாழும் மக்கள் நேற்று வெள்ளிக்கிழமை மீள் குடியேற்றத்தினை வலியுறுத்தி அடையாள உண்ணாவிரத போராட்டத்தினை முன்னெடுத்தனர்.***

அந்த உண்ணாவிரதத்தில் 3 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர். பலாலி விமான நிலையம் சர்வதேச விமான நிலையமாக விஸ்தரிப்புச் செய்ய வேண்டாம். ஏதிர்வரும் ஏப்ரல் மாதத்திற்குள் வலி.வடக்கு மீள்குடியேற்றம் மற்றும் நலன்புரி நிலைய மக்களுக்கான வாழ்வாதாரங்களை வழங்குதல் போன்ற கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மோத காலத்திற்குள் தம்மை தமது சொந்த இடங்களில் மீள் குடியேற்றம் செய்வார் என நம்பிக்கையுடன் இருந்தோம். ஆனால், பலாலி விமான நிலையத்தினை விஸ்தரிப்புச் செய்வோம் என கூறியதன் பின்னர் ஜனாதிபதியின் வார்த்தையில் நம்பிக்கை இழந்து விட்டோம்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் 6 மாதத்திற்குள் வலி.வடக்கில் மீள்குடியேற்றம் செய்து வலி.வடக்கு மக்களின் பிரச்சினைக்கு தீர்வு தருவேன் என கூறினார். ஆனால், பலாலி விமான நிலையத்தினை சர்வதேச விமான நிலையமாக புனரமைப்புச் செய்வதற்கு வலி.வடக்கு மக்களின் காணிகள் சுவீகரிக்கபடுமென்றும், அதை யார் எதிர்த்தாலும், பலாலி விமான நிலையம் விஸ்தரிப்புச் செய்யப்படுமென்று பாதுகாப்பு அமைச்சர் மற்றும் புனர்வாழ்வு அமைச்சரின் கருத்துக்கள் தம்மை அதிர்ச்சியடைய வைத்துள்ளதாக மக்கள் சுட்டிக் காட்டினார்கள்.



அத்தியாவசிய பிரச்சினைகளான மலசல கூடங்கள் பாவிப்பதில் பிரச்சினை, தண்ணீர் பிரச்சினை உட்பட இளம் பெண்களுக்கு திருமணம் செய்வதில் பிரச்சினை, சமூக கலாசார பிரச்சினைகளை எதிர்நோக்கும் தம்மை உடனடியாக மீள்குடியேற்றம் செய்ய வேண்டுமென்றும், தமது சொந்த இடத்திற்கு சென்று தாங்கள் ஏதாவது ஒரு தொழிலை செய்து நிம்மதியான வாழ்க்கை வாழ்வோம் என்றும் தெரிவித்தனர்.

உங்கள்பிள்ளைகளைப் போன்று எங்கள் மீதும் கருணை கொண்டு, உடனடியாக மீள்குடியேற்றம் செய்ய வேண்டும் என்றும் தமிழ் அரசியல் கட்சிகளின் மந்தப் போக்கே தமது மீள்குடியேற்ற தாமதத்திற்கு காரணம்என்றும்குற்றஞ்சாட்டியுள்ளனர்.


எனவே, இதுவரை காலமும், சுமார் 26 வருடங்களுக்கு மேலாக பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வரும் தம்மை ஜனாதிபதி கருணை கொண்டு, தமது சொந்த நிலங்களில் மீள்குடியேற்றம் செய்ய வேண்டுமென்றும், அவ்வாறு எதிர்வரும் சித்திரை வருடத்திற்கு முன்னர் மீள்குடியேற்றம் செய்யத் தவறின் நாங்களாகவே சென்று மீள்குடியமர்வோம்,

மேலும் இன்றைய தினம் யாழ். வருகை தரும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நடேஸ்வரா கல்லூரியை விடுவிக்கவுள்ளதாக அறிய முடிகின்றது. இதேபோல் எமது காணிகளையும் விடுவிப்பதாக வெறுமனே உறுதியளித்து விட்டு செல்லாமல், தனது நடவடிக்கைகள் மூலம் எமது காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்தனர் அந்த மக்கள்.

இதேவேளை மீள்குடியேற்றம் செய்யும் வரை நலன்புரி நிலைய முகாம்களில் வாழும் வலி.வடக்கு மக்கள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் அடையாள உண்ணாவிரத போராட்டத்தினை முன்னெடுக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. தமது உண்ணாவிரத போராட்டத்தை வெளியில் வேடிக்கை பார்த்து கொண்டு விமர்சிப்பவர்கள் யாராக இருந்தாலும் பாரிய விளைவை எதிர்நோக்க வேண்டி வரும் எனவும் அவர்கள் எச்சரித்துள்ளனர். (இ-4)

# 1000 பில்லியன் ரூபாய்களை நாம் கண்டுபிடித்துள்ளோம்

### பிரதமர் ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

மறுக்கப்பட்டிருந்த மக்களது உரிமைகளை 2015ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதிக்குப் பின்னர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீண்டும் மக்களுக்கே பெற்றுக் கொடுத்தார்.

இதற்கு முன்பிருந்த அரசாங்கம், மக்களின் உரிமைகளைக் களவாடியது. உண்மையில் எதைக் களவாடினார்கள் என எமக்கு இது வரை தெரியாது.

**அது தொடர்பில் நிதியமைச்சர் இன்னும் தேடிக்கொண்டிருக்கின்றார்.** இதுவரை ஆயிரம் பில்லியன் ரூபாய்களைக் கண்டுபிடித்துள்ளோம் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பெருந்தோட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் ஐந்தாண்டு செயற்றிட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

**இந்நிகழ்வில், கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-5)**

# தம்மாலோக தேரர் பிணையில் விடுவிப்பு

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் யானைக்குட்டி ஒன்றை வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த உடுவே தம்மாலோக தேரருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.

60 இலட்சம் ரூபா பெறுமதியான மூன்று சரீரப் பிணையில் அவரை விடுதலை செய்ய நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

காலஞ்சென்ற அஸ்கிரி பீட மகாநாயக்கர் வணக்கத்துக்குரிய கலகமஶ்ரீ அத்ததஸ்ஸி தேரரின் இறுதி அஞ்சலி நிகழ்வுகளில் கலந்து கொள்ள வேண்டும் எனக் கூறிய உடுவே தம்மாலோக தேரரின் சட்டத்தரணி அவருக்கு பிணை வழங்குமாறு நீதிமன்றை கோரியிருந்தார்.

விடயங்களை பரிசீலனை செய்து பார்த்த கொழும்பு நீதவான் நீதிமன்ற மேலதிக நீதிபதி நிஷாந்த பீரிஸ் நேற்று அவருக்கு பிணை வழங்கி உத்தரவிட்டுள்ளார். **தேரரின் கைது குறித்து பலர் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)**

# 12 இந்திய மீனவர்களுக்கு 3 ஆவது முறையும் மறியல்

(கொழும்பு)

இலங்கை கடற்பரப்பில் அத்து மீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட புதுக்கோட்டை மாவட்டத்தை சேர்ந்த 12 இந்திய மீனவர்களையும் 3 ஆவது முறையாக எதிர்வரும் மார்ச் மாதம் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற நீதிபதி எம்.எம்.றியால் நேற்றைய தினம் உத்தரவிட்டுள்ளார்.

காரைநகர் வடக்கு கடற்பரப்பில் கடந்த ஜனவரி மாதம் 17 ஆம் திகதி அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 3 பேரும் கடந்த ஜனவரி மாதம் 31 ஆம் திகதி அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 9 பேரும் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகளால் நீதிமன்றில் ஆஜர்படுத்தி விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்கள் நேற்றைய தினம் ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றங்களில் ஆஜர்படுத்தப்பட்ட போது நீதவான் அவர்களை எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (இ-9)

# எரியுண்ட நிலையிலிருந்த சடலங்கள் கண்டுபிடிப்பு

சிலாபம் தங்கொட்டுவ பகுதியில் எரியுண்ட நிலையில் ஐந்து சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுக்காலை இந்த சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தங்கொட்டுவ கொஸ்ஹேன வத்த என்ற இடத்தில் எரியுண்ட நிலையில் நின்ற வான் ஒன்றுக்குள் இருந்தே இந்த சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பெரும்பாலும் வானில் ஏற்பட்ட தீ காரணமாக இவர்கள் அனைவரும் எரியுண்டு இறந்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர். **இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-5)**

## தனியார் துறைக்கு...

சம்பள அதிகரிப்பு இரண்டு கட்டங்களில் அதிகரிக்கப்படும் என்று தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர் டபிள்யு. டி.ஜே. செனவிரத்ன தெரிவித்தார்.

வேலையாளர்களின் தேசிய குறைந்த பட்ச வேதனம் சட்ட மூலத்தை நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை சமர்ப்பித்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

### முதலாவது கட்டம்

*மாதாந்தம் 40 ஆயிரத்துக்கு குறைந்த சம்பளத்தைப் பெறுவோருக்கு ஆயிரத்து 500 ரூபாய் சம்பள அதிகரிப்பு.

* 1ஆம் கட்ட சம்பள அதிகரிப்பு, 2015 மே மாதம் 1ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்படும்.

*நாளொன்றுக்கு ஆயிரத்து 600 ரூபாய் சம்பளத்துக்குக் குறைவாக சம்பளம் பெறுவோரின் சம்பளம், நாளொன்றுக்கு 60 ரூபாவினால் அதிகரிக்கப்படும்.

* துண்டு முறைமையின் பிரகாரம் சம்பளம் பெறுவோர், சம்பளத்துக்கு மேலதிகமாக 15 சதவீதம் பெறுவர். (இதுவும் 2015 மே 1ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்படும்)

* 40 ஆயிரம் ரூபாய் வரையறையில் அல்லது 41 ஆயிரத்து 500 ரூபாய்க்கு குறைவாக சம்பளம்பெறுவோர் ஆயிரத்து 500 ரூபாய் அல்லது ஆயிரத்து 500 ரூபாய்க்கு குறைவான சம்பள அதிகரிப்பை பெற்று மாத சம்பளம் 41 ஆயிரத்து 500 ரூபாயைப் பெறுவர்.

* மாதாந்தம் சம்பளம் 41 ஆயிரத்து 500 ரூபாயாக இருந்தால் சம்பளம் அதிகரிக்கப்படாது.


### இரண்டாம் கட்டம்

*வரவு-செலவுத திட்ட நிவாரண கொடுப்பனவான ஆயிரம் ரூபாய், 2016 ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் திகதி முதல் கிடைகும்.

*இதன்பிரகாரம் நாளாந்தம் சம்பளம் பெறும் (நாள் சம்பளம்) 40 ரூபாய் கிடைக் கும்.

* துண்டு முறை மூலம் சம்பளம் பெறுவோரின் சம்பளம், 10 சதவீத அதிகரிப்புடன் கிடைக்கும்.

இதேவேளை, இரண்டு கட்டங்களாக சம்பளம் அதிகரிக்கப்பட்டதன் பின்னர் சம்பள நிலுவை வழங்க வேண்டுமாயின், அந்த நிலுவைச் சம்ப்ளம் 12 கட்டங்களாக வழங்கப்பட வேண்டும். தனியார் துறையினரின் சம்பளத்தை 2015ஆம் ஆண்டு மே மாதம் 1ஆம் திகதி முதல் அதிகரிக்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்தமையால சம்பள அதிகரிப்பு அன்றைய தினத்திலிருந்தே அமுல்படுத்தப்படும்என்றும அவர் கூறினார். (செ-12)



மார்க்கண்டு சுவாமிகள் சபை,
மார்க்கண்டு சுவாமிகள் இந்து அறநெறிப் பாடசாலை கட்டிடத் திறப்பு விழா
திருவடி பிரதிஷ்டை

மேற்படி நிகழ்வானது மார்க்கண்டு சுவாமிகள் பிறந்த ஊரான பிரான்பற்றில் மாசிமாதம் 29 ஆம் திகதி (12.03.2016) சனிக்கிழமை இன்று காலை 8.30 மணிக்கு மார்க்கண்டு சுவாமிகளின் பேரனும், சபையின் ஸ்தாபகருமாகிய நவரத்தினராஜா சண்முகராஜா தலைமையில் நடைபெறவுள்ளது. ஆன்மீகச் சுடர் தொண்டுநாதன் சுவாமிகள் (அமெரிக்கா) கட்டிடத்தை திறந்து வைத்து, திருவடி பிரதிஷ்டையும் நடாத்தி வைப்பார். நிகழ்வில் அனைவரையும் கலந்து கொண்டு மார்க்கண்டு சுவாமிகளின் அருளைப் பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**மார்க்கண்டு சுவாமிகள் சபை,**
**மார்க்கண்டு சுவாமிகள் இந்து அறநெறிப்பாடசாலை**
**ஆசிரியர்கள், மாணவர்கள்**

இலுப்பையடி வைரவர் வீதி,
பிரான்பற்று
077 9004137

(3858)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
**021 221 7603, 021 567 1532**

முதலாம் ஆண்டு

# நினைவஞ்சலி

அமரர்

## மணியம் பவளம்மா



தோற்றம் 1943 - 07 - 08

மறைவு 2015 - 03 - 25

(சி-3963)

25.03.2015இல் இறையெய்திய எமது அன்புத் தாயாரின் முதலாம் ஆண்டு நினைவாக நாளை 13.03.2016 ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போஷன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறும் தங்களை அன்புடன் அழைக்கிறோம்.

அம்மன் கோவிலடி,
அராலி.

தகவல்:
மணியம் (கணவன்)
காந்தி (மகன்)



# மணிவிழா வாழ்த்து

## எமது மடாலயத்தின் தலைவர்

"பொன்மனச் செம்மல்", "மனிதநேய ஈகையாளன்",
"கல்விக் காருண்யன்", "கல்விக் கதிரவன்",
"ஈகைக்காவலன்", "இறைபணி வேந்தர்",
"சமூகமாமணி", "சைவப்புரவலர்",
"ஈகையார் திலகம்", "தேசபுத்திர",
"சமூக திலகம்", "சமூக நலஜோதி"

என்னும் கௌரவப் பட்டங்களைப் பெற்ற **உயர்திரு.** E.S.P.**நாகரத்தினம்** அவர்கள் மணிவிழா காண்பதையிட்டு மட்டற்ற மகிழ்வடைகிறோம். இவருக்கும் இவரது குடும்பத்தவர்களுக்கும் நல்லாசிகள் கிடைக்க ஈழத்துச் சிதம்பர திண்ணைக் கூத்தன் பாதம் பணிந்து நிற்கின்றோம்.

வாழ்த்துவோர்
மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபை
ஈழத்துச் சிதம்பரம் (திண்ணைபுரம் சிவன் கோவில்) காரைநகர்

(சி-3962)

# மணிவிழா வாழ்த்து



கல்விக் கதிரவன்
ஈகைக் காவலன்
இறைபணி வேந்தர்

சமூக மாமணி
சைவப்புரவலர்
ஈகையார் திலகம்

தேச புத்திரா
சமூக திலகம்
சமூக நலஜோதி

## E.S.P. நாகரத்தினம்

உரிமையாளர் என்ற பதம் நீக்கி
உரிமையுடன் அண்ணா என அழைக்கும்
சேவையாளர் நாம் 60 ஆம் அகவை
தனில் அன்புரிமையுடன் தனது சேவை
தனை கண்டு ஆர்ப்பரிப்பற்ற அமைதி
யான அளப்பரிய கல்வி சேவையை
வியந்து கல்வியாளர்கள் கூடி இனம்
கண்டு கௌரவிக்கும் இவ் விழாவதனை
கண்டு களிப்புறவும் உமது காலத்தில்
நாம் உம்மிடம் கண்ட கருணையும்
தன்னலமற்ற சேவையும் கற்ற
பாடங்கள் அத்தனையும் எமது
வாழ்விற்கு உரம் என இறைவனுக்கு
நன்றி செலுத்தி மணிவிழா சிறக்கவும்
மேலும் நினது பணி தொடர் வா்ழ்த்தி
கற்பகவிநாயகர் பாதக்கமலங்களை
வணங்கி இறைஞ்சுகின்றோம்.

வாழ்த்துவோர்:
பணியாளர்கள்
கஜமுகன் ஹாட்வெயார்:- இல.147, 149,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
இல. 103, பழைய சோனகதெரு, கொழும்பு.
E.S.P. நாகரத்தினம் சக நிறுவனம்:- இல.
52,54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
கரடிப்போக்கு சந்தி, கிளிநொச்சி.
S.P.N. மோட்டோர்ஸ்- இல. 145, ஸ்ரான்லி
வீதி, யாழ்ப்பாணம்.
P.N.K. குறூப்- இல. 589, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
பெப்சி சோடா களஞ்சியம்:- நெல்லியடி,
யாழ்ப்பாணம், மருதனார்மடம்.

(சி-3952)

# ஆனையிறவு ராணுவ முகாம் மீது தாக்குதல்; குற்றஞ்சாட்டப்பட்ட நபர் நீதிமன்றால் விடுதலை

## நீதிபதி இளஞ்செழியன் தீர்ப்பு

தமிழீழ விடுதலைப்புலிகளின் ஓயாத அலைகள் 3 அணியில் இணைந்து ஆனையிறவு இராணுவ முகாம் மீதுதாக்குதல் நடத்தியதாகக் குற்றம் சுமத்தப்பட்ட வழக்கின் எதிரியான விடுதலைப்புலிகள் அமைப்பின் புலனாய்வு பிரிவைச் சேர்ந்த புன்குயில் எனப்படும் பெர்னாண்டோ எமில்தாஸ் (வயது-36) நேற்று முன்தினம் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி ம.இளஞ் செழியனால் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இந்த வழக்கில் ஒரேயொரு சாட்சியமாக முன்வைக்கப்பட்டிருந்த எதிரியின் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் உண்மைத் தன்மை வழக்குத் தொடுநரினால் நியாயமான சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்கப்படவில்லை என சுட்டிக்காட்டி எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

நாகமணி தெய்வேந்திரன் என்பவருக்கு எதிராக சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு ஒன்றில் நீதியரசர்களான சி.வி. விக்னேஸ்வரன்,அமீர் இஸ்மாயில், மார்க் பெர்னாண்டோ ஆகியோர் அடங்கிய உச்சநீதிமன்ற நீதியரசர் குழாமினால் அளிக்கப்பட்ட தீர்ப்பை மேற்கோள்காட்டி, நீதிபதி இளஞ்செழியன் இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளார்.

விடுதலைப்புலிகள் அமைப்பின் புலனாய்வு பிரிவைச் சேர்ந்தவராகவும் ஓயாத அலைகள் 3 தாக்குதல் அணியொன்றில் இணைந்திருந்தவருமாகிய புன்குயில் என அழைக்கப்பட்ட பெர்னாண்டோ எமில்தாஸ் என்பவருக்கு எதிராக, கடந்த 2000 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22, 23 ஆம் திகதிகளில் ஆனையிறவு இராணுவமுகாம் மீதுதாக்குதல் நடத்தியதாகக் குற்றம் சுமத்தி, சட்டமா அதிபர் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

எதிரியினால் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் மட்டுமே, எதிரிக்கு எதிரான ஒரேயொரு சாட்சியமாக முன்வைக்கப்பட்டிருந்தது. இந்த குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை இந்த வழக்கில் அனுமதிக்கக்கூடிய சான்று என ஏற்கனவே யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றினால் இடைக்காலத் தீர்ப்பளிக்கப்பட்டிருந்தது.

இந்த வழக்கு நீதிபதி இளஞ்செழியன் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது, குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின்உண்மைத்தன்மை விசாரணைக்கு உட்படுத்தப்பட்டது.

விசாரணையின் முடிவில் நீதிபதி இளஞ்செழியன் தனது தீர்ப்பில் தெரிவிக்கையில்,

இந்த வழக்கின் எதிரி விடுதலைப்புலி உறுப்பினராம். அவர் ஓயாத அலைகள் தாக்குதல் அணியில் இடம்பெற்றிருந்தாராம்.எதிரி ஆனையிறவு இராணுவ முகாம் மீதான தாக்குதலில் ஈடுபட்டாராம் என தெரிவிக்கப்பட்ட போதிலும், இந்த விடயங்கள் சம்பந்தமாக எதுவிதமான புலனாய்வு விசாரணைகளும் நடைபெறவில்லை. அத்தகைய விசாரணைகள் நடத்தப்பட்டதாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்படவில்லை.

வவுனியா கூமாங்குளத்தில் வைத்து எதிரியை கடந்த 2011 ஆம் ஆண்டு, ஒக்டோபர் மாதம் 21 ஆம் திகதி பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி ஆப்தீன் கைது செய்திருந்தார். பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் கொழும்பு தலைமையலுவலக பெண்உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் பத்மினி என்பவரால், 2013 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 8 ஆம் திகதி குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் பதிவு செய்யப்பட்டது.

குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்ட தினத்தில் இருந்து 13 வருடங்களுக்கு முன்னர், 2000 ஆம் ஆண்டு, விடுதலைப்புலிகளின் ஓயாத அலைகள் தாக்குதல் அணியில் இணைந்திருந்த எதிரி, ஆனையிறவு இராணுவ முகாமைத் தாக்கியதாக இந்த குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றது.

இந்த வழக்கில் எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அவரைக் கைது செய்த பொறுப்பதிகாரி ஆப்தீன் மேலதிக புலனாய்வு விசாரணைகள் எதனையும் நடத்தவில்லை.

குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தைப் பதிவுசெய்த பெண் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பத்மினி குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தைப் பதிவு செய்ததைத் தவிர, எதுவிதமான புலனாய்விலும் அவரும் ஈடுபடவில்லை.

இந்த வழக்கில் கூறப்பட்டிருப்பது போன்று உண்மையிலேயே 2000 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22, 23 ஆம் திகதிகளில் ஆனையிறவு இராணுவமுகாம் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டன என்பதற்குரிய பயங்கரவாதப் புலனாய்வு பிரிவின் புலனாய்வு விசாரணை சான்றுகள் எதுவும் நீதிமன்றத்தில் முன்வைக்கப்படவில்லை.

இந்த வழக்கின் குற்றச்சாட்டில் குறிப்பிடப்பட்டிருப்பது போன்று 2000 ஆம் ஆண்டு ஏப்ரல் 22, 23 ஆம் திகதிகளில் ஆனையிறவு இராணுவ முகாம் மீது நடத்தப்பட்ட தாக்குதலினால் ஏற்பட்ட சேதம் என்ன, எத்தனை இராணுவ வீரர்கள் இறந்தார்கள். எத்தனை இராணுவ வீரர்கள் காயமடைந்தார்கள் என்பதற்கு ஒரு அறிக்கைகூட பொலிஸாரினால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை.

இந்த வழக்கில் குறிப்பிட்டிருப்பது போன்று. ஆனையிறவு இராணுவ முகாம் தாக்கப்பட்டது சம்பந்தமாக பாதுகாப்பு அமைச்சினால் கூட, எதுவிதமான அறிக்கைகளும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை.

விடுதலைப்புலிகளின் ஓயாத அலைகள் 3 தாக்குதல் அணியினர் 2000 ஆம் ஆண்டு ஏப்ரல் 22, 23 ஆம் திகதிகளில்தான் ஆனையிறவு முகாமைத் தாக்கினார்களா என்பதற்கும் எந்த விதமான சான்றும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை.

இந்த வழக்கில் எதிரியாக நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டுள்ளவர் வழங்கியதாகக் கூறப்படும் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் உண்மையான தகவல்களைக் கொண்டுள்ளதா என்பதைக் கூட பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு புலனாய்வு செய்து சாட்சியங்களைத் தேடவில்லை.

எனவே, விடுதலைப்புலிகளின் ஓயாத அலைகள் தாக்குதல் அணியில் இணைந்திருந்த எதிரி, 2000 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22, 23 ஆகிய இரண்டு தினங்களில் ஆனையிறவு இராணுவ முகாமைத் தாக்கினார் என்றோ அல்லது இராணுவமுகாம் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டது என்றோ இந்த நீதிமன்றத்தைத் திருப்திப் படுத்தக்கூடிய, சுதந்திரமான எந்த சாட்சியங்கள் எதுவும் வழக்குத் தொடுநரினால் முன்வைக்கப்படவில்லை.

எனவே நாகமணி தெய்வேந்திரன் வழக்கில் தீர்ப்பளித்துள்ள நீதியரசர்கள் மூவரும், குற்ற ஒப்புதல் வாக்குமூலமானது , சுயாதீனமானதாக இருக்க வேண்டும். குற்றச் செயல் உண்மையாக நடந்ததாக இருக்கவேண்டும். வேறு சான்றுகள் மூலம் சம்பந்தப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் ஒப்புறுதி செய்யப்பட வேண்டும். இந்த விடயங்கள் நியாயமான சந்தேகத்திற்கப்பால் நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட வேண்டும் என தெரிவித்துள்ளனர்.

எனவே, இந்த வழக்கில் எதிரி 2000 ஆம் ஆண்டு ஏப்ரல் 22, 23 ஆம் திகதிகளில் ஆனையிறவு இராணுவ முகாமைத் தாக்கினார் என்பதை வழக்குத் தொடுநர் நியாயமான சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்கத் தவறியிருப்பதனால் எதிரியை இந்தநீதிமன்றம் விடுதலை செய்து தீர்ப்பளிப்பதாக தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டிருந்த கடைசி வழக்கும் இத்துடன் முடிவடைந்துள்ளாக வழக்கின் முடிவில் தீர்ப்பளித்ததன் பின்னர் நீதிபதி தெரிவித்துள்ளார். (இ-9)




# ராணுவத்துக்கு காணிகளை மக்களே விற்க வேண்டாம்

## மாகாண சபை உறுப்பினர் மன்றாட்டம்

(யாழ்ப்பாணம்)

இராணுவம் உள்ளிட்ட படையினருக்கான முகாம்களை அமைப்பதற்காக உங்கள் காணிகளை எந்த விதத்திலும் அரசிடம் விற்க வேண்டாம் என மிகவும் வினயமாகக் கேட்டுக்கொள்வதுடன், எமது இனத்தின் எதிர்கால இருப்பைச் சிதைக்கும் வேலைகளை ஊக்குவிக்க வேண்டாம் எனவும் மிகவும் மன்றாட்டமாக கேட்டுக்கொள்கின்றேன் என வடக்கு மாகாணசபை உறுப்பினர் பாலச்சந்திரன் கஜதீபன் தெரிவித்துள்ளார்.

போர் முடிவுற்று பல ஆண்டுகள் ஆன பின்பும் நாட்டில் சமாதானம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகச் சொல்லப்படும் இந்நாட்களில் கூட எமது மக்கள் அகதிகளாக முகாம்களிலும் உறவினர் வீடுகளிலும் தங்கி யுள்ளனர். இந்நிலையில் இராணுவ முகாம்கள் அமைப்பதற்காக மக்களின் காணிகள் இராணு வத்தினராலும், அரசாங்கத்தினராலும் முன்னரும் அபகரிக்கப்பட்டு வந்தன.

இந்நிலையில் ஆட்சி மாற்றத்தின் பின் தமது காணிகள் விடுவிக்கப்படும் என மக்கள் பெரிதும் எதிர்பார்ப்புக்களைக்கொண்டிருந்த நிலையில் நல்லாட்சி என்ற போர்வையில் நடைபெறுகின்ற ஆட்சியில் மீண்டும் மக்களின் காணிகளை அபகரிக்கும் முயற்சிகள் மெதுவாகத் தலைதூக்கியுள்ளன.

கீரிமலை, சேந்தாங்குளத்தில் அண்மையில் கடற்படை முகாம் விஸ்தரிப்புக்காக தேவாலய காணிகளை அபகரிக்கும் முயற்சி மக்களின் எதிர்ப்பினால் முறியடிக்கப்பட்டது. அதேபோல நேற்று முன்தினம் வியாழக்கிழமையன்று சுழிபுரம் திருவடிநிலை கடற்கரை பகுதியில் மக்களின் காணியில் அமைந்துள்ள கடற்படை முகாமுக்கு, அக்காணியை நிரந்தரமாக சுவீகரிக்கும் நோக்குடன் நில அளவையில் ஈடுபட முயன்றபோது, அப்பகுதி கடற்றொழிலாளர்கள் ஒன்றுதிரண்டு தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தியுள்ளனர்.

ஆனால் படையினரது ஆசைப் பேச்சுக்களுக்கு மயங்கியோ அல்லது பயமுறுத்தல்களுக்குப் பயந்தோ தமது பூர்வீக காணிகளை இராணுவ முகாம்களை அமைக்க விற்க சம்மதம் தெரிவித்து வரும் விரும்பத்தகாத அதிர்ச்சி தரும் சம்பவங்கள் அரங்கேறத் தொடங்கியுள்ளன. சுழிபுரம் திருவடிநிலை கடற்படைமுகாம் அமைந்துள்ள காணியின் உரிமையாளர்களில் ஒருசிலர் பல்வேறுபட்ட அழுத்தங்கள், சலுகைகள் மத்தியில் கடற்படைக்கு காணி வழங்க சம்மதித்துள்ளதாக அறிய முடிகின்றது. இது மிகவும் அபாயகரமான ஒன்றாகும் என அவர் மேலும் வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ-5)

# அனுமதி பெற்று கட்டடங்களை அமைக்குமாறு கோரிக்கை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபைக்கு உட்பட்ட பகுதிகளில் கட்டடங்கள், எல்லைச்சுவர்களை அமைப்போர் நகராட்சி மன்றத்தில் உரிய அனுமதியைப்பெற்று கட்டுமாறு நகராட்சி மன்ற செயலாளர் கா.சண்முகதாசன் பகிரங்கமாக கோரிக்கை விடுத்துள்ளார்.

எமது பிரதேசத்தில் உள்ள 90 வீதமான மக்கள் நகர சபையில் உரிய அனுமதிகளை பெற்றே கட்டடங்களை கட்டுகின்றனர்.

இருந்த போதும் ஒரு சிலர் அனுமதி இன்றி உரிய அளவுப் பிரமாணங்களை பின்பற்றாமல் கட்டடங்கள் மற்றும் மதில்களை அமைக்கின்றனர்.

இதனால் நகர சபையால் அபிவிருத்தி திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்ற போது குறிப்பாக வீதி புனரமைப்பின் போது பல்வேறு இடர்களுக்கு முகம்கொடுத்து உரிய அனுமதி மற்றும் அளவு பிரமாணங்களில் அமைக்காத மதில்களை இடித்து அகற்ற வேண்டிய நிலையேற்படுகின்றது.

இது நகரசபைக்கும் மக்களுக்குமான நல்லுறவில் விரிசலை ஏற்படுத்தக்கூடியதாக அமைந்துவிடுகின்றது. அதுமட்டுமல்லாமல் அனுமதி பெறாமல் மலசலக்குழிகளை அமைக்கின்ற போது அருகில் உள்ள கிணறு மற்றும் நீர் நிலைகள் தொடர்பில் அவதானம் செலுத்தப்படுவதில்லை. இதனால் நீர் மாசடைந்து சுகாதாரச் சீர்கேடுகளும் இடம்பெற வாய்ப்புள்ளன.

எனவே இவ்வாறான விடயங்களை தவிர்க்க வேண்டுமானால் இனிவரும் காலங்களில் பொதுமக்கள் நகராட்சி மன்றத்தில் உரிய கட்டட அனுமதியைப் பெற்று கட்டடங்களை அமைக்குமாறும் இதனால் பொதுமக்களே அதிக நன்மையடைவர் என்றும் இனியும் அனுமதி பெறாமல் யாராவது கட்டடங்களை அமைப்பது கண்டுபிடிக்கப்பட்டால் அவர்களுக்கெதிராக நீதிமன்றத்தின் ஊடாக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் நகரசபை செயலாளர் விடுத்துள்ள பகிரங்க கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(இ-89)



யாழ். கொக்குவில் ஸ்ரீஞான பண்டித வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்ற போது....

# உடுவேதேரரின் கைது கவலையளிக்கின்றது

## அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவிப்பு



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் உடுவே தம்மாலோக தேரர் கைது செய்யப்பட்டுள்ளமை தனக்கு கவலையளிப்பதாக உயர்கல்வி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார். உடுவே தம்மாலோக தேரரின் கைது தொடர்பாக நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் விமல் வீரவன்ச மீண்டும் கேள்வியெழுப்பினார்.

இது தொடர்பான வினாவுக்கு நேற்று முன்தினம் பதிலளிப்பதாக ஆளுங்கட்சி சார்பில் உறுதியளிக்கப்பட்டதை நினைவூட்டிய அவர், உடுவே தேரர் கைது குறித்து ஆளுங்கட்சி சபையில் விளக்க மொன்றை அளிப்பதாக உறுதியளிக்கப்பட்டது. ஆனால் உடுவே தம்மாலோக தேரர் மட்டுமன்றி, இன்னும் பல பிக்குமாரும் இந்த அரசாங்கத்தினால் கைது செய்யப்பட்டு சிறைச்சாலைக்கு அனுப் பப்பட்டுள்ளனர் என்று சுட்டிக்காட்டினார்.

இதற்குப் பதிலளித்த ஆளுங்கட்சியின் முதல்வரும், உயர்கல்வி அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல, இது நீதிமன்ற வழக்கு தொடர் பான விவகாரம். அது குறித்து ஏதேனும் கருத்து வெளியிட்டால் உடுவே தம்மாலோக தேரரை அவமதித்தது போலாகிவிடும். எனவே அதுகுறித்து பேசாமல் இருப்பதே சிறந்தது என்று பதிலளித்தார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் கிரியெல்ல, உடுவே தேரர் விவகாரம் நீதிமன்றத்தில் உள்ளது. எனினும் அவர் கைது செய்யப்பட்டிருப்பது எனக்குப் பெருங்கவலை அளித்துள்ளது. ஆனால் நீதிமன்ற விவகாரத் தில் நாம் தலையிட முடியாது என்றும் தெரிவித்துள்ளார். (இ-5)

எனினும் மீண்டும் குறுக்கிட்ட விமல் வீர வன்ச, உடுவே தேரர் கைது செய்யப்பட்டிருப் பதுதான் அவருக்கு மேற்கொள்ளப்பட்டுள்ள பாரிய அவமானமாகும். எதிர்வரும் நாட்க ளில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கிக் கொள்ள அரசாங்கம் உத்தேசித்துள்ளது. அதன் பின்னர் பாரிய குற்றச் செயல்களில் தொடர்புடைய குற்றவாளிகள் இலகுவாகத் தப்பித்துக் கொள்வார்கள் என்றும் குற்றம் ச்சாட்டியுள்ளார்.

## இலங்கையில் கனிய எண்ணெய் அகழ்வு ஆராய்ச்சியில் அமெ.நிறுவனங்கள் ஆர்வம்

இலங்கையில் கனிய எண்ணெய் அகழ்வு செய்ய முடியுமா என்பது குறித்து ஆராய்வதற்கு இரண்டு அமெரிக்க நிறுவனங்கள் ஆர்வம் காட்டி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உலகின் முதல் நிலையான இரண்டு அமெரிக்க நிறுவனங்களே இவ்வாறு விருப்பம் வெளியிட்டுள்ளன.

எக்சொன் மொபில் மற்றும் லெம்பர்ட் ஒயில் ஆகிய நிறுவ னங்களே இவ்வாறு இலங்கையில் கனிய எண்ணெய் அகழ்வு குறித்த ஆய்வுகளில் ஈடுபட விருப்பம் வெளியிட்டுள்ளன.

இதேவேளை, கிழக்கு கடற்கரைப் பகுதியில் ஏற்கனவே பிரான்ஸ் நிறுவனமொன்று கனிய எண்ணெய் வள ஆய்வுகளை மேற்கொள்ள ஒப்பந்தம் கைச்சாத்திட்டுள்ளது.

கனிய எண்ணெய் அகழ்வு ஆய்வு தொடர்பில் விரை வில் இலங்கைக்கும் அமெரிக்காவிற்கும் இடையில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதேவேளை, இலங்கை கனிய எண்ணெய் வள ஆய்வுகள் குறித்து இந்தியாவும் சீனாவும் ஆர்வம் காட்டி வருகின்றமை குறிப்பிடத் தக்கது. (இ-5)


## தேவை

அரிசி ஆலையில் வேலை செய்வதற்கு வேலையாட்கள் தேவை. சாப்பாடு, தங்குமிட வசதிகள் உண்டு. (ஆண், பெண் இருபாலாருக்கும்)

(3827) **இராசம் அரிசி ஆலை, சுன்னாகம்.**

## தேவை

கொழும்பு பம்பலப்பிட்டியில் சுகயீனமுற்ற வயோதிபப் பெண்ணொருவரைப் பராமரிப்பதற்கு ஓய்வுபெற்ற தாதி மற்றும் வீட்டு சமையல் பார்க்கக்கூடிய பெண்ணொருவரும் தேவை. தங்கியிருப்பதற்கு இட வசதி உண்டு. தகுதிக்கேற்ப சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

(3817) **தொடர்புகளுக்கு-மனோகரன்-011 255 5571**
**மோகன்- 021 225 1457, 075 053 2761**

## நூல் வெளியீட்டு விழா அழைப்பு



**திரு.ஜெ.சத்தியேந்திரன்-J.P.**
**NDT Agriculture**
**சிரேஷ்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்**
எழுதிய
"நவீன தென்னைச் செய்கை"
"Modern coconut cultivation"

அன்புடையீர்!

இடம்: தியாகி அறக்கொடை நிறுவன மண்டபம், 527 நாவலர் வீதி,யாழ்ப்பாணம்.
காலம்: 13.3.2016 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம்: காலை 9.30 மணி
தலைவர்: திரு.தே.வைகுந்தன் பிராந்திய முகாமையாளர், தென்னைப்பயிர்ச் செய்கைச் சபை, யாழ்ப்பாணம்.

### பிரதம விருந்தினர்கள்

திரு.N.வேதநாயகன்
அரசாங்க அதிபர்,
யாழ்ப்பாணம்.

திரு.கபில யகண்டவல
தலைவர்,தென்னைப் பயிர்ச்செய்கை சபை, கொழும்பு.

### சிறப்பு விருந்தினர்கள்

திரு.K.D.L.தர்மசிறி
பொது முகாமையாளர்,
தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை
கொழும்பு.

திரு.சி.சிவகுமார்
மாகாணப் பணிப்பாளர்,
விவசாயத் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

### நிகழ்ச்சி நிரல்

இறைவணக்கம்
மங்கல விளக்கேற்றல்
வரவேற்புரை: திரு.க.தனிநாயகம், (ஓய்வுநிலை தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்)
வரவேற்பு நடனம்:
ஆசியுரை:
தலைமையுரை:
வில்லுப்பாட்டு:"நவீன தென்னைச் செய்கை" AVM வில்லிசைக் குழு கொடிகாமம்.
நூல் அறிமுகம்: "நவீன தென்னைச்செய்கை" திரு.ஜெ.சத்தியேந்திரன் J.P. (சிரேஷ்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்-நூல் ஆசிரியர்)

### நூல் வெளியீட்டு நிகழ்வு

ஆவணப் பத்திரிகை பதிவேடு கையளித்தல் நிகழ்வு
கௌரவ, சிறப்பு, பிரதம விருந்தினர்கள் உரை
மதிப்பீட்டு உரை:
நூலாசிரியர் ஏற்புரை: திரு.ஜெ.சத்தியேந்திரன் J.P. (சிரேஷ்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்)
நன்றியுரை: திரு.S.ஜெயநாதன், (சிரேஷ்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்)

**நூல் ஒன்றின் விலை: 1000/-**

இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று இந்நிகழ்வில் தென்னைச் செய்கையாளர்கள் உட்பட அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**விளம்பர அனுசரணை: ஸ்ரீரங்கன் என்ரபிறைசஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.** (3820)

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர் நவரத்தினராசா
தங்கராணி
பிறப்பு 21.06.1952
இறப்பு 22.02.2015
திதி:- பூர்வபக்க சதுர்த்தி 12.03.2016

அகல் விளக்காய் ஒளிதந்து
ஆலமரம் போல் தழைத்தோங்கி
இகமதில் செழிப்பாய் வாழ்வதற்கு
ஏகையுடன் வழியமைத்த தெய்வமே
ஆண்டொன்று ஆனாலும் ஆறாதம்மா
எம் துயரம்.

பளை (வறாத்துப்பளை) (3845)
நினைவுடன் குடும்பத்தினர் (சிந்து)

## தேவை

உள்ளூர் இன ஆடுகள், குட்டிகள், மாட்டுக்கன்றுகள்,தோட் வேலைசெய்வதற்கு ஆள் ஆகியன முல்லைத்தீவு பகுதிக்கு தேவை.

தொடர்பு இல: (இ-3947)
0771681697
0768825467


## இராசி பலன்

12.03.2016
(மாசி 29, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.20 மணிக்கு
சதுர்த்தசி முன்னிரவு 11.10 மணிவரை
அச்சுவினி மாலை 5.49 மணிவரை
சுபநேரம் 3.22-4.52 மணிவரை
இராகுகாலம் 9.22-10.52 மணிவரை

**வளவன்**

| | | | |
|---|---|---|---|
| | சந் | | |
| சூரி, புத சுக், கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் உத்தரம், அத்தம் | | |
| | | | குரு ராகு |
| | சனி செவ் | | |

**மேடம்:** தேகநலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், எதிர்பாராமல் செய்த வேலையொன்றில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம், பணியில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம்.

**இடபம்:** சுபகாரியச் செலவுகள் ஏற்படலாம், பக்குவமாகப் பேசி காரியங்களைச் சாதிக்க வேண்டிய நாள், குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**மிதுனம்:** மற்றவர்கள் பாராட்டும் வகையிலான காரியமொன்றைச் செய்து காட்டுவீர்கள், தன வரவுகள் திருப்திகரமாக அமையும், குடும்ப மகிழ்ச்சி கூடும்.

**கடகம்:** குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், தொட்ட காரியங்களில் வெற்றி பெறுவீர்கள், தூரதேசத் தகவல்கள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**சிம்மம்:** சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், பயணங்களால் பலனுண்டு, வருங் காலத்திற்கான புதிய திட்டமொன்றைத் தீட்டுவீர்கள்.

**கன்னி:** எடுத்த காரியத்தை முடிக்க அதிக பிரயாசை எடுக்கும் சூழ்நிலை உருவாகும், குடும்ப பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறைகண்டு கூறலாம்.

**துலாம்:** குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், பயணங்களால் பலனுண்டு, சந்தித்தவர்களால் சந்தோசமுண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**விருச்சிகம்:** பொதுவாழ்வில் புகழ்கூடும், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், பயணங்களால் பலனுண்டு, முயற்சிகளில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**தனுசு:** கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, இனிய தகவல்கள் வந்து சேரலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மகரம்:** பிறருக்காக எடுத்த முயற்சிகள் கைகூடும், செவிகுளிரும் செய்திகள் வந்து சேரலாம், அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் தேடி வரலாம்.

**கும்பம்:** நீண்ட நாளைய பிணக்குகளில் திசைதிருப்பம் ஏற்படலாம், குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள், தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும்.

**மீனம்:** பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், இறை வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

# அறுவடை நெல்லை காயவிடுவதற்கு தளமின்மையால் நெல்லுடன் வீதிகளில் படுத்துறங்கும் விவசாயிகள்

## அதிகாரிகளை நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை



முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது அறுவடை செய்யப்பட்டு வரும் நெல்லை பரவி காயவிடுவதற்கு தளங்கள் அமைக்கப் படாமையால் தாம் வீதியில் காயவிட்டு அவ்விடத்தில் படுத்துறங்குவதாக பாதிக்கப்பட்ட விவசாயிகள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில், முல்லைத்தீவு மாவட்டமானது கடந்தகால யுத்தத்தினால் பாரிய அழிவை சந்தித்து மீண்டெழுந்து வரும் மாவட்டமாகும்.

இந்நிலையில் பாரியளவில் அபிவிருத்தி காண வேண்டிய முல்லைத்தீவு மாவட்டத்தில் தாம் வீதிகளில் படுத்துறங்கும் நிலை ஏறபட்டுள்ளது. எனவே உரிய அதிகாரிகள் இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் பிரதான தொழில விவசாயமாக காணப்படுகிறது. இந்த விவசாயத்தனை மேற்கொள்ளும் விவசாயிகள் சொல்லொணா துன்பங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

குறிப்பாக நெல்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் பாரிய கஷ்டங்களின் மத்தியில் வங்கிகளில் கடன்பட்டுநகைகளை அடைவுவைத்து நெற்செய்கைய்ய மேற் கொண்டு வரும் நிலையில் அவர் களது வயல் நிலங்களை இயற்கை அழித்தது ஒருபுறமாக இருக்க மறுபுறம் காட்டு யானைகள் வயல் நிலங்களை அழிக்கின்றன. பெரிதும் துன்பப்பட்டு காப்பாற்றி எடுக்கின்ற நெல்லினை உரியவிலையில் விற்க முடியாத திண்டாட்டம் இன்னொரு புறம். அறுவடைசெய்த நெல்லினை காயவைத்து உரிய விலைக்கு விற்பதற்கு நெல்லுகாய விடக்கூடிய இடம் முல்லைத்தீவு மாவட்டத்தில் பெரிதாக இல்லை. இதனால் விவசாயிகள் வீதியில் கொண்டு வந்து நெல்லினை பரவி காயவிட்டு வெயிலில் தாங்களும் காய்ந்து அந்த இடத்திலிருந்து நெல்லைகாய விட்டு எடுத்து செல்லும்வரை இரவு பனியிலுமவீதியில் படுத்துறங்க வேண்டியுள்ளது. மேலும் நெல்லினை காய வைத்து எடுத்து சென்றும் நெல்லினை உரிய விலைக்கு விற்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்

இவ்வாறு வீதியில் நெல்லினை காயவிடுவது வீதியால் செல்பவர்களுக்கு இடையூறாகவும் வீதி விபத்துக்களுக்கு காரணமாகவும் அமைகிறது.

எனவே இந்த அவல நிலையினை கருத்தில் கொண்டு காட்டு யானைகளை கட்டுப்படுத்த முயற்சி எடுப்பதோடு நெல்லினை பரவி காய விடுவதற்கான தளங்களை அமைத்து தந்தும் உரிய காலத்தில் விளைகின்ற நெல்லினை நியாய விலையில் கொள்வனவு செய்து விவசாயிகளின் வாழ்வை மேம்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வரவேண் டுமென பாதிக் கப்பட்ட விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-3-281)

# 'சாதிக்கும் சந்ததி' செயற்றிட்டத்தின் மூலம் மன்னாகண்டல் மாணவர்கள் பயன்பெறுவர்

## வடமாகாண சபை உறுப்பினர் ரவிகரன்



முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் உள்ள மன்னாகண்டல் கிராமத்தில் மக்கள் குறைகேள் சந்திப்பொன்று கடந்த வாரம் நடைபெற்றது.

அக்கிராமத்தின் இளைஞர்களால் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கமைய மேற்கொள்ளப்பட்ட இச்சந்திப்பில் கலந்து கொண்ட மகள் தம் கிராமத்தில் உள்ள பல்வேறு குறைகளையும் முன்வைத்தனர்.

தொலைதூரத்தில் பாடசாலை பேருந்து போக்குவரத்தில் உள்ள சிரமம், புனரமைப்பற்ற மைதானம், முன்பள்ளியின் மந்த கதிச் செயற்பாடு,மின்னிணைப்பற்ற வீடுகள என பல்வேறுபட்ட குறைகளை மக்கள் சந்திப்பில் முன்வைத்தனர்.

இம்மக்களின் குறைகளுக்கு வடக்குமாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் பதிலளிக்கையில்.

மாணவர்களின் கல்வி ஊக்குவிப்பை நோக்காகக்கொண்டு தாயகத்தில் முன்னெடுத்துவரும் 'சாதிக்கும் சந்ததி' செயற்றிட்டத்தின் ஊடாக மன்னாகண்டலில் இருந்து பேராறு மற்றும் கற்சிலை மடுவில் உள்ள பாடசாலைகளுக்குச்செல்லும் மாணவர்களும் இனி வரும் காலங்களில் உள்வாங்கப்படுவர் என்று தெரிவித்தார்.

மேலும் விளையாட்டு உபகரணங்கள் உட்பட இக்கிராமத்தின் வளர்ச்சிக்காக தனது 2016 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதியொதுக்கீட்டில் இருந்து எழுபத்தைந்தாயிரம் ரூபாவை ஒதுக்குவதாகவும் மின்சார இணைப்புகளை முழுமைப்படுத்துவது தொடர்பாகவும் முன்பள்ளி மற்றும் மாணவர் போக்குவரத்து வசதி குறித்தும் சம்பந்தப்பட்டவர்களுடன் 'தொடர்புகொள்வதாகவும் அவர் உறுதியளித்தார். (2-3-281)




# ஆயுர்வேத மசாஜ் நிலையம் மீது இனந்தெரியாத நபர்கள் தீவைப்பு

வவுனியா, நெளுக்குளம் பகுதியில் அண்மையில் திறக்கப்பட்ட ஆயுர்வேத மசாஜ் நிலையம் மீது இனந்தெரியாதநபர்கள் கடந்த 7 ஆம் திகதி இரவு தீ வைத்துள்ளனர்.

வவுனியா, நெளுக்குளம், குளுமாட்டுச்சந்திப் பகுதியில் உள்ள மதுபானசாலை அருகாமையில் புதிதாக திறக்கப்பட்ட மசாஜ் நிலையம் தொடர்பில் பலரும் எதிர்ப்பு தெரிவித்திருந்த நிலையில் இனந்தெரியாத நபர்களால் தீ வைக் கப்பட்டுள்ளது. இதனால் மசாஜ் நிலையத்தின் கதவுகள், கதிரைகள் என்பன தீயில் எரிந்துள்ளன.

குறித்த நிலையம் எரிவதைக் கண்டவர்கள் பொலிஸாருக்கு தகவல் கொடுத்ததையடுத்து தீ வேகமாக பரவாது கட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. இது தொடர்பான விசாரணைகளை நெளுக்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, குறித்த நிலையததை அகற்ற வேண்டும்என சமூக ஆர்வலர்கள் பலரும் கோரி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(2-3-250)

# ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய பொதுக்கூட்டம்

கரைச்சிப் பிரதேச அரச ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 15ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு கரைச்சிப் பிரதேச செயலக ஒன்றுகூடல் மண்டபத்தில் தலைவர் அ.கனகரத்தினம் தலை மையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக கரைச்சி பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் சிறப்பு விருந்தினர்களாக கரைச்சி உதவிபிரதேசசெயலர் சிவகாமி உமாகாந்தன், கரைச்சி உதவித் திட்டப்பணிப்பாளர் ச.பி. அமல்ராஜ், கரைச்சி பிரதேச செயலக கணக்காளர் ப.லுரேந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். அன்றைய தினம் மேற்படி நிதிய நிர்வாக உறுப்பினர்கள் தெரிவும் நடைபெறவுள்ளது. ஓய்வூதியம் பெறுபவர்களின் கௌரவத்தைப் பேணி உதவிசெய்வதும் அவர்களின் மேம்படுத்தலுக்கும் உதவும் இச்சங்க வளர்ச்சிக்கு மேலும் வலுச்சேர்க்கும் வகையில் கரைச்சி பிரதேச அனைத்து ஓய் வூதியர்களையும் தவறாது பங்குபற்றுமாறு தலைவர் , செயலாளர் ஆகியோரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (2-3-254)

# வவுனியாவில் இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித் திட்டம்



(பனிக்கன்குளம்)

வவுனியா மாவட்டத்தில் உள்ள இளைஞர், யுவதிகளுக்கான தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித் திட்டம் நேற்று கனகராயன்குளம் பண்டிதமணி கணபதிப்பிள்ளை மகா வித்தியாலய வளாகத்தில் இடம் பெற்றது.

வவுனியா வடக்கு பிரதேச செயலகம் மற்றும் உலக கனேடிய பல்கலைக்கழகம், கிராம அபிவிருத்தி நிறுவனம் என்பவற்றினால் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

தொழில் வாய்ப்புகளைத் தேடும் இளைஞர்.யுவதிகளுக்கு விளையாட்டு நிகழ்வுகளூடாக தொழிலின் முக்கியத்துவம் தொடர்பான விழிப்புணர்வு செயற்றிட்டம் இதன்போது முன்னெடுக்கப்பட்டது.

இந்த நிகழ்வில், வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் க.பரந்தாமன், பிரதேச செயலக ஊழியர்கள், அரச சார்பற்ற நிறுவன ஊழியர்கள், மகளிர் அமைப்புகளின் பிரதிநிதிகள், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது மகளிர்களுக்கான ஆற்றல் மேம்பாட்டு நிகழ்ச்சிகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (2-311-281-250)

# சொந்த நிலத்தில் எங்களைக் குடியமர்த்துங்கள் அவற்றைக் கொண்டு நாங்கள் முன்னேறுவோம்

## கேப்பாபிலவு மக்கள் மஸ்தான் எம்.பியிடம் வேண்டுகோள்



முல்லைத்தீவு மாவட்டத்தின் கேப்பாப்பிலவு கிராம மக்களின் காணிகள் இராணுவத்தினரால் மக்களிடம் கையளிக்கப்படாததால் மக்கள் மாதிரி கிராமத்தில் வசித்து வருகின்றனர். இந்நிலையில் அம் மக்கள் அனுபவித்து வரும் சொல்லொணா துன்பங்களை அறியும் நோக்குடன் அண்மையில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் மக்கள் சந்திப்பொன்றை ஏற்பாடு செய்து மக்களிடம் குறைகளை கேட்டறிந்தார்

இச்சந்திப்பின் இறுதியில் கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர்.

மக்கள் தமது சொந்தக் காணியில் குடியமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் இன்னும் பல பிரச்சினைகள் தொடர்பாகவும் தமது கோரிக்கைகளை முன்வைத்திருக்கின்றனர்.இந்த பிரச்சினைகளை உரியவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று தீர்வு பெற்றுத் தருவதாக அவர் தெரிவித்தார்.

அங்கு பொதுமக்கள் கருத்து தெரிவிக்கையில் ,

ஒவ்வொருவரும் ஐந்து பத்து ஏக்கர் என சொந்த நிலங்களை இராணுவத்தினரிடம் பறி கொடுத்து விடு சிறியதொரு காணித் துண்டில் சொல்லொணா துன்பங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றோம். வீட்டுக்கொரு கிணறு இருந்தது. எங்களுக்கு தற்போது 250 குடும்பங்களுக்கு எட்டு கிணறுகளே இருக்கின்றன. இதனால் பல சிக்கல்களுக்கும் நோய்த் தொற்றுக்களுக்கும் முகம் கொடுத்து வருகிறோம்

எங்களுக்கு வாழ்வாதாரம்எவையும் இல்லை. வாழ்வாதாரத்தை மேம்படுத்துங்கள் எம்மை சொந்த இடத்தில் குடியமர்த்துங்கள். எங்களுக்கு விவசாய,நிலங்கள் வயல் நிலங்கள்உள்ளன. நாம்அவற்றைக் கொண்டு முன்னேறுவோம்.

கால்நடைகள்உண்டு. அவற்றை மேய்ப்பதற்கான மேய்ச்சல் தரவை இல்லை. பாடசாலை மாணவர்களுக்கு ஒழுங்கான பேருந்து சேவைகள் இலலை. இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்பில்லை. இதனால் பல்வேறு பட்ட தீய பழக்க வழக்கங்களில் ஈடுபடுகின்றனர். இவற்றை தீர்த்து வைக்க நடவடிக்கை எடுக்குமாறு பாராளுமன்ற உறுப்பினரிடம் கோரியுள்ளோம் என அவர்கள் தெரிவித்துள்ளனர். (2-3-281)

# மது அருந்துபவர்களுக்கு சுயநினைவு இல்லை என்று கருதுவதை மதுப்பிரியர்கள் சாதகமாக்கி கொள்கின்றனர்

## மதுபாவனை சார்ந்த வன்முறைகள் தொடர்பான ஆய்வில் சுட்டிக்காட்டு

**மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையத்தினால் தமிழ் மக்கள் செறிந்து வாழும் மாவட்டங்களில் மதுபாவனை சார்ந்த வன்முறைகள் தொடர்பான ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த ஆய்வறிக்கை வெளியீட்டு நிகழ்வு மாங்குளம் வடக்கு மாதர் சங்கக் கட்டடத்தில் கடந்த 7 ஆம் திகதி நடைபெற்றது. இந்த ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,**

இலங்கையில் மதுசார பாவனையினால் ஏற்படும் பிரச்சினைகள் பல இருந்தாலும், அதில் பிரதான இடத்தில் இருப்பது மதுசார பாவனை சார்ந்த வன்முறைகள் ஆகும். மதுசார பாவனையாளர்கள் அனைவரும் மதுப்பாவனையின் பின்னர் வன்முறைகளில் ஈடுபடுவதில்லை. அதே நேரம் வன்முறையில் ஈடுபடுபவர்களும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றாற் போல் மாறுகின்றனர். அதாவது மதுசாரம் அருந்திவிட்டு பலம் வாய்ந்த ஒருவரிடம் அடங்கி போகும் அதே நபர், அப்பாவித்தனமுடைய ஒருவரிடம் சண்டையிடுகின்றார்.

மேலும் மதுசாரமானது உடலில் கனத்தாக்கங்கள் கடத்தப்படும்வேகத்தை குறைக்கும் அதேவேளை, மதுசாரத்தில் அடங்கியிருக்கும் இரசாயனத்திற்கு எந்த வித உணர்வுகளையும் தூண்டக்கூடிய சக்தி இல்லை என்பதும் விஞ்ஞான ரீதியாக நிருபிக்கப்பட்டுள்ளது. மதுசார பாவனையாளர்களின் நடத்தைகளுக்கு சில பெண்கள் எதிர்ப்பினை வெளிப்படுத்துகின்றனர். ஆனால் சில பெண்கள் அவ்வாறு எதிர்ப்பினை வெளிப்படுத்துவதற்கு தயங்குகிறார்கள். பிரதிபலிப்புக்களின் தன்மையை பொறுத்தே மதுசாரம் அருந்தியதன் பின்னரான வன்முறைகள் தீர்மானிக்கப்படுகின்றன.

மேற்குறிப்பிட்ட அனைத்து விடயங்களையும் கருத்திற் கொண்டு, மதுசார பாவனையின் பின்னர் சுயநினைவுடன் செயற்படுகிறார்களா? இல்லையா? என்ற விடயம் தொடர்பாக எந்தளவான அறிவு மட்டம் காணப்படுகின்றது என்ற விடயத்தினையும், மதுசார பாவனையாளர்கள் மதுசாரத்தை காரணமாக வைத்து வன்முறைச் சம்பவங்களில் ஈடுபடும் போது அதற்கு எதிர்ப்பினை வெளிப்படுத்துபவர்களின் அளவையும் அறிந்து கொள்வதே இந்த ஆய்வின் இலக்காகும்.

தமிழ் பேசும் மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களான மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், திருகோணமலை, வவுனியா, கண்டி, நுவரெலியா, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் 18 - 35 வயதிற்கிடைப்பட்ட தலா 100 பெண்களிடமிருந்து தகவல்கள் திரட்டப்பட்டன. இதில் ஆய்வு முறையாக வினாக்கொத்து ஆய்வு முறை பயன்படுத்தப்பட்டது. ஆய்விற்குட்படுத்திய பெண்களின் விபரம் பின்வருமாறு,

- ◆அரச உத்தியோகத்தர்கள்-20
- ◆தனியார் நிறுவனாங்களில் பணிபுரிபவர்கள்- 20
- ◆எந்தவிதத் தொழிலிலும் ஈடுபடாத வீட்டிலிருக்கும் பெண்கள்- 60

மதுசாரம் அருந்துபவர்கள் அருந்தியதன் பின்னர் சுயநினைவுடன் செயற்படுகின்றார்கள் என்று 32வீதத்தினரும் நினைவுடன் செயற்படவில்லையென்று 60வீதத்தினரும் இது தொடர்பில் 8வீதத்தினர் எந்தவித கருத்தையும் தெரிவிக்கவில்லை.

மதுசாரம் அருந்துபவர்கள் அருந்திய பின்னர் சுயநினைவுடன் செயற்படுகின்றார்கள் என்பதனை 36வீதத்தினர் விழிப்புணர்வுகள் மூலமும், 36வீதத்தினர் அயலவர்களின் மூலமும், 7வீதத்தினர் தொழில் புரியும் இடத்திலிருந்தும், 10வீதத்தினர் ஊடகங்களின் மூலமும், 11 வீதத்தினர் வேறு வழிகளிலும் கற்றுக் கொண்டுள்ளனர்.

மதுசாரம் அருந்துபவர்கள் அருந்தியதன் பின்னர் சுயநினைவுடன் செயற்படவில்லை என்பதனை 22வீதத்தினர் வீட்டிலுள்ளோர்களின் செயற்பாடுகளின் மூலமும், 44வீதத்தினர் அயலவர்களின் மூலமும் 7வீதத்தினர் தொழில் புரியும் இடத்திலிருந்தும் 22வீதத்தினர் ஊடகங்களின் மூலமும் 5 வீதத்தினர் வேறு வழிகளிலும் கற்றுக் கொண்டுள்ளனர்.

மதுசாரம் அருந்துபவர்கள் அருந்தியதன் பின்னர் வன்முறைகளில் ஈடுபடும் போது எதிர்ப்பினை வெளிப்படுத்துகிறார்கள். வெளிப்படுத்தும் பெண்கள் 34வீதமாகவும் எதிர்ப்பினை வெளிப்படுத்தாத பெண்கள் 60வீதமாகவும், இது தொடர்பில் கருத்து தெரிவிக்காத பெண்கள் 6 வீதமாகவும் ,காணப்பட்டனர்.

அரச நிறுவனாங்களில் தொழில் புரியும் பெண்கள் மதுசாரம் அருந்துபவர்கள் அருந்தியதன் பின்னர் சுயநினைவுடன் செயற்படுகின்றார்கள் என்று 51வீதத்தினரும், சுயநினைவுடன் செயற்படவில்லையென்று 33வீதத்தினரும், இது தொடர்பில் 16வீதத்தினர் எந்த வித கருத்தையும் தெரிவிக்கவில்லை.

அரச சார்பற்ற நிறுவனங்களில் தொழில் புரியும் பெண்கள் மதுசாரம் அருந்துபவர்கள் அருந்தியதன் பின்னர் சுயநினைவுடன் செயற்படுகின்றார்கள் என்று 57வீதத்தினரும் சுயநினைவுடன் செயற்படவில்லையென்று 29வீதத்தினரும், இது தொடர்பில் 14வீதத்தினர் எந்த வித கருத்தையும் தெரிவிக்கவில்லை.

தொழில் புரியாமல் வீட்டிலிருக்கும் பெண்கள் மதுசாரம் அருந்துபவர்கள் அருந்திய பின்னர் சுயநினைவுடன் செயற்படுகின்றார்கள் என்று 33 வீதத்தினரும், சுயநினைவுடன் செயற்படவில்லையென்று 64 வீதத்தினரும், இது தொடர்பில் 3வீதத்தினர் எந்தவித கருத்தையும் தெரிவிக்கவில்லை.

மதுசாரம் அருந்துபவர்கள் அருந்திய பின்னர் சுயநினைவின்றி செயற்படுகின்றார்கள் என 60வீதத்தினர் நம்பியிருக்கின்றனர் என்ற விடயம் ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. சமூகத்திலிருக்கும் மூட நம்பிக்கையினாலேயே மதுசாரம் அருந்துபவர்களுக்கு அதிகமான சலுகைகள் மற்றும் சமூக அங்கீகாரங்கள் கிடைக்கின்றன, இது பெண்களுக்கெதிரான வன் முறைகளை தூண்டுவதுடன் சமூகம் அதைப் பற்றி கண்டு கொள்ளாமல் இருப்பதோடு, அதற்கு எதிர்ப்பினை தெரிவிக்காமலிருக்கவும் இது வழி வகுக்கின்றது. மேற்குறிப்பிட்ட மூடநம்பிக்கையை சமூகம், ஊடகங்கள், வீட்டிலுள்ளவர்களின் நடத்தைகள் ஆகியவற்றின் மூலம் கற்றுக் கொள்கின்றனர் என்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

எனவே பின்வரும் விடயங்களை நடைமுறைப்படுத்தினால் மேற்குறிப்பிட்ட மூடநம்பிக்கையை சமூகத்திலிருந்து அகற்றலாம் என்பது இத்துறை சார்ந்தவர்களின் அனுபவ அறிவாகும்.

- ◆அனைத்து ஊடகங்களிலும் மதுசார பாவனையின் பின்னரான நடத்தை சுயநினைவுடனேயே செய்கின்றனர் என்ற விடயத்தையும் எமது சமூகத்தில் இருக்கின்ற அதிகமானவர்கள் குடிப்பவர்களுக்கு சுயநினைவில்லையென்று நினைப்பதை குடிப்பவர்கள் சாதகமாக பயன்படுத்தி தங்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்கின்றனர் என்ற விடயத்தினையும்வெளிக்கொணரவேண்டும்
- ◆ மதுசாரம் அருந்துபவர்களுக்கு சமூகத்தில் வழாங்கப்படும் விசேட சலுகைகள் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- ◆மதுசாரம் சார்ந்த வன்முறைகளின் போது பெண்கள் அதற்கான எதிர்ப்பினை வெளிப்படுத்துவதற்கு அவர்களை வலுப்படுத்த வேண்டும்.
- ◆ சமூகத்தில் மதுசார பாவனை தடுப்பு தொடர்பான நிகழ்ச்சிகளில் (சொற்பொழிவுகள், பயிற்சிகள், கலந்துரையாடல்கள், நாடகங்கள்) மதுசார பாவனையினால் சுயநினைவு இல்லாமல் போவதில்லை என்பதை பிரதிபலிக்க வேண்டும் ஆகிய முன்மொழிவுகள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. (3)

# வன்முறைகள் அற்ற பெண்களுக்கான சூழலை ஏற்படுத்த அனைவரும் ஒன்று திரளவேண்டும்

## கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவிப்பு










(திருமுறிகண்டி)

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் சர்வதேச பெண்கள் தினத்தை முன்னிட்டு நேற்று காலை 9மணியளவில் "பால்நிலை சமத்துவத்திற்கான முன்னெடுப்பு" எனும் தொனிப்பொருளில் நிகழ்வு ஒன்று கிளிநொச்சியில் நடைபெற்றது.

இந்நிகழ்வு கிளிநொச்சி காக்காகடைச் சந்தியில் இருந்து ஆரம்பமாகி ஊர்வலமாக பதாகைகள் ஏந்தியவாறு கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தை சென்றடைந்தது.

அங்கு நிகழ்வுகள், பல் வேறுபட்ட முயற்சிகளில் ஈடுபட்டு சிறந்த பெண்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள் ஆகியோரை கௌரவிக்கும் நிகழ்வும் நடைபெற்றது.

இந்த ஊர்வலத்தில் மாவட்ட அரச அதிபர், மேலதி அரச அதிபர், மேலதிக மாவட்ச்செயலாளர், மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகள், பெண்கள் என பெருந்திரளானவர்கள் கலந்து கொண்டிருந்தனர். இந் நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றினார். அவர்தனது உரையில்,

நடந்து முடிந்த யுத்தத்தின் பாதிப்புகள் வடக்கு கிழக்கில் அதிகளவு பெண்களை பாதித்துள்ள போதும் கிளிநொச்சி மாவட்டத்தில் அதன் பாதிப்பு மேலும் அதிகமாக காணப்படுகிறது. அதனால்தான் இந்த மாவட்டத்தில் 7ஆயிரத்து61 பெண் தலைமைத்துவ குடும்பங்களும் ஆயிரத்து 460 மாற்றுவலுவுள்ள பெண்களும்காணப்படுகின்றனர்

மேற்படி எண்ணிக்கையில் கிளிநொச்சி மாவட்டத்தில் பாதிப்புக்குள்ளான பெண்கள் இருப்பது இந்த மாவட்டத்திற்கு உள்ள மிகப் பெரிய பொறுப்பு இந்த தொகையில் யுத்தப் பாதிப்புக்குள்ளான பெண்களின்தொகையே அதிகம். எனவே இவர்களுக்கான பொருத்தமான வாழ்வாதார உதவி திட்டங்களை வழங்கி அவர்களின் பொருளாதார மேம்பாட்டுக்கு வழி சமைக்கும் வகையில் திட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம். இன்றைய நிலைமையில் பெண்கள் சமூகத்தில் ஒரு சமத்துவமான நிலையை அடைந்து கொண்டிருப்பதனை எம்மால்அவதானிக்க முடிகிறது. இருந்த போதிலும்பெண்களுக்கெதிரான வன் முறைகள் தொடர்ந்தும் சமூகத்தில் இடம் பெற்றுக்கொண்டிருக்கின்றன.

எனவே வன்முறைகள் அற்ற பெண்களுக்கான சூழல் ஒன்றை ஏற்படுத்த அனைவரும் ஒன்று திரண்டு செயற்பட வேண்டும். அத்தோடு அதிகரித்து வரும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிக்க ஆண்கள் அணி திரள வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். (2-311)

# மங்கையர்க்கரசியின் மறைவுக்கு இலங்கை தமிழரசுக்கட்சி அனுதாபம்

திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் வட்டுக்கோட்டைத் தொகுதிக்கு மட்டுமன்றி வட-கிழக்குத் தமிழ் பேசும் மக்கள் மத்தியிலும் தமிழ்த் தேசியம் கால்கொள்ள உதவிய பெருமைக்குரியவர். செல்வச் செழிப்பான குடும்பத்தில் பிறந்து தலைவர் அமிர்தலிங்கத்தைக் கைப்பிடித்த நாள் தொட்டு ஊணுறக்கமின்றி தமிழ்த் தேசியத்தை வட-கிழக்கு மாகாணங்கள் எங்கனும் பட்டி தொட்டி எங்கனும் பரப்புவதில் ஓய்வின்றிச் செயற்பட்டவர்.

இவரது இயல்பான இசைத் திறன், மேடைப்பேச்சு ஆகியவற்றில் மக்கள் மனதை கவர்ந்தவர்.கணவரோடு நிழல் போல் அவரைத் தொடர்ந்து இத் தேசியத்தில் கால்கொள்ள வைத்த பெருமைக்குரியவர்களில் இவரின்றி வேறுயாருமில்லை. தலைவர் அமிர்தலிங்கத்தின் மேன்மைக்கு இவர் ஆற்றிய பங்கு மகத்தானது. இவரது ஊக்கமே தலைவர் அமிர்தலிங்கத்தை தமிழ் அரசியலில் தலைசிறந்த தலைவர்களில் ஒருவராக எழுச்சி பெற வைத்தது என்றால் மிகையாகாது என இலங்கை தமிழரசுக்கட்சியின் வட்டுக்கோட்டைத் தொகுதி தலைவர் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் தெரிவித்துள்ளார்.

கணவன் பணியே தமது பணி என அர்ப்பணிப்புடன் செயற்பட்டதால்தந்தை செல்வா, தலைவர்களான கு.வன்னியசிங்கம், டாக்டர் நாகநாதன் ஆகியோர் வித்திட்ட தமிழ்த் தேசியம் வடகிழக்கில் ஸ்திரம் பெற்று பெருவிருட்சமாகவளர்வதற்கு கால்கோளாக அமைந்தவர்கள் இவர்களே என் பதில் மாற்றுக்கருத்திருக்க முடியாது.

அரசியலில் புகுந்ததால் தமது பெரும் பொருள் இழந்தது மட்டுமன்றி எமது தாயகத்திலேயே தமது இறுதிக் காலத்தை கழிக்கமுடியாத துர்ப்பாக்கிய நிலைக்கு உள்ளாக்கப்பட்ட கதி இவருக்கு ஏற்பட்டது. இருந்தும் லண்டனில் தமது இரு பிள்ளைகளான காண்டீபன், பகீரதன் ஆகியோருடன் தமது இறுதி நாட்களை கழித்து சிவபதமடையும் வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது பெரும் பேறாகும்.

வட்டுக்கோட்டைத் தொகுதி மக்கள் சார்பில் அதுவும் 1956 ஆம் ஆண்டு தொடக்கம் இத் தம்பதியினரை நன்கு அறிந்து தமிழ்த் தேசியத்தைப் பற்றி நிற்பவன் என்ற ரீதியில் அன்னாரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்தித்து அவரது குடும்பத்தினருக்கும் நமது ஆழ்ந்த கவலையையும் அனுதாபத்தையும் தெரிவிக்கின்றோம். (இ-5)

# தமிழ் அரசியலில் மங்கையரின் பங்கை மாண்புறச் செய்தவர் மங்கையர்க்கரசி

## முதலமைச்சர் அனுதாபச் செய்தி



(கொழும்பு)

மறைந்த எதிர்க்கட்சித் தலைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமும் ஆகிய அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் அவர்களின் அன்புத் துணைவியாரும் தமிழரசுக் கட்சியின் மகளிர் அமைப்பின் செயலாளரும் தமிழ் அரசியலில் மங்கையரின் பங்கை மாண்புறச் செய்த திருமதி. மங்கையர்ச்கரசி அமிர்தலிங்கம் அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சியும் மனவேதனையும் அடைந்தேன் என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி .விக்னேஸ்வரன் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

1954 ஆம் ஆண்டு இளம் அரசியல்வாதியாக இருந்த சட்டத்தரணி அமிர்தலிங்கம் அவர்களை கைப்பிடித்த காலம் தொட்டு அவர்தம் கணவரின் அரசியலில் இரண்டறக் கலந்த ஒரு பெருந்தகையாக இருந்தவர். 1961ஆம் ஆண்டில் நடைபெற்ற சத்தியாக்கிரகத்தில் கணவருடன் முன்னின்று பங்குபற்றியமைக்காக கைது செய்யப்பட்டு 6 மாத காலம் பணாகொட இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்.

அன்னாரின் கருத்தாளம் மிக்க பேச்சுக்களும் கனிவான குரலில் பாடுகின்ற பாட்டுக்களும் தமிழ் மக்கள் மத்தியிலே இன உணர்வையும் அரசியல் விழிப்புணர்வையும் பிரகாசிக்கச் செய்வதற்கு பெரிதும் உதவின. கணவரின் அரசியல் நடவடிக்கைக்கு என்றும் துணை போகின்ற ஒரு துணைவியாக உயர்விலும் தாழ்விலும் அவருடன் வாழ்ந்த ஒரு சிறந்த பெண்மணி.

கணவரின் திடீர் இறப்பிற்கு பின்பும் அந்த இறப்பிற்கு காரணமாக இருந்தவர்களை பழிவாங்க வேண்டும் என்றுஒருபோதும் எண்ணியவரல்ல. கணவரது இறப்பிற்கு பின்பு இந்தநாட்டை விட்டுச் சென்றிருந்தாலும் அவருடைய எண்ணங்கள் நாட்டினதும் தமிழ் மக்களினதும் மேன்மையை நோக்கியதாகவே இருந்தன.

அன்னாரின் மறைவு தமிழ் அரசியல் சரித்திரத்தில் ஒரு அத்தியாயத்தின் முடிவாகும்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும் உற்றார், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம். அவரின் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன். (இ-5)


# மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் அவர்களுக்கு மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் இரங்கல் செய்தி

முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழர் விடுதலை கூட்டணியின் செயலாளர் நாயகமுமான அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் அவர்களின் மனைவி திருமதி.மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் தனது 83 ஆவது வயதில் 10.3.2016 இல் லண்டனில் காலமானார்.

தமிழரசுக் கட்சியின் முக்கிய தலைவராக செயற்பட்டு வந்த அமிர்தலிங்கம் அவர்களுடன் இணைந்து அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட்ட மங்கையர்க்கரசி அவர்கள் சத்தியாக்கிரகப் போராட்டத்தின் போது ஆறு மாத காலம் சிறைசென்று பெண்கள் அரசியல் போராட்டத்தில் ஈடுபட வேண்டும் என்பதற்கு முன் மாதிரியாக விளங்கியவர். தமிழரசுக் கட்சியின் மேடை தோறும் தேர்தல் காலங்களில் தனது கணவருடன் இணைந்து தமிழீழ எழுச்சிப் பாடல்களை பாடியதோடு அரசியலில் பெண்கள் ஈடுபட வேண்டும் என்பதையும் விடுதலைப் போராட்டத்தில் அவர்கள் பங்கு கொள்ள வேண்டும் என்பதையும் வலியுறுத்தி வந்தவர் ஆவார். பெண்கள் அமைப்புக்கள் அரசியல் பங்களிப்பை வலியுறுத்தி வரும் இக்கால கட்டத்தில் இவரது முன்மாதிரியை தமிழ் பெண்கள் சமுதாயம் பின்பற்ற வேண்டும்.

பெண்கள் எத்தயக்கமும் இன்றி அரசியலில் ஈடுபடுவதற்கு வழிகாட்டிய மங்கையர்க்கரசி அவர்களின் மறைவு தமிழ் சமூகத்திற்கு குறிப்பாக பெண்களுக்கு பேரிழப்பாகும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும் அதே நேரத்தில் அவர் விட்டுச் சென்ற அரசியல் பாதையில் பெண்கள் எழுச்சி பெற வேண்டும் என மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் தலைவி சறோஜா சிவச்சந்திரனின் இரக்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளது. (இ)

# உரிமைகளை மேம்படுத்தல் தொடர்பான பயிற்சிப்பட்டறை



(யாழ்ப்பாணம்)

மாற்றுவலுவுள்ள நபர்களுக்கான அணுகு வசதி மற்றும் உரிமைகளை மேம்படுத்துதல் தொடர்பான பயிற்சிப்பட்டறை நேற்றைய தினம் யாழ். மாவட்டச்செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

வவுனியா மாவட்ட வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த பயிற்சி பட்டறையில் சைகை மொழி பெயர்ப்பு மற்றும் அச் சேவையை வழங்கும் பொறிமுறை மற்றும் செவிப்புலன் அற்றோரின் உரிமை தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது.

இப் பயிற்சிப்பட்டறையில் யாழ். மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலகங்களின் உதவிப் பிரதேச செயலர்கள் மற்றும் அரச நிறுவனாங்களில் பணிபுரியும் உத்தியோகத்தர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (இ-9)


இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா:54செவ் 7 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:BSc, MScலண்டன்<br>தொ.இ: B/5606 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 12 1/2<br>உயரம்: 160cm<br>தகைமை/தொழில்:BSc/அரசதொழில்<br>தொ.இ: G/5615 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 47<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:MSc/வங்கி அதிகாரி<br>தொ.இ: B/5607 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 31செவ் 8 இல்<br>தகைமை/தொழில்:பட்டதாரி<br>தொ.இ: G/5622 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 5 3/4சூரிசெவ் 11 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:A/Lலண்டன் PR<br>தொ.இ: B/5610 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 13<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:BA/விரிவுரையாளர்<br>தொ.இ: G/5625 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 9<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:A/Lபிரான்ஸ் NOT PR<br>தொ.இ: B/5613 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 70செவ் 1 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:BA/அரசதொழில்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம் அசைவமும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/5626 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

# தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி யாழ்.பல்கலை.மாணவர்கள் நேற்று உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

தமது விடுதலையை வலியுறுத்தி நேற்று 18 ஆவது நாளாகவும் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகளுக்கு ஆதரவு தெரிவித்தும் அவர்களது விடுதலையை வலியுறுத்தியும் யாழ்.பல்கலைக் கழக மாணவர்கள் நேற்றைய தினம் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் நேற்றுமுற்பகல் 10 மணியளவில் ஆரம்பமாகிய இப்போராட்டம் மாலை ஐந்து மணிவரை முன்னெடுக்கப்பட்டிருந்தது. இந்த போராட்டத்தில் பெருமளவிலான மாணவர்கள் ஈடுபட்டு அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தியிருந்தனர்.

அரசியல்கைதிகள் போராட்டத்தை முன்னெடுத்திருந்த நிலையில் அவர்களது வழக்கு விசாரணை நீதிமன்றத்தின் ஊடாக முன்னெடுக்கப்பட்டு மீண்டும் அவர்களுடைய விளக்கமறியல் நீடிக்கப்பட்டு இருந்தது. அதனையடுத்து அவர்களை மீண்டும் சாதாரண கைதிகள் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பிரிவிற்கும் மாற்றப்பட்டிருந்த னர்.

இந்நிலையில் மகசின் சிறைச்சாலையின் ஜே பிரிவில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பெண்ணொருவர் உட்பட 14 தமிழ் அரசியல் கைதிகள் தமது உண்ணாவிரதப் போராட்டத்தை நேற்று 18 ஆவது நாளாகவும் முன்னெடுத்திருந்தனர். உடல் நிலை மோசமடைந்திருக்கும் கைதிகள் வைத்தியர்களின் ஆலோசனைக்கு அமைவாக சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைகளின் பின்னர் மீண்டும் சிறைக் கூடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் எவ்வாறாயினும் தமது கோரிக்கைகள் தொடர்பாக உரிய பதில் கிடைக்காத வரையில் தமது போராட்டத்தை கைவிடப் போவதில்லையென் பதில் உறுதியாகவிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.






(படங்கள்: உ.சாளின்)

இந்நிலையில் தமிழ் அரசியல் கைதிகளது போராட்டத்திற்கு ஆதரவாக தமிழ் அரசியல் கட்சிகள், பொது அமைப்புக்கள் என்பன குரல் கொடுத்து வரும் நிலையில், யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும் யாழ். பல்கலைக்கழக சமூகத்தின் ஆதரவுடன் குறித்த உண்ணாவிரத போராடட்ம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இப்போரட்டத்தில் ஈடுபட்டிருந்த மாணவர்கள், பதவிக்கு வரும் வரை வாக்குறுதி வந்த பின்னர் மௌனம். அரசியல் கைதிகளை விடுதலை செய், சிறைவாழ்வு தமிழர்களுக்கு தலை விதியா? நல்லிணக்க அரசே மௌனம் சாதிப்பது ஏன்? உலகிற்கு நல்லாட்சி தமிழர்களுக்கு கொடுங்கோலாட்சியா? என எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். மேலும் எமது இப்போரா ட்டம்ஒரு ஆரம்பமே. கைதிகளின் விடு தலை சாத்தியப்படாவிட்டால் தொடர்ந்தும் எமது போராட்டம் முன்னெடுக்கப்பட்டு, பல்கலைக் கழக சமூகமே ஒன்று திரண்டு போராட்டங் களை முன்னெடுக்கும் எனவும் மாணவர்கள் எச்சரித்துள்ளனர்.

யாழ்பல்கலைக்கழகமாணவர் ஒன்றியத்தால் ஒழுங்கமைக்கப்பட இந்த போராட்டத்திற்கு யாழ்.பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம், ஊழியர் சங்கம் உட்பட பெரும்பாலான அமைப்புக்கள் ஆதரவு தெரிவித்து போராட்டத்திலும் ஈடுபட்டிருந்தனர். இதன் போது பொலிஸாரின் பிரசன்னமும் அங்கு காணப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-4)

மணிவிழா வாழ்த்துக்கள்



E.S.P.
நாகரத்தினம்

கோடி சிற்பிக்குள்
ஒன்று முத்தாகும்
அக் கோடியில்
ஒன்றாய் அவதரித்து
தம்மை நாடி
வருபவர்க்கு
அள்ளி வழங்கும்
ஈகையாளனே
மணிவிழாவாம்
இந் நன்னாளில்
வாழ்த்தி அமைகின்றோம்.

(சி-3755)

வாழ்த்துவோர் :
மாணிக்கம் சுப்பிரமணியம்
குடும்பத்தினர்.
Ragu International (Pvt) Ltd,
101, ஸ்ரீகதிரேசன் வீதி,
கொழும்பு-13. TP:011 243 8630

38B
செரபெறி காடின்
பம்பலப்பிட்டி,
கொழும்பு-04
011 259 0630

மணிவிழா வாழ்த்து

காரைநகர் தந்திட்ட கல்விக்காருண்யன்
திரு.ஈ.எஸ்.பி.நாகரத்தினம்



(சி-3954)

கல்விக்கோர் கலங்கரை விளக்காய்
பணி செய்து துணை கொண்டு
பாரினிலே மாணாக்கர் உயர்வு பெற
உதவிகள் பல செய்து
உயர்ந்து நிற்கும் கோபுரமே
நீர் வாழ்க நின் புகழ் வாழ்க

வாழ்த்துவோர்கள்

அ.பஞ்சலிங்கம் (ஓய்வுநிலை அதிபர்), பொ.கமலநாதன் (ஓய்வுநிலைஅதிபர்), செல்வி. சி.ஞானலோஜினி (சட்டத்தரணி), பொ.சந்திரநாதன் (ஓய்வுநிலை நிர்வாக உத்தியோகத்தர்), கு.அருட்செல்வன் (அரச உத்தியோகத்தர், நில அளவையாளர் திணைக்களம்), ஆ.சத்தியமூர்த்தி (முகாமையாளர், மக்கள் வங்கி), அ.வரதராஜேஸ்வரமுதலி ஓய்வுநிலை அரச உத்தியோகத்தர்), சி.ஸ்ரீகணேசன் (உரிமையாளர், பரணி மருந்தகம்), அ.சிறீதரன் ((JP) ஓய்வுநிலை உத்தியோகத்தர்), இ.செல்வநாதன் (நகுலன் (JP)) த.பிரிதிவராய் (முகாமையாளர், இலங்கை வங்கி), கொக்குவில் இந்துக் கல்லூரி
பழைய மாணவர்கள்

# தாயாரின் பணியைப் பறித்த பிரித்தானிய பிரதமர் கமரூன்

பிரித்தானிய பிரதமரான டேவிட் கமரூனின் தாயார் ஒரு குழந் தைகள் மையத்தில் பணிபுரிந்து வந்துள்ள நிலையில் தற்போது அவரிடமிருந்து பணி பறிக்கப்ப ட்டுள்ளதாக தகவல்கள் வெளியா கியுள்ளன.

பிரதமர் டேவிட் கமரூனின் தாயான மேரிகமரூன் Oxfordshire நகரத்தில் உள்ள Chieveley மற்றும் Area என்ற இரு குழந் தைகள் மையத்தில் கடந்த ஒரு வருடமாக பணிபுரிந்து வருகிறார்.

இந்நிலையில், பிரதமர் கம ரூன் சில மாதங்களுக்கு முன்னர் ஒரு 'அதிரடி அறிவிப்பை வெளி யிட்டார்.

'நகரங்களில் உள்ள நிர்வாக கவுன்சில்களுக்கு அளிக்கப்பட வேண்டிய நிதியில் தற்போது பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

எதிர்வரும் 2020ஆம் ஆண்டில் இருந்து தற்போது அளிக்கப்படும் நிதியை விட 24 சதவிகிதம் குறை வாக அளிக்கப்படும் சூழல் ஏற் பட்டுள்ளது.

எனவே, இந்த கவுன்சில் கீழ் வரும் சில குழந்தைகள் மைய த்தை உடனடியாக மூட நடவடி க்கை எடுக்கப்படும்' என கூறியிரு ந்தார்.

கமரூன் கூறிய குழந்தைகள் மையத்தில் தான் அவரது தாயா ரான மேரி கமரூனும் பணியாற்றி வந்துள்ளார்.

தனது மகனான பிரதமரின் அறிவிப்பால் அதிருப்தி அடைந்த மேரி கமரூன் இந்த திட்டத்தை கைவிடுமாறு கவுன்சிலுக்கு மனு வும் அனுப்பியிருந்தார்.

ஆனால், பிரதமரின் அறிவிப்பு நேற்று முன்தினம் முதல் நடை முறைக்கு வந்ததை தொடர்ந்து, குழந்தைகள் மையம் மூடப்பட வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளதால் தற்போது மேரி கமரூன் தனது பணியை இழந்துள்ளார்.

இது தொடர்பாக பத்திரிகை ஒன்றிற்கு மேரி கமரூன் பேட்டி அளித்தபோது, 'குழந்தைகள் மையம்



மூடப்படுவது எனக்கு கவலை அளி க்கிறது.

ஆனால், நிதி பற்றாக்குறை இருக்கும் நேரத்தில் இதுபோன்ற முடிவுகளை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்' என பதிலளித்துள்ளார்.

குழந்தைகள் மையம் மூடப் படுவது குறித்து தனது மகனான கமரூனிடம் நேரடியாக புகார் கூறினீர்களா என்ற கேள்விக்கு 'மகனாக இருந்தாலும், பிரதமரின் பணியில் நான் தலையிட மாட் டேன்' என மேரி கமரூன் தெரி வித்துள்ளார். (இ-5)

# ஈரான் கட்டுப்பாட்டுடன் செயற்படுதல் வேண்டும் பான் கீ மூன் வலியுறுத்து

ஈரான் நாடு அணு ஆயுதங்கள் தயாரிப்பதாக அமெரிக்கா குற்றம் சாட்டி வந்தது. ஆனால், தனது அணுசக்தி திட்டங்களை மின் உற்பத்திக்காக மட்டுமே பயன்படு த்துவதாக ஈரான் கூறிவந்தது. இதையடுத்து 1995ஆம் ஆண்டு ஈரான் மீது அமெரிக்கா தடை விதித்தது. இதனால் பல்வேறு நாடுகளின் வங்கிகளில் ஈரான் வைத்திருந்த 100 பில்லியன் அமெ ரிக்க டொலர்கள்(சுமார் ரூ.6 இலட்ச த்து 60 ஆயிரம் கோடி) சொத்து களும் முடக்கப்பட்டது. மேலும் சர்வதேச சந்தையில் கச்சாய் எண் ணெயை விற்க முடியாத நிலை க்கும் ஈரான் தள்ளப்பட்டது.

பின்னர் நீண்ட இடைவெளிக்கு பிறகு அமெரிக்கா, சீனா, ரஷ்யா உள்ளிட்ட ஐ.நா. பாதுகாப்பு கவுன்சி லின் நிரந்தர உறுப்பினர்கள் உள்ளிட்ட நாடுகளுடன் கடந்த ஆண்டு ஈரான் அணு சக்தி ஒப்பந் தம் செய்து கொண்டது. அதைத் தொடர்ந்து பொருளாதார தடைகள் விலக்கிக் கொள்ளப்பட்டன.

இந்நிலையில், கடந்த புதன் கிழமை ஈரான் கண்டம் விட்டு கண்டம் பாயும் பேலிஸ்டிக் ரக ஏவுகணைகளை பரிசோதனை செய்தது. இராணுவ பயிர்சியின்ஒரு அங் கம்தான் ஏவுகணை சோதனை என ஈரான் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இருப்பினும் உலக நாடுகள் மத்தி யில் ஈரானின் ஏவுகணை சோதனை அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இந்த நிலையில், ஈரான் எச்ச ரிக்கையுடனும் சுய கட்டுப்பாடுடனும் நடந்து கொள்ள வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபை தலைவர் பான் கீ மூன் தெரிவித்துள்ளார். இது குறித்து பான் கீ மூனின் செய்தி தொடர்பாளர் கூறுகையில், ஈரான் மீதான பொருளாதார தடை விலக்கி கொள்ளப்பட்ட நிலையில், மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவும் தற் போதைய சூழலையடுத்து, பான்கீமூன் ஈரான் அரசின் குடியரசு தலை வரை, எச்சரிக்கையுடனும், நல்ல உணர்வுடனும், ஏதேனும் அவசர நடவடிக்கைகளால் பதற்றத்தை அதிகப்படுத்த வேண்டாம் என கேட்டுக்கொண்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# வாழும் கலை அமைப்புக்கு 5 கோடி ரூபாய் அபராதம்

ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் தலைமை யிலான 'வாழும் கலை' அமைப் பின் சார்பில், டில்லியில் யமுனை நதிக்கரையில் 11-13 ஆம் திகதி வரை 'உலக கலாசார திருவிழா' நடைபெறுகிறது. உலகம் முழுவ தும் இருந்து லட்சக்கணக்கானோர் பங் கேற்கும்வகையில், ஆயிரம்ஏக்கர்பரப் பளவு நிலத்தில் திருவிழா நடக்கிறது.

இந்த விழாவுக்காக, சுற்றுச் சூழலை பாதிக்கும் வகையில் ஏற் பாடுகள் செய்யப்பட்டதாகவும், விழா வுக்கு தடை விதிக்க வேண்டும் என்றும் கோரி, 'யமுனை நதியை காப்போம்' என்ற இயக்கத்தினர், பசுமை தீர்ப்பாயத்தில் வழக்கு தொடர்ந்தனர். அதை விசாரித்த பசுமை தீர்ப்பாய அமர்வு, திரு விழாவுக்கு தடை விதிக்க மறுத்தது. அதே சமயத்தில், சுற்றுச் சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்தியதற்காக, விழா தொடங்குவதற்கு முன்பு, ரூ.5 கோடி அபராதத்தை செலுத்த வேண் டும் என்று உத்தர விட்டது. ஆனால், ஒருபைசா கூட அபராதம் செலுத்த மாட்டோம் என்று ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் தெரிவித்திருந்தார்.

அபராதம் செலுத்த நேற்று (11 ஆம்திகதி வரை) அவகாசம் இரு ந்த நிலையில், இந்த விழாவுக்கு தடை கோரி தேசிய பசுமை தீர்ப் பாயத்தில் மற்றொரு மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனு நேற்று பிற்பகல் விசாரணைக்கு வந்தது. அப்போது, வாழும் க்லை அமை ப்பு சார்பில் ஒரு மனு தாக்கல் செய் யப்பட்டது. அதில், அபராதத் தொகை ரூ.5 கோடியை செலுத்த 4 வாரம் அவகாசம் கேட்கப்பட்டிருந்தது.

'மேலும், தொண்டு நிறுவன மான வாழும் கலை அமைப்பானது மிகவும் குறுகிய காலத்திற்குள் 5 கோடி ரூபாயை திரட்டுவது கடினம். இந்த அபராத தொகையை, விழா நடந்த இடத்தில் பல்லுயிர் பூங்கா அமைப்பதற்கான மறுசீரமைப்பு நிதியாக எடுத்துக்கொள்ள வேண் டும்' என்றும் அந்த மனுவில் தெரி விக்கப்பட்டுள்ளது.


இந்த மனுவை பரிசீலித்த தீர்ப்பாய நீதிபதிகள், அபராதம் செலுத்த மாட்டேன் என்று கூறிய ரவிசங்க ருக்கு கடும் கண்டனம் தெரிவித் தனர். மேலும், நல்ல அந்தஸ்தில் இருக் கும் நபர் இதுபோன்ற கருத்துக்களை தெரிவிப்பது, சட்டத்தின் ஆட்சியை மதிக் காத போக்கு என் றும் குறிப்பிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# சிறுவர்களுக்கான பலூன்களை பயன்படுத்தி தனது எதிரிகளைக் கண்காணிக்கும் ஐ.எஸ்.

ஐ.எஸ். தீவிரவாதிகள் ஆளற்ற விமானங்களைப் பயன்படுத்துவ தற்கு பதிலாக- ஹீலியம் வாயு நிரப்பப்பட்ட சிறுவர்களுக்கான வாயு பலூன்களை தமது கண் காணிப்பு நடவடிக்கைகளுக்கு பயன்புடுத்தி வருவது அறியப்பட்டு ள்ளது.

தமது பிராந்தியத்தில் கண் ணைக் கவரும் வடிவமைப்பிலான பலூன்கள் வானில் பறப்பதைக் கண்டு சந்தேகம் கொண்ட குர்திஷ் பெஷ்மெர்கா படையினர், அந்த பலூன்களில் ஒன்றை சுட்டு வீழ்த் திய போது அதனுடன் புகைப்படக் கருவியொன்றுபொருத்தப்பட்டுள்ளதைக் கண்டு அதிர்ச்சியடைந்தனர்.

ஐ.எஸ். தீவிரவாதிகள் இத் தனை மலிவான தொழில்நுட்ப முறைமையொன்றைப் பயன்படு த்தி தம்மை கண்காணிப்பார்கள் என்பதை தாம் சிறிதும் எதிர்பார் த்திருக்கவில்லை என அந்தப் படையினர் கூறுகின்றனர். (இ-5)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறையின் ஏற்பாட்டில் கைலாசபதி கலையரங்கில் அண்மையில் நடைபெற்ற அனைத்துலகச் சைவ மாநாட்டின் நிறைவுநாள் நிகழ்வில் மணிவிழாக் காணும் கல்விக்காருண்யன் ஈ.எஸ்.பி. நாகரத்தினத்துக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரத்தினம் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவித்திருந்தார்.

# அடுத்த தலைமுறைக்கான மார்க்-3 ரொக்கெட் இந்தஆண்டு இறுதிக்குள் விண்ணில் ஏவப்படும்

(ஸ்ரீஹரிகோட்டா)

அடுத்த தலைமுறைக்கான மார்க்-3 ரொக்கெட் இந்த ஆண்டு இறுதி க்குள் விண்ணில் ஏவப்படும் என்று இஸ்ரோ தலைவர் ஏ.எஸ்.கிரண் குமார் தெரிவித்தார்.

**7 செயற்கைக்கோள்கள்**


ஸ்ரீஹரிகோட்டாவில் நேற்று முன்தினம் ரொக்கெட் ஏவப்பட்ட பிறகு விஞ்ஞானிகள் மத்தியில் இஸ்ரோ தலைவர் ஏ.எஸ்.கிரண் குமார் பேசியதாவது,

இஸ்ரோவின் சாதனைகள் தொடர்ந்து நடந்து வருகிறது. தற் போது பி.எஸ்.எல்.வி. சி-32 ரொக் கெட் வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டுள்ளது. கடல்சார் ஆராய் ச்சிக்காக ஐ.ஆர்.என்.எஸ்.எஸ். வரிசையில் 7 செயற்கைக் கோள் களை விண்ணில் செலுத்த திட்ட மிடப்பட்டிருந்தது. அந்த வகையில் 6 செயற்கைக்கோள்கள் வெற் றிகரமாக விண்ணில் செலுத்தப் பட்டுள்ளன. மீதமுள்ள ஒரே ஒரு செயற்கைக்கோள் அடுத்த மாதம் ஏவப்படவுள்ளது.

அடுத்த ஒன்றரை மாதத்தில் இந்த 7 செயற்கைக்கோள்களின் பயன்பாட்டை நாம் முழுமையாக பெறமுடியும். இந்த திட்டம் வெற்றி பெறுவதன் மூலம் விண்வெளி ஆராய்ச்சியில் இந்தியா ஒரு மைல் கல்லை தொடுவது ஒரு வரலாற்று சாதனை ஆகும்.

**இந்த ஆண்டுக்குள்...**

நம் நாட்டில் ஜி.பி.எஸ். தொழில் நுட்பத்தில் தன்னிறைவு பெறும் தூரம் வெகுதொலைவில் இல்லை



என்ற நிலை உள்ளது. அதிக எடை கொண்ட அடுத்த தலைமுறை க்கான மார்க்-3 ரொக்கெட்டில் 2-வது கட்ட சோதனை வெற்றிகர மாக முடிந்துள்ளது. 3-வது கட்ட சோதனை விரைவில் நடக்க உள் ளது. இந்த ஆண்டு இறுதியிலேயே மார்க்-3 ரொக்கெட்டை விண்ணில் செலுத்த திட்டமிட்டுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# கொண்டாட்டத்தின் போது ஐவர் மீது துப்பாக்கிச்சூடு

ஐக்கிய அமெரிக்காவின் பென்சில் வேனியா மாநிலத்தின் 'பிட்ஸ்பே ர்க்கு அருகே இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவமொன்றில் ஐவர் கொல்லப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வில்கின்ஸ்பேர்க்கில் வெளி முற்றமொன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்றுக் கொண்டிருந்த கொண்டாட்டமொன்றில் துப்பாக் கிதாரிகள் இருவர் துப்பாக்கிப் பிர யோகம் மேற்கொண்டபோதே மேற்படி சம்பவம் இடம்பெற் றுள்ளது. இதேவேளை, இச்சம் பவத்தில் மேலும் மூவர் காயம டைந்துள்ளனர்.

கொல்லப்பட்டவர்களில் நால்வர் பெண்கள் என்று கூறப்பட்டுள்ளதுடன், சந்தேகநபர்கள் தப்பியதாகவும் உள்ளூர் ஊடகம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், துப்பாக்கிச்சூடு ஆரம்பித்தவுடன், அங்கிருந்தோர் வீட்டை நோக்கி ஓடியதாகவும், ஆனால் மறுபுறமிருந்த துப்பாக் கிதாரி அவர்களையும் சுட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நால்வர் சம்பவ இடத்திலேயே மரணித்ததாகவும் ஐந்தாமவர் வைத்தியசாலையில் மரணித்த தாகவும் இரண்டு ஆண்கள் வைத் தியசாலையில் கவலைக்கிடமான நிலையில் இருப்பதாகவும் அதிகா ரிகள் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சியான பாரிய துப்பாக் கிச்சூட்டு சம்பவங்களையடுத்து துப்பாக்கியை கட்டுப்படுத்துவது, ஐக்கிய அமெரிக்காவில் பிரதான விவாதப்பொருளாக உள்ளது. (இ-5)

## ஐ.எஸ். தீவிரவாதிகளின்

# இரசாயன ஆயுதக் கிடங்குகள் மீது

# அமெரிக்கா வான்வழித் தாக்குதல்

(வோஷிங்டன்)

சிரியா, ஈராக் நாடுகளில் ஆதிக்கம் செலுத்தி வரும் ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்தில் உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த இளைஞர்கள் இணைந்து வருகின்றனர். சில நாடுகளில் இளம் பெண்களும் இதில் சேர்ந்து உள்ளனர். இவர்கள் சிரியாவுக்கு சென்று போர் பயிற்சி பெற்று சண்டையில் ஈடுபட்டும் வருகின்றனர்.

அமெரிக்க பென்டகன் மீது தாக்குதல் நடத்திய அல்கொய்தா இயக்கத்தை விட அதிபயங்கரவாத இயக்கமாக பார்க்கப்படும், ஐ.எஸ் தீவிரவாதிகளுக்கு எதிராக அமெரிக்கா தலைமையிலான கூட்டு இராணுவம் வான்வழி தாக்குதல் நடத்துகிறது.

இந்த நிலையில், ஐ.எஸ் தீவிரவாதிகள் இரசாயன ஆயுதங்களை தாக்குதலுக்கு பயன்படுத்துவதற்காக் தயாரித்து வருவதாக தகவல்கள் வெளியாகின. இந்த தகவலை ஐ.எஸ். தீவிரவாதிகளிடம் பணியாற்றி அமெரிக்க படையால் கடந்த பெப்ரவரி மாதம் சிறைபிடிக்கப்பட்ட சுலய மான தாவூத் அல் பக்கார் அளித்து இருந்தார். இந்த தகவலின் அடிப்படையில், ஐ.எஸ் தீவிரவாதிகள் இரசாயன ஆயுதங்களை உற்பத்தி செய்யும் இடத்தை குறிவைத்து அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படை தாக்குதல் நடத்தியுள்ளது. (இ-5)

## காளஹஸ்தி கோவிலுக்கு ஜடாமுடியுடன் நித்யானந்தா, நடிகை ரஞ்சிதா வருகை



(நகரி)

பெங்களூர் நித்யானந்தா பீட மடாதிபதியாக இருக்கும் நித்யானந்தா நேற்றுமுன் தினம் காளஹஸ்தி வாயுலிங்கேஸ்வர் கோவிலுக்கு வந்தார். அவருடன் நடிகை ரஞ்சிதா உட்பட சுமார் 10 சீடர்களும் வந்தனர்.

வழக்கமாக நித்யானந்தா காவி தலைப்பாகை அணிந்து இருப்பார். ஆனால் நேற்று முன்தினம் அவர் ஜடாமுடி தரித்து இருந்தார். இதே போல நடிகை ரஞ்சிதாவும் ஜடாமுடி கோலத்தில் காணப்பட்டார்.

ஜடாமுடி வளர பல ஆண்டுகள் ஆகும். அண்மையில் ஒரு நிகழ்ச்சிக்கு வந்த நித்யானந்தா வழக்கமான முடியுடன் காணப்பட்டார். இப்போது ஜடாமுடி கோலத்தில் வந்ததை பார்த்தவர்கள் ஜடாமுடி செயற்கையானதாக இருக்கும் என்று கருதினர்.

கோவிலில் அவரை புகைப்படம் எடுக்க நிருபர்கள் முயன்றனர். ஆனால் நித்யானந்தாவுடன் வந்த சீடர்கள் அவர்களை தடுத்து தள்ளினர. இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது என்றாலும் சிலர் புகைப்படம் எடுத்தனர்.

இந்த களேபரத்துக்கு மத்தியில் நித்யானந்தாவை கோவில் அறங்காவலர் குழு உறுப்பினர் வெங்கட்ராம நாயுடு, பா.ஜனதா தலைவர் போலார் கோவர்த்தம் ஆகியோர் வரவேற்று கோவிலுக்குள் அழைத்துச் சென்றனர்.

சுமார் 30 நிமிடம் நித்யானந்தாவும், ரஞ்சிதாவும் வாயுலிங்கேஸ்வர் மற்றும் அம்பாளை வழிபட்டனர். நித்யானந்தாவிடம் நிருபர்கள் பேட்டி எடுக்க முயன்றனர். ஆனால் அவர் பேச மறுத்து விட்டார்.

நித்யானந்தாவுக்கு பாதுகாப்பு அளித்த டி.எஸ்பி. வெங்கடகிஷோர் மற்றும் பொலிஸார் இறுதியில் அவருடன் சேர்ந்து புகைப்படம் எடுத்துக் கொண்டனர். (இ-5)

# 9,000 கோடி ரூபாய் வங்கிக் கடன் மோசடி

## விஜய் மல்லையா வெளிநாடு சென்றது எப்படி?

ரூ.9,000 கோடி வங்கி கடன் மோசடி செய்து லண்டனுக்கு தப்பிய விஜய் மல்லையா 7 பெரிய பைகளை விமானத்தில் எடுத்து சென்றதாக பரபரப்பு தகவல் வெளியாகியுள்ளது.

பெங்களூரைச் சேர்ந்த தொழில அதிபர் விஜய் மல்லையா மதுபான தொழிற்சாலை, கிங்பிஷர் விமான நிறுவனம் உட்பட பல நிறுவனங்களை நடத்தி வந்தார். பெங்களூர் ரோயல் சேலஞ்சர்ஸ் பெயரில் ஐ.பி.எல். கிரிக்கெட் அணியையும் நடத்தினார்.

இவரது கிங்பிஷர் நிறுவனம் சார்பில் பொதுத்துறை வங்கிகளிடம் இருந்து ரூ.9 ஆயிரம் கோடி கடன் பெற்று அதனை திருப்பிச் செலுத்தவில்லை. இதையடுத்து அவர மீது வங்கிகள் சார்பில் வழக்கு தொடரப்பட்டது. மேலும் அவர் சி.பி.ஐ. அதிகாரிகளால் தேடப்படும் நபராக் அறிவிக்கப்பட்டார். இது தொடர்பாக அனைத்து விமான நிலையங்களுக்கும் அறிவிக்கை அனுப்பப்பட்டது.

இந்த நிலையில் விஜய் மல்லையா வெளிநாடு செல்ல தடை விதிக்க கோரி உயர் நீதிமன்றம் 13 பொதுத்துறை வங்கிகள் சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு விசாரணையின் போது விஜய் மல்லையா கடந்த 2 ஆம் திகதியே வெளிநாடு சென்று விட்டார் என்று சி.பி.ஐ. தெரிவித்தது.


தேடப்படும் நபராக அறிவிக்கப்பட்ட விஜய் மல்லையாவை தப்ப விட்டது ஏன்? அவரது கடவுச் சீட்டை ஏன் முடக்கவில்லை. அரசு உதவியின்றி அவர் வெளிநாடு சென்றிருக்க முடியாது என்று பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் சரமாரி கேள்வி எழுப்பினர்.

இதற்கிடையே விஜய் மல்லையா லண்டன் தப்பிச் சென்றபோது 7பெரியபைகளை எடுத்துச் சென்றதாக பரபரப்பு தகவல் வெளியாகியுள்ளது. கடந்த 2 ஆம் திகதி (புதன் கிழமை) நள்ளிரவு 1.30 மணிக்கு ஜெட் ஏர்வேஸ் விமானத்தில் டில்லியில் இருந்து லண்டன் சென்றார்.

விமானத்தில் முதல் வகுப்பில் பயணம் செய்தார். மிகப்பெரிய அளவில் 7 ராட்சத பைகளை எடுத்துச் சென்றார். அதில் விலை உயர்ந்த பொருட்கள் இருக்கலாம் என்று தெரிகிறது. விமான நிலைய குடியுரிமை அதிகாரிகள் சோதனைக்குப் பிறகே எடுத்துச் சென்றார். முதல் வகுப்பு விமான டிக்கெட் ரூ.3.2 இலட்சத்துக்கு எடுத்து பயணம் செய்தார்.

விஜய் மல்லையாவுடன் அதே விமானத்தில் இளம் பெண் ஒருவரும் உடன் சென்றார். அவர் யார் என்று தெரியவில்லை.

இதற்கிடையே விஜய் மல்லையா ஐ.டி.பி.ஐ. வங்கியில் வாங்கிய ரூ.900 கோடி கடனை திருப்பிச் செலுத்தாதது தொடர்பான வழக்கில் அந்த வங்கியின் உயர் அதிகாரிகளுக்கும் கிங்பிஷர் ஏர்லைன்ஸ் நிறுவனத்தின்



உயர் அதிகாரிகளுக்கும் அமுலாக்கத்துறை சம்மன் அனுப்பி உள்ளது.

சட்டவிரோத பண பரிவர்த்தனை தடுப்புச் சட்டத்தின் கீழ் அனுப்பப்பட்ட இந்த சம்மனில் குறிப்பிட்ட நபர்களின் சொத்து விபரங்கள், கட ந்த 5 ஆண்டுகளில் அவர்கள் தாக்கல் செய்த வருமான வரிக் கணக்கு விபரம் ஆகியவை கோரப்பட்டுள்ளது.

சம்மன் அனுப்பப்பட்டு உள்ளவர்களிடம் இன்னும் சில நாட்களில் கூட்டு விசாரணை மேற்கொள்ளப்படும் என்று அமுலாக்கத்துறை வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-5)

# முகத்திரை தடைக்கு எகிப்து பாராளுமன்றில் சட்ட மூலம்



பெண்கள் முகத்தை மறைக்கும் பர்தா அணிவதை தடை செய்யும் சட்டமூலம் ஒன்று எகிப்து பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பிற்கு வரவுள்ளது. இதில் பெண்கள் பொது இடங்களில் மற்றும்அரச நிறுவனங்களில்முகத்திரை அணிவதை தடை செய்ய பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே தலைநகர் கெய்ரோவில் இருக்கும் பிரதான பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளர்கள் முகத்திரை அணிய கடந்த ஒக்டோபரில் தடை விதிக்கப்பட்டது. முகத்தை மறைக்கும் ஆடை இஸ்லாமிய மரபு கொண்டதல்ல என்றும் அதனை குர்ஆன் கோரவில்லை என்றும் பாராளுமன்ற உறுப்பினரும் சட்டவியல்துறை விரிவுரையாளருமான கலாநிதி அம்னா நுஸைர் குறிப்பிட்டுள்ளார்.

கலாநிதி நுஸைர் அல் அஸ்ஹர் பல்கலைக்கழகத்தின் முன்னாள் பீடாதிபதி என்பதோடு, எகிப்தின் இஸ்லாமிய விவகாரங்களுக்கான உச்ச சபையின் உறுப்பினருமாவார். நிகாப் என்று அழைக்கப்படும் இந்த முகத்திரை யூதர்களின் மரபு கொண்டது என்று குறிப்பிட்டுள்ளார்.

தலைமுடியை மறைக்கும்வகையான சாதாரண ஆடையையே குர்ஆன் குறிப்பிடுகிறது. அது பெண்களின்முகத்தை மறைக்க கோரவில்லை என்றும் கலாநிதி நுஸைர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் எகிப்தில் 2013 ஆம் ஆண்டு இஸ்லாமியவாத ஜனாதிபதி மொஹமட் முர்சி ஆட்சி கவிழ்க்கப்பட்டது தொடக்கம் அங்கு மதச்சார்பற்ற கொள்கைகளுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டு வருகிறது. (இ-5)

## பாகிஸ்தானில் 14 தலிபான் தீவிரவாதிகள் கைதாகினர்

(குயெட்டா)

பாகிஸ்தானில் குயெட்டா நகரின் பாஷ்டூனாபாத் பகுதியில் ஏராளமான ஆப்கானிஸ்தான் அகதிகள் பல் காலமாக வாழ்ந்து வருகின்றனர்.

அங்கு ஒரு வளாகத்தில் ஆப்கானிஸ்தான் தலிபான் தீவிரவாதிகள் பதுங்கி இருப்பதாக பாகிஸ்தான் பாதுகாப்பு படையினருக்கு இரகசிய தகவல் கிடைத்தது. அதைத் தொடர்ந்து அவர்கள் அங்கு விரைந்து சென்று, அந்த வளாகத்தை சுற்றி வளைத்தனர். அங்கிருந்த 14 தலிபான் தீவிரவாதிகளை அவர்கள் கைது செய்தனர்.

அவர்களை ஒரு இரகசிய இடத்துக்கு கொண்டு சென்று பாதுகாப்பு படையினர் விசாரித்து வருகின்றனர். கடந்த காலத்திலும் கூட இதே பகுதியில் இருந்து ஆப்கானிஸ்தான் தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டிருப்பது குறிப்பிடததக்கது. (இ-5)

# நல்லாட்சி அரசால் 48 பிக்குகள் கைது

நல்லாட்சி அரசாங்கம் இதுவரையில் 48 பௌத்த பிக்குகளை கைது செய்துள்ளதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் முற்போக்கு தேசிய ஒன்றியத்தின் தலைவர் அனுருத்த பொல்கம்பொல குற்றம் சுமத்தியுள்ளார்.

தேசிய நூலக கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

சட்டவிரோதமாக ஒன்று கூடுதல், நிதி மோசடி உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் பௌத்த பிக்குகள் 48 பேரை நல்லாட்சி அரசாங்கம் கைது செய்துள்ளது.

யானைக் குட்டியொன்றை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் உடுவே தம்மாலோக தேரர் கைது செய்யப்பட்டுள்ளார். எனினும் வில்பத்து வனப் பகுதியை அழிக்கும் அமைச்சருக்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படுவதில்லை.

உயிர் காப்பு அங்கிகளை கொள்வனவு செய்வதில் பத்து கோடி ரூபா மோசடி இடம்பெற்றுள்ளதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்னவிற்கு எதிராக இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழுவில் சுமத்தப்பட்டுள்ள முறைப்பாடு தொடர்பில் பத்து தடவைகள் அமைச்சருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. எனினும் இதுவரையில் ஆணைக்குழுவின் விசாரணைகளில் முன்னிலையாகவில்லை.

சிலருக்கு எதிரான முறைப்பாடுகள் வெறும் முறைப்பாடுகளாகவே காணப்படுகின்றன. அரசாங்கம் சிலருக்கு எதிராக மட்டுமே நடவடிக்கை எடுத்து வருகின்றது.

அரசாங்கத்திற்கு எதிராக குரல கொடுப்போருக்கு எதிராகவே சட்டம் அமுல்படுத்தப்படுகின்றது.

மக்கள் மீது அதிக வரிச் சுமையை திணித்துள்ள அரசாங்கம் மக்கள் கிளர்ச்சியை தடுக்க இவ்வாறு செய்கின்றதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது என பொல்கம்பொல மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை-11.03.2016

| நாணயம் | நாடு | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| டொலர் | அமெரிக்கா | 142.87 | 146.80 |
| பவுண்ட் | பிரிட்டன் | 203.16 | 210.39 |
| ஈரோ | ஐரோப்பிய ஒன்றியம் | 158.76 | 165.09 |
| பிராங் | சுவிட்சர்லாந்து | 144.16 | 150.17 |
| டொலர் | கனடா | 106.61 | 110.94 |
| டொலர் | அவுஸ்திரேலியா | 105.77 | 110.70 |
| டொலர் | சிங்கப்பூர் | 103.17 | 107.12 |
| ரூபா | இந்தியா | 2.1493 | ------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 382.9101 |
| குவைத் | டினார் | 480.1181 |
| ஓமான் | ரியால் | 374.9681 |
| கட்டார் | ரியால் | 39.6449 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.4896 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.3033 |

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 80 | 90 | 120 | 100 |
| உருளைக்கிழங்கு | 70 | 60 | 80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 160 | 130 | 160 | 200 | 150 |
| தக்காளி | 40 | 20 | 30 | 50 | 30 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 35 | 40 | 60 | 50 |
| கோவா | 50 | 35 | 50 | 80 | 50 |
| கரட் | 80 | 100 | 80 | 160 | 100 |
| பூசணி | 40 | 35 | 40 | 80 | 70 |
| புடோல் | 50 | 20 | 50 | 60 | 50 |
| வாழைக்காய் | 60 | 35 | 40 | 40 | 60 |
| சின்ன வெங்காயம் | 80 | 70 | 50 | 80 | 50 |
| பெரிய வெங்காயம் | 60 | 60 | 80 | 80 | 70 |
| பாகற்காய் | 140 | 100 | 80 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 80 | 70 | 50 | 120 | 80 |
| கருணைக்கிழங்கு | 100 | 60 | 80 | 80 | 60 |
| பயற்றங்காய் | 100 | 40 | 60 | 60 | 100 |
| லீக்ஸ் | 80 | 80 | 100 | 120 | 120 |
| பீற்றூட் | 80 | 60 | 40 | 80 | 80 |
| கறிமிளகாய் | 140 | 100 | 100 | 160 | 100 |
| முருங்கைக்காய் | 600 | 300 | 300 | 400 | 400 |
| போஞ்சி | 100 | 40 | 80 | 120 | 100 |
| கத்தரிதம்புள்ள | 80 | 60 | 60 | 100 | 80 |
| கீரை-1பிடி | 40 | 15 | 30 | 30 | 40 |
| தேசிக்காய் | 140 | 90 | 100 | 35-45 | 160 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30-40 | 50 | 100 | 50 |
| இராசவள்ளி | 150 | 100 | 140 | 100 | 150 |
| வெங்காயப்பூ | 120 | — | 100 | 120 | 60 |
| முள்ளங்கி | 30 | 20 | 40 | 80 | 30 |
| பொன்னாங்காணி | 40 | 20 | 30 | 30 | 40 |
| வல்லாரை | 20 | 10 | 10 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | — | — | — | — |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## ஒப்பந்தம் கையெழுத்தாவதற்கு முன் நடந்தது என்ன? 129

...இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண பிரதமர் ராஜீவ்காந்தியும் இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனாவும் செய்து கொண்ட ஒப்பந்தம் இலங்கைத் தமிழர் வரலாற்றில் மிக முக்கியமானது.

ஒப்பந்தம் கையெழுத்து ஆவதற்கு முன் பரபரப்பான சம்பவங்கள் நடந்தன. யாழ்ப்பாணத்தில் இருந்த பிரபாகரன் புதுடெல்லிக்கு அழைத்து வரப்பட்டார். அசோகா ஓட்டலில் காவலில் வைக்கப்பட்டார்.

இந்தச் சம்பவங்கள் பற்றி பின்னர் எழுதிய புத்தகத்தில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் பாலசிங்கம் குறிப்பிட்டுள்ளார்.

அவர் எழுதியிருப்பதாவது,

முதலமைச்சர் எம்.ஜி.ஆரின் அன்பும் ஆதரவும் இருந்தபோதிலும், தமிழ் நாட்டில் தங்கியிருந்து இந்திய அரசின் அழுத்தங்களுக்கு ஆளாவதைப் பிரபாகரன் விரும்பவில்லை. இந்திய ஆதிக்கப் பிடியிலிருந்து விடுபட்டு தமிழீழத்தில் சுதந்திரமாக இயங்கி போராட்டத்தை தொடங்குவதையே அவர் விரும்பினார்.

அவர் யாழ்ப்பாணம் செல்வதற்கான ரகசியத் திட்டங்கள் தீட்டப்பட்டன. 1987 ஆம் ஆண்டு ஜனவரி முற்பகுதியில் அவர் தமிழீழம் சென்றடைந்தார். நானும் என் மனைவியும் தொடர்ந்து சென்னையில் தங்கியிருந்து, அரசியல் பணியில் ஈடுபட்டிருந்தோம்.


பிரபாகரன் யாழ்ப்பாணம் சென்றுவிட்டார் என்ற செய்தி தமிழகப் பத்திரிகைகளில் பிரசுரமாகியதை அடுத்து, முதலமைச்சர் என்னை அவசரமாக அழைத்தார்.

அப்போது எம்.ஜி.ஆருடன் மத்திய அமைச்சர் ஒருவரும் இருந்தார்.


உங்கள் தலைவர் பிரபாகரன் இப்போது எங்கே இருக்கிறார்? யாருக்கும் தெரிவிக்காமல் யாழ்ப்பாணம் சென்று விட்டாராமே? இப்படிச் செய்வது சரியா? மத்திய அரசுக்குத் தெரியப்படுத்தாதது பராவாயில்லை. முதலமைச்சருக்காவது தெரியப்படுத்தி இருக்கலாம் அல்லவா? அப்படிச் செய்யாதது பெரிய தவறு! என்றார், மத்திய அமைச்சர்.

முதலமைச்சருடன் முடிந்துவிடப் பார்க்கிறார் என்பது தெளிவாகியது.

எம்.ஜி.ஆர். எதுவும் பேசவில்லை. என்னையே பார்த்துக் கொண்டு இருந்தார்.



நான் கூறினேன்: 1983 இறுதியில் இருந்து பல வருடங்களை பிரபாகரன் இந்தியாவில் கழித்து விட்டார். அவர் தஞ்சம் கேட்டு இங்கு வரவில்லை. ராணுவப் பயிற்சித் திட்டம் சம்பந்தமாக இந்திய அரசின்



அழைப்பின் பேரில்தான் இங்கு வந்தார். இங்கு தங்கியிருந்த காலத்தில் பல கசப்பான அனுபவங்களைப் பெற்றார்.

இப்பொழுது போராட்டக் களத்திற்கு செல்ல வேண்டிய காலமும் வரலாற்றுத் தேவையும் அவருக்கு ஏற்பட்டு விட்டது. தமிழீழ களத்திலிருந்து தான் எமது மக்களின் உரிமைப் போராட்டத்தை அவர் முன்னெடுக்க விரும்புகிறார். அதனால் தான் அவர் தாயகம் செல்ல வேண்டி நேர்ந்தது.

சென்னையிலிருந்து யாழ்ப்பாணம் செல்வது மிகவும் ஆபத்தான பயணம். தரைப்பாதை மட்டுமின்றி கடல் கடந்தும் செல்ல வேண்டும். பிரபாகரனுக்குப் பல எதிரிகள் இருக்கின்றார்கள். அவருக்கு விரோதமாக பல சக்திகள் செயற்படுகின்றன.

ஏனைய போராளி அமைப்புக்களும் அவரைப் பழி தீர்ப்பதற்காக அவரை வெறி கொண்டு அலைகின்றன. இப்படியான சூழ்நிலையில் பிரபாகரனின் பாதுகாப்பு கருதியே அவரது பயணத்தை ரகசியமாக வைத்திருக்க எமது இயக்கம் முடிவெடுத்தது. இப்படியாக ஒரு விளக்கம் கொடுத்தேன்.

அது சரி. முதலமைச்சருக்காவது அதைத் தெரிவித்திருக்கலாமே என்றார் மத்திய அமைச்சர்.

நான் முதலமைச்சரைப் பார்த்துச் சொன்னேன்: சார்! பிரபாகரன் யாழ்ப்பாணம் சென்றது உண்மையில் எனக்கும் தெரியாது. அவர் எனக்கும் கூட தெரியப்படுத்தவில்லை. மிகவும் ரகசியமான காரியங்களை மிகவும் ரகசியமாகச் செய்து முடிப்பதுதான் எமது இயக்கத்தின் மரபு. நேற்றுத்தான் எனக்கு யாழ்ப்பாணத்திலிருந்து தகவல் அனுப்பியிருந்தார் பிரபாகரன். உங்களுக்கு அறிவிக்குமாறு பணித்திருந்தார். நான் உங்களுக்கு அறிவிப்பதற்கு முன்னராக நீங்கள் என்னை அழைத்து விட்டீர்கள் என்றேன்.

முதலமைச்சருக்கு நிலைமை புரிந்தது. பிரபாகரன் தாயகம் திரும்பியதன் அவசியத்தை அவர் புரிந்து கொண்டார்.

பிரபாகரன் சௌக்கியமாக இருக்கின்றாரா? என்று கேட்டார் எம்.ஜி.ஆர். ஆமாம் சார் என்றேன்.

அவரைப் பாதுகாப்பாக இருக்கச் சொல்லுங்கள். நான் விசாரித்ததாகவும் சொல்லுங்கள் என்றார். சந்திப்பு சுமூகமாக முடிந்தது.



(தொடரும்)

# மகிந்தவின் இரண்டாவது பதவிக்காலத்தில் ஊடகவியலாளர்கள் கடத்தப்படவில்லை

(கொழும்பு)

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது பதவிக் காலத்தின் போது, எந்தவொரு ஊடகவியலாளரும் கடத்தப்படவில்லை என அரசாங்கம் அறிவித்துள்ளது. சட்டம், ஒழுங்கு மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சு இதனை தெரிவித்துள்ளது.**

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இரண்டாம் பதவிக் காலத்தின் போது கடத்தப்பட்ட ஊடகவியலாளர் தொடர்பிலான விபரங்களை நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில கோரியிருந்தார்.


எனினும், உதய கம்மன்பில நேற்று முன்தினம் நாடாளுமன்றத்திற்கு சமுகமளிக்காத நிலையில், இந்தக் கோரிக்கையினை கூட்டு எதிர்க் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன சபையில் முன்வைத்திருந்தார்.

இது தொடர்பில் பதில் வழங்கிய அமைச்சு, குறித்த காலப்பகுதியில் எந்தவொரு ஊடகவியலாளரும் கடத்தப்படவில்லை, எனவே இதர கேள்விகள் ஏற்புடையதல்ல என கூறியுள்ளது.

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது பதவிக் காலம் 2010.01.26 முதல் 2015.01.08 வரை என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-5)

# நிதி மோசடி விசாரணைப் பிரிவு குறித்து தீர்மானம் எடுக்கப்படும்

## மகிந்த அமரவீர தெரிவிப்பு



நிதி மோசடி விசாரணைப் பிரிவு தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படும் என அமைச்சரும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளருமான மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நிதி மோசடி விசாரணைப் பிரிவு தேவையா? அல்லது தேவையில்லையா? என்பது குறித்து விரிவான விசாரணைகளின் பின்னர் ஓர் தீர்மானம் எடுக்கப்படும். இது தொடர்பில் ஏற்கனவே கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பிரவின் ஊடாக சில தேவையற்ற விடயங்கள் தொடர்பிலும் விசாரணை நடத்தப்படுவதாக தென்படுகின்றது.

இந்த விசாரணைகள் அரசியல் நோக்கிலா? அல்லது ஒரு குழுவினை இலக்கு வைத்தா? என்பது குறித்து ஆராயப்பட்டு வருகின்றது.

பொதுமக்கள் பிரதிநிதிகள் மக்கள் பணத்தை கொள்ளையிட அனுமதிக்க முடியாது. அரசாங்க அதிகாரிகளுக்கும் அந்த அதிகாரம் இருப்பதாக நான் கூறவில்லை.

ஊழல் மோசடிகள் மேற்கொள்வோர் யார் என்பது பற்றிய பிரச்சினை கிடையாது. எவரேனும் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டிருந்தால் நாட்டின் சட்ட விதிகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.


எனினும் சில சந்தர்ப்பங்களில் தேவைய்யற்ற வகையில் விசாரணை நடத்தப்படுவதனை அவதானிக்க முடிகின்றது. இது குறித்த எமது வமர்சனங்களை நாம் வெளியிட்டுள்ளோம்.

விசாரணைகளின் போது அரசியல் தலையீடு இருக்கக் கூடாது என்பதே எமதும் ஜனாதிபதியினதும் நிலைப்பாடாகும்.

பிணை முறிகள் தொடர்பில் நாம் செய்த முறைப்பாடு குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகின்றது. இந்த விசாரணைகள் நிறுத்தப்படவில்லை.

அமைச்சுக்கள் பதவிகள் போர்வையில் விசாரணைகளை நிறுத்த விட முடியாது என மகிந்த அமரவீர மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# இனம்தெரியாத வெளிநாட்டவர்களால் யோஷிதவுக்கெதிரான ஆதாரங்கள் அழிப்பு



சி.எஸ்.என். தொலைக்காட்சி மூலம் பொதுச்சொத்து துஷ்பிரயோகம் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முனனாள் ஜனாதிபதி மகிந்தவின் மகன் லெப்.யோஷித ராஜபக்ஷ உள்ளிட்டவர்களுக்கு எதிரான இணைய ஆதாரங்கள் சில வெளிநாட்டில் இருந்து செயற்படும் இனம் தெரியாத நபர்களினால் அழிக்கப்பட்டுள்ளன.

கனடா, அவுஸ்திரேலியாவில் இருந்தே இவ்வாறு அந்த சான்றுகள் அழிக்கப்பட்டுள்ளமை கணனி அவசர நிலைமைகள் தொடர்பிலான ஆய்வகத்தினால் உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அந்த நடவடிக்கைக்காக சி.எஸ். என். நிறுவனத்தின் முன்னாள் தகவல் தொழில்நுட்ப முகாமையாளரின் மின்னஞ்சலே பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்று முன்தினம் மன்றுக்கு அறிவித்தனர்.

சி.எஸ்.என். நிறுவனத்தின் ஆரம்ப மூலதனமான 234 மில்லியன் ரூபா எவ்வாறு சம்பாதிக்கப்பட்டது என்பது தொடர்பில் விளக்கமளிக்காததை அடிப்படையாகவும் போலி ஆவணங்களை தயாரித்தமை, திட்டமிட்டு நம்பிக்கைத் துரோகம் செய்தமை, திட்டமிட்ட மோசடி, சுங்க சட்டத்தை மீறியமை மற்றும் நிறுவன சட்டங்களை மீறியமை, அரசாங்க சொத்துக்களை தவறாக பயன்படுத்தியமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் கீழ் யோஷித உள்ளிட்ட 9 சந்தேக நபர்களுக்கு எதிராக நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கடுவலை பிரதான நீதவான் தம்மிக ஹேமபால முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று முன்தினம் மீண்டும் விசாரணைக்கு வந்த போதே மேற்ப்டி விடயம் மன்றின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது.

இந்த விவகாரம் தொடர்பிலான வழக்கில் ஏற்கனவே கைதாகி விளக்கமறியலில் உள்ள லெப்டினன் யோஷித ராஜபக்ஷ, நிஸாந்த ரணதுங்க, ரொஹான் வெலிவிட்ட, அஷான் ரவிநாத் பெர்னாண்டோ, கவிஷான் திஸாநாயக்க ஆகிய முதல் ஐந்து சந்தேக நபர்களும் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் சிறை அதிகாரிகளினால் மன்றில் நேற்று முன்தினம் ஆஜர் செய்யப்பட்டனர்.

6ஆவது சந்தேக நபரான சாடியா கருணாஜீவ தொடர்ந்தும் வெளிநாட்டில் உள்ள நிலையில் அவர் நேற்று முன்தினம் மன்றில் ஆஜராகவில்லை.

7 ஆவது சந்தேக நபராக பெயரிடப்பட்டுள்ள சி.எஸ். என். நிறுவனம், 8 ஆவது சந்தேக நபரான எல்.ஓ.எல்.சி. நிறுவனம், 9 ஆவது சந்தேக நபரான ராஜபக்ஷ மன்றம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் மன்றில் பிரசன்னமாகியிருந்தனர்.

இந் நிலையில் வழக்கு விசாரணைகள் ஆரம்பமான போது முதலாவது சந்தேக நபரான் யோஷித சார்பாக ஜனாதிபதி சட்டத்தரணி ஜயந்த வீரசிங்கவின் ஆலோசனையின் பிரகாரம் சிரேஷ்ட சட்டத்தரணி தினேஷ் கனகரத்னம், சந்தியா தல்துவ, சம்பத் மெண்டிஸ், நாமல் ராஜபக்ஷ, பிரேமநாத் சி தொலவத்த உள்ளிட்டோர் மன்றில் ஆஜராகினர். (இ-5)

## இன்று ஒரு தகவல்

### நமக்கு மேலே ஒருவர்

அச்சாணி அற்ற வாகனம்; கடிவாளம் அற்ற குதிரை ; கரையற்ற நதி ஆகியவற்றின் நிலைமை என்ன ஆகும் என்பதைச் சொல்லித்தான் உணர வேண்டுமென்பதில்லை.

ஆனால் இத்தகைய நிலைக்கு வலியச் சென்று தங்களை ஆளாக்கிக் கொள்பவர்களின் நிலை பரிதாபகரமானது. அதாவது இவர்களை யாரும் எதுவும் சொல்லக் கூடாது. இவர்களை எத்தகைய கட்டுப்பாட்டுக்கும் உள்ளாக்கக்கூடாது. கெஞ்சிச் சொன்னாலும் மிஞ்சிச் சொன்னாலும் ஒன்றும் எடுபடாது.

எல்லாம் தன் விருப்பப்படி நடக்க வேண்டும். தான் எண்ணுவதே சரியானது என்பது இவர்களது மனப் போக்கு.

காற்றை அடிப்படையாகக் கொண்டு இசையை எழுப்பும் இசைக் கருவிகளில் காற்றைத் தடை செய்யும் எத்தனையே சிறு அமைப்புக்கள் இருக்கும். அத்தகைய காற்றுத் தடைகளை முறைப்படி இயக்கும் போது தான் இனிமையான இசை எழும்புகிறது.

வாழ்விலும் இப்படித்தான்.

கட்டுப்பாடுகளையும் தடைகளையும் முறைப்படி பயன்படுத்திக் கொள்பவர்களின் வாழ்வும் இனிமையாகவே கழிகிறது.

ஆசிரியர் பேச்சைக் கேட்கமாட்டேன், தாய், தந்தையர் சொல்லைப் பின்பற்றமாட்டேன், உயர் அதிகாரிகளுக்குக் கட்டுப்படமாட்டேன், நண்பர் பேச்சை நல்லதென்றாலும் ஏற்கமாட்டேன் என்றெல்லாம் பிடிவாதமாய் இருப்பவர்கள் தங்கள் தவறைத் தாமதமாகவே உணருகிறார்கள். பல நட்டங்களை ஏற்படுத்திக் கொண்ட பிறகு தானாகத் திரிந்து தற்குறியாய் இருப்பவர்களின் முடிவு எந்நாளும் சரியானதாய் இருப்பதில்லை.

ஒன்று உறவு தரும் அன்புக்குக் கட்டுப்பட வேண்டும். அல்லது திறமை மிகுந்தவர்களுக்குக் கட்டுப்பட வேண்டும். அல்லது தகுதியாளர்களுக்காவது கட்டுப்பட வேண்டும்.

அப்படிக்கட்டுப்பட்டு நடப்பதை சிலர் கௌரவக் குறைவானது என்று புரிந்து கொண்டுள்ளனர். இது தவறு. தான்தோன்றியாய் இருப்பதே கௌரவக் குறைவான செயல்.

நாமாக தேர்ந்தெடுத்துச் செல்லும் வழியானது நம்மிடத்தே ஏற்கனவே மனவிருப்பத்தை உண்டாக்கி விடுகிறது. ஆகவே பெரும்பாலும் இது நல்ல வழி என்றே நம் மனதுக்குப்படும். மற்ற வழிகள் நம் கண்ணிலிருந்து மறைபடவும் செய்யும்.

ஆனால் நம்மை வழிநடத்திச் செல்பவர்கள் பெரும்பாலும் அனுபவஸ்தர்களாய் இருக்கக் கூடும். வாழ்க்கைப் பாடங்களைத் தெளிவாக அறிந்தவர்களாக இருக்கவும் கூடும். இந்நிலையில் நல்லது எது கெட்டது எது நாம் செல்லும் பாதை சரிதானா? நிதானமாகத்தான் செயற்பட்டுக் கொண்டிருக்கிறோமா? என்றெல்லாம் ஆழம் காண இவர்கள் பெருமளவு உதவக் கூடும்.

நமக்கு மேலே ஒருவர் இல்லா விட்டாலும் வலியச் சென்று தகுதியுடைய எவர் சொல்லுக்கேனும் கட்டுப்படும் தன்மையை வளர்த்துக் கொள்வது புத்திசாலித்தனமான செயலாக இருக்கும்.

மாறாக இருக்கின்ற தொடர்புச் சங்கிலியையும் அறுத்து எறிந்து விட எண்ணுவது புத்திசாலித்தனமாகாது.

**லேனா தமிழ்வாணன்**

# சிறுவர் அரங்கம்

1382

## நொண்டிக் குதிரை!

...தன் எதிரே தைரியத்துடன் ஒரு குதிரை நொண்டியபடி வருவதை, வியப்போடு பார்த்தது சிங்கம்.

"சிங்க ராஜாவே, வணக்கம். என் வருகை உங்களுக்கு வியப்பினை ஏற்படுத்தலாம். இருந்தாலும் உங்களுக்கு சந்தோஷமான செய்தி சொலலவே வந்துள்ளேன். என்னை நம்புங்கள்" என்று பணிவோடு கூறியது குதிரை.

சிங்கமோ கர்....கர்... என்று உறுமியது. அதன் முகம் கோபத்தால் சிவந்திருந்தது. இருந்தாலும் நொண்டியபடி நடந்து வந்த குதிரையைப் பார்த்து சற்று பரிதாபப்பட்டது.

சிங்கம் ஓரளவுக்கு தன்னைப் பார்த்து பரிதாபப்படுகிறது என்பதை குதிரை உணர்ந்து, தன் எண்ணத்தைத் தெரிவிக்க இதுதான் சரியான சமயம் என்று முடிவு செய்தது.



"சிங்க ராஜாவே, நீங்கள கருணை மிக்கவர் என்று எனக்குத் தெரிகிறது. உங்கள முகத்தில் கருணை பொங்குகிறது. கருணையே வடிவான உங்கள் முகத்தை பார்த்துக் கொண்டே இருக்கலாம் போன்று எனக்குத் தோன்றுகிறது" என்றது.

"குதிரையே, நீ கூறியது போல் கோபமாக இருக்கும் நேரம் போக அவ்வப்போது எனக்குக் கருணை ஏற்படுவது உண்மைதான். என் கருணைப் பார்வையை குறிப்பால உணர்ந்து கொண்ட நீ அறிவு மிக்கவனாகத்தான் தெரிகிறாய. முதலில் நீ எதற்காக என்னை சந் திக்க வந்தாய்? ஏதோ சந்தோஷமான செய்தி என்றாயே, அது என்னவென்று உடனடியாக எனக்குத் தெரியப்படுத்து," என்றது சிங்கம்.

"சிங்க ராஜாவே, ஒரு நாள் நானும் என் நண்பர்களும் புல்தரையில் நின்ற போது மறைந்திருந்து நீங்கள் எங்களை கவனித்து விட்டீர்கள். தாங்கள் எங்களை உடனடியாகத் தாக்க வராமல் அமைதியுடன் அந்த இடத்தை விட்டுச் சென்றீர்கள். தாங்கள் அமைதியுடன செல்வதை நான் கவனித்தேன். தங்கள் மூலம் என் நண்பர்களுக்கு ஆபத்து ஏற்படப் போகிறது என்பதை உணர்ந்தேன். அதனால்தான் அதனைத் தடுக்க வேண்டி ஓடோடி வந்தேன்.

"சிங்க ராஜாவே, நான் என் நண்பர்களை, என் உயிரை விட மேலாக மதித்து வருகிறேன். தங்களால் என் நண்பர்களுக்கு ஏதேனும் ஆபத்து நேரிட்டால் அதனை என்னால் தாங்கிக்கொள்ள முடியாது. எனவே, நானே என் உயிரைக் கொடுத்து உங்களுக்கு விருந்தாக வந்துள்ளேன். நீங்கள் என்னைச் சாப்பிடுங்கள். என் நண்பர்களை விட்டுவிடுங்கள்" என்று கெஞ்சிக் கேட்டது நொண்டிக் குதிரை.

தன் நண்பர்களுக்காக இந்த அளவுக்கு கெஞ்சும் நொண்டிக் குதிரையைக் கண்டு சிங்கத்தின் மனம் மேலும் இளகியது. அதன் கண்களில் இருந்து கண்ணீர் வடியத் தொடங்கியது.

"சிங்கமே, நீ எதற்காக அழுகிறாய்? உனக்கு என்ன நேர்ந்தது? நான் ஏதாவது உன் மனத்தை புண்படுத்தும் விதத்தில் பேசிவிட்டேனா?" என்று கேட்டது குதிரை.

"குதிரையே, நீ என் மனம் புண்படும்படியாகப் பேசவில்லை. ஆனால், உன் நண்பர்கள் அனைவருமே உன் மனம் புண்படும்படியாகப் பேசுவதை நான் மறைந்திருந்து கவனித்தேன். ஆனால், நீயோ அதனை எல்லாம் மனத்தில் வைத்துக் கொள்ளாமல் உன் நண்பர்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணத்தோடு இருக்கிறாயே, உன்னைப் பற்றி உன் நண்பர்கள் இதுவரையிலும் புரிந்து கொள்ளாதது துரதிர்ஷ்டம்தான். இதோ இப்போதே உன்னை அழைத்துச் சென்று, உனது உயர்ந்த குணத்தைப் பற்றி அவர்களுக்கு எடுத்துரைக்கிறேன்," என்றவாறு குதிரையை அழைத்துக் கொண்டு புறப்பட்டது சிங்கம்.

அந்த நேரத்தில் புல் தரையில் எல்லா குதிரைகளும் கூட்டமாக நின்று புற்களை மேய்த்து கொண் டிருந்தன. நொண்டிக் குதிரை சிங்கத்தோடு வருவதைக் கண்டதும் எல்லாக் குதிரைகளும் திடுக்கிட்டன.

உடனே சிங்கம், "நீங்கள் யாரும் என்னைக் கண்டு பயப்பட வேண்டாம். உங்களுக்கு ஒரு உண்மையை எடுத்துரைத்து, உங்கள் அறியாமையைப் போக்கும் பொருட்டே உங்களைத் தேடி வந்துள்ளேன்" என்றது சிங்கம்.

சிங்கத்தின் பேச்சைக்கேட்ட மாத்திரத்தில் எல்லா குதிரைகளும் திகைப்படைந்தன.

"சிங்க ராஜாவே, வணக்கம். தங்களின் அன்பான பேச்சைக் கேட்டதும் எங்கள் அச்சம் விலகிவிட்டது. தாங்கள் எங்களுக்கு என்ன நீதி வழங்கினாலும் அதனை ஏற்றுக்கொண்டு உங்கள் பேச்சுக்கு கட்டுப்பட்டு இருப்போம்," என்றன குதிரைகள்.

"நல்லது குதிரைகளே! இதோ நிற்கின்ற உங்கள் நண்பனான இந்த நொண்டிக் குதிரையை நீங்கள் உங்களில் ஒருவனாக எண்ணாமல் அதன் மனத்தை புண்படுத்தி வந்தீர்கள்.

ஆனால், உங்கள் நண்பனான இவனோ, என்னால் உங்களுக்கு வரப் போகின்ற ஆபத்தைத் தடுத்து, உங்களுக்காக எனக்கு விருந்தாக உணவளிக்க வந்தது. அதன் தியாகத்தை நான் என்னவென்று சொல்வது. இப்படி ஒரு தியாகமிக்க நண்பனை இத்தனை காலமும் நீங்கள் புரிந்துகொள்ளாமல் இருந்து வீட்டீர்கள்," என்றது சிங்கம்.

சிங்கத்தின் பேச்சைக் கேட்டதும் எல்லா குதிரைகளும் தலை குனிந்தன. அன்போடு அந்த நொண்டிக் குதிரையினை சூழ்ந்து கொண்டன. அதனைக் கண்டு சிங்கமும் மகிழ்ச்சியடைந்தது.

மற்ற குதிரைகளோ நொண்டிக குதிரையைப் பார்த்தன.

"நண்பா, உனக்கு கால்தான் ஊனம். ஆனால், எங்களுக்கோ மனமே ஊனமாகி விட்டது. அதனால்தான் உன் நட்பின் அருங்குணத்தை தெரியாமல் இருந்து விட்டோம். நீ அமைதியாக இருந்தே சிங்க ராஜாவே போற்றும்படியான அன்பான செயலைச் செய்துவிட்டாய். நாங்கள் எல்லாரும் உன்னை வாழ்த்தி வணங்க கடமைப்பட்டுள்ளோம்" என்றன குதிரைகள்.

"நாம் வந்த வேலை இனிதே முடிவடைந்து விட்டது. குதிரைகள் எல்லாம் திருந்திவிட்டன. இனிமேல் அவற்றுக்குள் எந்த விதமான பேதமும் ஏற்படாது" என்று நினைத்து திரும்பி சென்றது சிங்கம். (முற்றும்)

## 12 03.2016 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1610 -ஜேக்கப் டி லா கார்டி தலைமையில் சுவீடன் படைகள் மாஸ்கோவைக் கைப்பற்றின.
- 1664 - நியூ ஜேர்சி பிரித்தானியாவின் குடியேற்ற நாடானது.
- 1879 - ஆங்கிலோ- சூலு போர்: நூற்றுக்கும் அதிகமான ஆங்கிலப் படைகள் சூலுக்களினால் சுற்றிவளைக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர்.
- 1894 - முதற் தடவையாக கொக்கா-கோலா மென பானம் கண்ணாடிப் புட்டியில் அடைத்து விற்கப்பட்டது.
- 1913 - ஆஸ்திரேலியாவின் வருங்கால தலைநகர் அதிகாரபூர்வமாக கான்பரா எனப் பெயரிடப்பட்டது. கான்பரா அமைக்கப்படும் வரையில் 1927 வரையில் மெல்பேர்ண் தற்காலிகத் தலைநகராக இருந்தது.
- 1918 - 215 ஆண்டுகளாக ரஷ்யாவின் தலைநகராக இருந்த சென் பீட்டர்ஸ்பேர்க் தலைநகர் அந்தஸ்து மாற்றப்பட்டு மாஸ்கோ தலைநகராக்கப்பட்டது.
- 1928 - கலிபோர்னியாவில் சென் பிரான்சிஸ் அணைக்கட்டு உடைந்ததில் 400 பேருக்கு மேல் கொல்லப்பட்டனர்.
- 1930 - மகாத்மா காந்தி பிரித்தானிய ஆட்சியாளரின் உப்பு ஆதிக்கத்துக்கு எதிராக 200 மைல் நீள தண்டி யாத்திரையை ஆரம்பித்தார்.
- 1938 - ஜேர்மனியப் படைகள் ஆஸ்திரியாவை ஆக்கிரமித்தன. அடுத்த நாள் இணைப்பு அறிவிக்கப்பட்டது.
- 1940 - குளிர் காலப் போர்: பின்லாந்து மாஸ்கோவுடன் அமைதி உடன்பாட்டிற்கு வந்தது. கரேலியாப் பகுதி முழுவதும் சோவியத் ஒன்றியம் பெற்றுக் கொண்டது. பின்லாந்துப் படைகளும் மீதமிருந்த மக்களும் உடனடியாக வெளியேறினர்.
- 1954 - சாகித்ய அகாதெமி இந்திய அரசினால் தொடங்கப்பட்டது.
- 1967 - சுகார்ட்டோ இந்தோனேசியாவின் அதிபரானார்.
- 1968 - மொரீசியஸ் பிரித்தானியாவிடமிருந்து விடுதலை பெற்றது
- 1992 - மொரீசியஸ் பொதுநலவாய அமைப்பினுள் குடியரசானது.
- 2003 - செர்பியாவின் பிரதமர் சொரான் டின்டிச் கொல்லப்பட்டார்.
- 2006 - தென்னாபிரிக்கா ஒரு நாள் சர்வதேச துடுப்பாட்டமொன்றில் 438/9 ஓட்டங்களைப் பெற்று ஆஸ்திரேலியாவை (434) வென்று சாதனை படைத்தது.
- 2007 - கலிபோர்னியாவில் ஏற்பட்ட பெரும் காட்டுத் தீயினால் 2000 ஏக்கர்களுக்கு மேற்பட்ட நிலப்பரப்பு எரிந்து நாசமடைந்தன.

### பிறப்புக்கள்

- 1925 - லியோ எசக்கி, நோபல் பரிசு பெற்ற ஜப்பானியர்
- 1984 - ஷ்ரேயா கோஷல், பாடகர்

### இறப்புக்கள்

- 1991 - றாக்னர் கிறனிற், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1900)
- 2006 - சுந்தரிபாய், தமிழ்த்திரைப்பட நடிகை





யாழ்ப்பாண தேசியக் கல்வியியற் கல்லூரியில் கடந்த 9 ஆம் திகதி சர்வதேச மகளிர் தினம் பீடாதிபதி ச.அமிர்தலிங்கம் தலைமையில் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் கொண்டாடப்பட்டது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழக கல்வியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி.ஜெயலஷ்மி இராசநாயகம் கலந்து கொண்டதுடன் சிறப்பு விருந்தினராக நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலய அதிபர் திருமதி.குககுமாரி விஜயரகுநாதன் கலந்து சிறப்பித்திருந்தார்.

# வீடியோ கதையாக்கப் போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

இலங்கை அபிவிருத்தி ஊடக நிலையம் ஊடாக தேசிய சமூக வீடியோ கதையாக்கப் போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்போட்டிக்கு 10 வயது தொடக்கம் 35 வயதுக்குட்பட்டவர்கள் பங்குபற்ற முடியும்.

இப்போட்டிக்கான தலைப்புக்களாக, ம்க்களைப் பாதிக்கும் பிரச்சினைகளும் எதிர்பார்க்கப்படும் தீர்வுகளும், தொழிலுக்காக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இடம் பெயர்ந்து வாழ்வோர், கலாசாரம் மற்றும் பல்வகைமை, கிராமிய கல்விக்கான சவா ல்கள், தண்ணீர் மகிமை, பெண் மற்றும் சிறுவர் உரிமை போன்றனவாகும் என்பதுடன் இவ் வீடியோக் கதையானது ஒரு நிமிடம் அடங்கியதாக இருத்தல் வேண்டும்.

போட்டிக்கான நிபந்தனைகளாக, உங்கள் சமூக வீடியோக் கதைகள் ஒரு உரிய தலைப்பு, கால அளவு ஆகியவற்றை பிரதிபலிக்க வேண்டும்.

வீடியோ கதையில் புத்தாக்க சிந்தனை மாத்திரமே மதிப்பிடப் படும், கையடக்க தொலைபேசி வாயிலாகவும் ஒளிப்பதிவு செய்யலாம், மக்கள் பங்குபற்றலுடன் தயாரிக்கப்பட வேண்டும், ஒருவர் எத்தனை வீடியோக் கதை களையும் சமர்ப்பிக்க முடியும், உரிய திகதிக்குப் பின்னர் கிடைக்கும் வீடியோக் கதைகள் நிராகரிக்கப்படும்,

சிறுவர், பெண்கள் மற்றும் மாற்றுஆற்றலுடை யோரை கௌரவப்படுத்தும் கதைகள் நிராகரிக்கப்படும், விளம்பரப்பண்புகள் கொண்ட கதைகள் கருத்தில் கொள்ள ப்படமாட்டா, கதைகள் தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கில மொழியில் அமையலாம்.

இவ்வீடியோக் கதைகள் ஏப்ரல் மாதம் 10 ஆம் திக திக்கு முன்னர் தேசிய சமூக வீடியோ கதையாக்கப் போட்டி இலங்கை அபிவிருத்திக்கான ஊடக நிலையம், இல.429, நாவல, ராஜகிரிய என்ற முக வரிக்கு பதிவுத் தபால் ஊடாக அனுப்ப முடியும் அல்லது இம் முகவரிக்கு நேரடியாக சென்று கையளிக்க முடியும் அல்லது INFO@LDJF.ORG என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் அனுப்பி வைக்க முடி யும்.

இது தொடர்பான மேலதிக தொடர்புகளுக்கு 011 720 9511, 077 287 7007, 077 665 3694 என்ற தொலை பேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# குற்றத்தை ஒப்புக்கொண்டார் முன்னாள் எம்.பி.துமிந்த

(கொழும்பு)

**முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா, கடந்த 2011ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டு வரையான சொத்துக்களை வெளிப்படுத்தவில்லை என்று, அவருக்கு எதிராக தொடுக்கப்பட்டிருந்த வழக்கில், குற்றங்களை ஒப்புக் கொண்டார்.**



அத்துடன். இது தொடர்பாக தொடுக்கப்பட்டுள்ள மூன்று வழக்குகளை விரைவில் முடிவுக்கு கொண்டுவருவதற்கும் அவர் நேற்று. கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் இணக்கம் தெரிவித்தார். (இ-5)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 659

Search for people, places and things Nagendram Home


மது




சிவகுமார்




சந்திரன் சிந்துஜா





விழி



ரதி





சர்மி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# இலங்கைக்கும் சீனாவுக்கும் ஒரே நேரத்தில் இந்தியா வைக்கும் "செக்"



தென்னாசியாவின் ஒரேயொரு மிகப்பாரிய இறங்குதுறைமுகமாக உள்ள கொழும்பு அனைத்துலக இறங்குதுறையின் ஏகபோக ஆட்சியை முடிவிற்குக் கொண்டு வருவதோடு மட்டுமல்லாது இந்திய மாக்கடலில் இந்தியா தனது கரையோர கப்பல் செயற்பாடுகளை விரிவாக்குவதற்கும், அனைத்துலக கப்பல்களை ஈர்ப்பதற்குமான ஒரு மூலோபாயமாக அமைந்துள்ளது.

**இவ்வாறு Foreign Policy ஊடகத்தில் SHREY VERMA எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். இதனை மொழியாக்கம் செய்துள்ளார் நித்திய பாரதி.**

கொழும்பு துறைமுகத்தின் அனைத்துலக கொள்கலன் முனையத்தில் 2014 செப்ரெம்பரில், சீன இராணுவ நீர்மூழ்கி தரித்து நிற்பதற்கான அனுமதி வழ்ங்கப்பட்ட போது, பாதுகாப்பு கட்டமைப்புகளுக்கு பாரிய தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருந்ததால், அப்போது புதிதாகத் தெரிவு செய்யப்பட்டிருந்த பிரதமர் நரேந்திர மோடி அரசுக்கு சோதனையாக இருந்தது.

சீனாவின் விரிவாக்கப்பட்ட கடல் சார் ஆதிக்கம் மற்றும் அதன் துறைமுக அபிவிருத்தி மூலோபாயத்தை உள்ளடக்கிய கரையோர பட்டுப் பாதைத் திட்டமானது, பாரம்பரிய செல்வாக்கு மிக்க இந்திய மாக்கடல் பிராந்தியம் மீதான இந்தியாவின் ஆதிக்கத்திற்கு தொடர்ந்தும் சவாலாக உள்ளது.

எனினும், இந்தியாவின் கப்பல் சட்டங்கள் மீது மாற்றங்கள் மேற்கொள்ளப்படுமாயின் கொழும்பில் சீனாவின் நிதியில் மேற்கொள்ளப்படும், கொழும்பு அனைத்துலக கொள்கலன் முனைய கேந்திர மையம் திட்டம் வெற்றி பெறுவதைத் தடுப்பதற்கும், இதன் வளர்ச்சியைத் தடுப்பதற்கும் உதவும் எனக் கருதப்படுகிறது.

கப்பல் போக்குவரத்தில் ஈடுபடும் பாரிய நிறுவனமான A.P. Moller Maersk Group ஆல் கட்டுப்படுத்தப்படும் மேற்கு இந்தியத் துறைமுகமான APM Terminals Pipavav கடந்த மாதம் 800 Hyundai கார்களை இறக்குமதி - செய்வதற்கான கோரலைப் பெற்றது. இந்தியாவின் கிழக்குக் கரையோரத்திலுள்ள சென்னை துறைமுகத்தில் இந்தக் கார்கள் கப்பல்களில் ஏற்றப்பட்ட பின்னரே.இதற்கான அனுமதி கோர்ப்பட்டது.

இந்தியாவின் இரு துறைமுகங்களுக்கு உள்ளே பொருட்களை ஏற்றிச் செல்வதற்கான கரையோர வணிகச் சட்டத்தில் சிறிய தளர்வை ஏற்படுத்தலாம் என இந்திய அரசாங்க்ம் தீர்மானம் எடுத்து ஐந்து மாதங்களின் பின்னரே 800 கார்கள் கப்பல்களில் ஏற்றப்பட்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அமெரிக்காவின் ஜோன்ஸ் சட்டத்திற்கு ஒப்பானதாகவே, இந்தியாவின் கரையோர வணிகச் சட்டமும் வெளிநாட்டுக் கப்பல்களுக்கு இரண்டாவது இடத்தையும் இந்தியாவின் சரக்குக் கப்பல்களுக்கு முன்னுரிமையையும் வழங்குகிறது.. அதாவது சரக்குகளை ஏற்றுவதற்குப் பொருத்தமான இந்தியாவில் பதியப்பட்ட சரக்குக் கப்பல்கள் இல்லாதுவிடத்து மட்டுமே ஏனைய அனைத்துலகக் கப்பல்களுக்கான அனுமதி வழங்கப்படுகிறது.

ஆனால் தற்போது இந்தச் சட்டத்தில் சிறியதொரு தளர்வு மேற்கொள்ளப்பட்ட பின்னர், இந்தியாவின் கரையோரத்தில் இந்தியச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யாத அனைத்துலகக் கப்பல்களும் குறிப்பாக அனைத்துலக பாரந்தூக்கி கப்பல்களான மேர்ஸ்க் மற்றும் மெடிற்றெறேனியன் கப்பல் நிறுவனம் போன்றன சரக்கு வணிகத்தில் ஈடுபடுவதற்கான அனுமதி வழங்கப்படலாம். இதனை இந்திய அரசாங்கம் நிறுத்த முடியும்.

இந்தியாவின் கரையோர வணிகச் சட்டங்களின் 'ஒட்டுமொத்த தளர்வையும் ஏற்படுத்தும் இறுதி வரைபு ஒன்று விரைவில் பிரதமர் நரேந்திர மோடியால் அங்கீகரிக்கப்படலாம் எனவும், இதன்மூலம் அனைத்துலக பாரிய கப்பல் போக்குவரத்துக்களுக்காக இந்தியாவின் பிராந்திய நீர்நிலைகள் மற்றும் துறைமுகங்கள் திறந்துவிடப்படலாம் எனவும் இந்திய கப்பற்துறை அமைச்சர் நிதின் கட்காரி தெரிவித்தார்.

செலவுக் குறைப்பு மற்றும் பொருளாதார சார் நலன்களைக் கருத்திற்கொண்டே, மிகப் பாரிய கொள்கலன் தாங்கிகள் ஆழ்கடல் துறைமுகங்களுக்குப் பொருட்களைக் கொண்டு செல்வதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்துறைமுகங்களிலிருந்து சிறிய மற்றும் ஆழமற்ற துறைமுகங்களுக்குப் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இந்தியாவின் கரையோர வணிகத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள தளர்வு நிலையானது இப்பிராந்தியத்தில் பொருட்களைக் கொண்டு செல்வதில் சில மாற்றங்களை ஏற்படுத்தலாம் எனக் கூறப்படுகிறது. இந்தியாவில் கடந்த பத்தாண்டாக கப்பல் ஏற்றுமதிச் செயற்பாடுகள் இடம்பெறுகின்ற போதிலும், இந்தியாவின் கொள்கலன்களின் பெரும்பாலானவை கொழும்பு மற்றும் சிங்கப்பூர் துறைமுகங்களின் ஊடாகவே தற்போது இடம்பெறுகின்றன.

ஏனெனில் அனைத்துலக கடல் வழிகளுக்கு அருகில் பாரிய ஆழ்கடல் துறைமுகங்களை இந்தியா தற்போது கொண்டிருக்காமையே இதற்கான காரணமாகும். இந்தியாவின் கரையோர வணிகச் சட்டமானது பிராந்தியக் கடற்பரப்பில் அந்நிய நாட்டுக் கப்பல்கள் போக்குவரத்தில் ஈடுபடுவதற்கான தடைவிதிக்கப்பட்டுள்ளது. தற்போது நடைமுறையிலுள்ள கரையோர வணிகச் சட்டமானது இந்தியாவிற்குள்ளே உள்ள இரு துறைமுகங்கள் தமக்கிடையே பொருட்களைப் பரிமாற்றிக் கொள்வதற்கு இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட கப்பல்கள் மாத்திரமே ஈடுபட முடியும்.

இதேபோன்று இந்தியாவில் பதிவு செய்யப்படாத கப்பல்கள் இந்தியத் துறைமுகங்களில் தரித்து நிற்பதற்கான அனுமதியும் மறுக்கப்பட்டுள்ளன. இவ்வாறான சட்ட நடைமுறைகள் காரணமாக, இந்தியத் துறைமுகங்களில் தமது கப்பல்களைத் தரித்து நிறுத்துவதற்குப் பதிலாக சில வெளிநாடுகள் தமக்குச் சொந்தமான கப்பல்களைத் தரித்து நிறுத்துவதற்கு கொழும்புத் துறைமுகத்தைப் பயன்படுத்துகின்றன.

கொழும்பு அனைத்துலக இறங்குதுறைமுகம் போன்ற துறைமுகங்கள் மற்றும் இலங்கை துறைமுக அதிகார சபை போன்றன இந்தியப் பொருட்களின் ஏற்றுமதிச் செயற்பாடுகளை அதிகம் மேற்கொள்கின்றன. இந்தியாவின் வெளிநாட்டுக் கப்பல் போக்குவரத்துக்களை கொழும்பு தனது அதிகாரத்தின் கீழ் செயற்படுத்துகிறது.

2014-15 வரையான காலப்பகுதியில் இந்தியாவின் கடல்வழிச் செயற்பாட்டின் 48 சதவீதம் கொழும்பின் கட்டுப்பாட்டின் கீழ் இடம்பெற்றது. இதேபோன்று கடல்வழியின் ஊடான இந்தியாவிற்கான வெளிநாடுகளின் பொருள் ஏற்றுமதி இறக்குமதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் மையமாக சிங்கப்பூர் இரண்டாம் இடத்தில் விளங்குகிறது. இச்செயற்பாடுகளின் 22 சதவீதமானது சிங்கப்பூரின் ஊடாக மேற்கொள்ளப்படுகிறது.

இந்தியாவின் மிக நெருங்கிய துறைமுகம் ஒன்றிலிருந்து 175 கடல் மைல்கள் தூரத்தில் அமைந்துள்ள கொழும்பு அனைத்துலக இறங்குதுறையானது இந்தியாவிற்கான பொருள் இறக்குமதி மையமாக விளங்குகிறது.

இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்குமான கடல்வழிப் போக்குவரத்து ஏற்றுமதி இறக்குமதிச் செயற்பாடுகள் 45 சதவீதமாகக் காணப்படுவதாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்படுகிறது. ஆகவே, இந்தியத் துறைமுகங்கள் நோக்கி கப்பல்களைத் திசைதிருப்புவதற்காக அனைத்துலக கப்பல் போக்குவரத்து வழிகள் தொடர்பாக இந்திய அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் எந்தவொரு கோட்பாட்டு மாற்றங்களும் சீனாவின் நிதி ஆதரவுடன் செயற்படும் கொழும்பு அனைத்துலக இறங்குதுறைமுகத்தின் எதிர்கால செழுமையில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தலாம்.

கொழும்புத் துறைமுகத்தில் தங்கியிருப்பதைக் குறைப்பதற்கும், குறிப்பாக இது சீன அரசின் ஆதரவில் செயற்படுகின்றமை போன்றன இந்தியா தனது கடல் சார் வணிகச் சட்டத்தில் தளர்வை ஏற்படுத்துவதற்கான காரணிகளாக இருக்கலாம்.

இதுமட்டுமல்லாது, இந்தியாவின் தென்கரையோரத்தில் கேரளா மாநிலத்தில் அமைந்துள்ள விழிஞ்சத்தில் ஆழ்கடல் துறைமுகம் அமைக்கப்படுகிறது. புதிதாக அமைக்கப்படும் விழிஞ்சம் துறைமுகத்திற்கு கரையோர வணிகச் சட்டம் தளர்த்தப்படுவதற்கான திட்டத்தை இந்திய அரசாங்கம் கடந்த டிசம்பரில் அறிவித்தது. இத்துறைமுகத்தை நிர்மாணிப்பதற்கான பணிகள் 2018 நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. விழிஞ்சம் துறைமுகமானது கிட்டத்தட்ட 66 அடி ஆழத்தில் அமைக்கப்படவுள்ளது. இது ஒரு ஆழ்கடல் துறைமுகமாக அமைக்கப்படும்.

எதிர்காலத்தில் கொழும்பு அனைத்துலக இறங்கு துறைமுகத்திலிருந்து கப்பல்களை விழிஞ்சம் போன்ற இந்தியத் துறைமுகங்கள் நோக்கி திசை திருப்புவதை இந்தியா நோக்காகக் கொண்டுள்ளதால் இந்திய அரசாங்கத்தின் தளர்த்தப்படும் கடல்வணிகச் சட்டம், தொடருந்துப் பாதைகள் மற்றும் வீதிகள் போன்றவற்றைத் தொடுக்கும் வகையில் உருவாக்கப்படும் விழிஞ்சம் ஆழ்கடல் துறைமுகம் போன்றன கணிசமான செலவுகளைச் சிக்கனப்படுத்துவதையும் அனைத்துலக கப்பல்கள் மூலம் பாரிய பொருளாதார நலன்களையும் அடைந்து கொள்ளலாம்.

தென்னாசியாவின் ஒரேயொரு மிகப்பாரிய இறங்குதுறைமுகமாக உள்ள கொழும்பு அனைத்துலக இறங்குதுறையின் ஏகபோக ஆட்சியை மட்டும் முடிவிற்குக் கொண்டு வருவதோடு மட்டுமல்லாது இதற்கப்பால் இந்திய மாக்கடலில் இந்தியா தனது கரையோர கப்பல் செயற்பாடுகளை விரிவாக்குவதற்கும், அனைத்துலக கப்பல்களை ஈர்ப்பதற்குமான ஒரு மூலோபாயமாக அமைந்துள்ளது.

இதற்கும் மேலாக, கொழும்பின் சீன ஆதரவுத் துறைமுகம் தொடர்பில் இந்தியா கொண்டுள்ள பூகோள அரசியல் ஆபத்தைக் குறைப்பதற்கான இதன் முயற்சிகளுக்கும் இந்தியாவின் இந்த மூலோபாயமானது சீனாவின் இந்திய மாக்கடல் மீதான செல்வாக்கைக் குறைப்பதற்கும் துணைநிற்கும்.

# மகிந்த ராஜபக்ஷவிற்கு எதிரான வழக்கு ஜூன் மாதம் 23ஆம் திகதி விசாரணைக்கு

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட ஏழு பேருக்கு எதிரான வழக்கு எதிர்வரும் ஜூன் மாதம் 23 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட உள்ளது..

2015 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் பிரசாரங்களுக்காக மக்களை ஏற்றிச் சென்ற இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பேருந்துகளுக்கு 142 மில்லியன் ரூபா கட்டணம் செலுத்த வேண்டியிருப்பதாக குற்றம் சுமத்தி வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

கட்டணத்தைச் செலுத்துமாறு கோரி மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட ஏழு பேருக்கு இலங்கை போக்குவரத்துச் சபை வழக்குத் தொடர்ந்திருந்தது.

இந்த மனு கொழும்பு வர்த்தக நீதிமன்றில் நேற்று முன்தினம் பரிசீலனை செய்யப்பட்டது.

முறைப்பாட்டில் திருத்தம் செய்ய அனுமதியளிக்குமாறு இலங்கை போக்குவரத்துச் சபையின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் நீதிமன்றில் விடுத்த கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

கோரிக்கையை ஏற்றுக் கொண்ட நீதவான் சிரான் குணரட்ன, வழக்கை ஜூன் மாதம் 23 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்வதாக அறிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, முன்னாள் ஜனாதிபதியின் அலுவலகப் பிரதானி காமினி செனரட், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முன்னாள் செயலாளர், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் செயலாளர் உள்ளிட்ட ஏழு பேருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தேர்தலின் போது மகிந்த ராஜபக்ஷவின் சார்பில் அநுராதபுரத்தில் நடத்தப்பட்ட முதலாவது பிரசாரக் கூட்டம் முதல் கொட்டாவ பிரதேசத்தில் நடத்தப்பட்ட இறுதிப் பிரசார கூட்டம் வரையில் இலங்கை போக்குவரத்துச் சபை பேருந்துகளை வழங்கியுள்ளது.

இந்த பேருந்துகளுக்காக 50 இலட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளதுடன், எஞ்சிய 142 இலட்சம் ரூபா இதுவரையில் செலுத்தப்படவில்லை என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (இ-5)



யாழ்.கிறிஸ்தவ சபைகள் ஸ்தாபனங்களின் ஐக்கியத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் இலங்கை கிறிஸ்தவ சம்மேளனத் தலைவர் ஜெரோம் விக்னேஸ்வரன் உடனான அனைத்து திருச்சபைகளின் போதர்கள் சந்திப்பு ஒன்று அண்மையில் இடம் பெற்ற போது...

## அலங்கார உற்சவ விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்பாணம் -நீர்வையம்பதி அருள்மிகு வீரபத்திரப் பெருமான் ஆலய அலங்கார உற்சவ விஞ்ஞாபனம் நாளை ஞாயிறுக்கிழமை ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

ஆலய குரு பிரம்மஸ்ரீ. தி.குமார்சதாசிவ சர்மா தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் சிவஸ்ரீ. இ.சுவாமிநாதக் குருக்கள் அலங்கார உற்சவக்குருக்களாக பங்கேற்கவுள்ளார். (இ-5)

# சர்வதேச மகளிர் தினம்-2016 திறந்த இலக்கியப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு நல்லூர் பிரதேச செயலகம் ஊடாக பிரதேச மக்களிடையே கவிதை, கட்டுரை,சிறுகதை போன்ற போட்டிகள் இடம் பெறவுள்ளதாகவும் அதற்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளதாகவும் நல்லூர் உதவிப் பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.இப் போட்டியில் நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஆண்,பெண் என இருபாலாரும் பங்கு பற்ற முடியும்.

மேலும் ஆக்கங்கள் அனைத்தும் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் சார்ந்தவையாக இருத்தல் வேண்டும்.

அத்துடன் இவ் ஆக்கங்கள் சுய ஆக்கங்களாக இருப்பதுடன் இதற்கு முன்பு போட்டிகளுக்கோ, பிரசுரங்களுக்கோ அனுப்பப்படாத ஆக்கங்களாக இருத்தல் வேண்டும்.

சமர்ப்பிக்கப்படும் ஆக்கங்கள் A4 தாளில் ஒரு பக்கத்தில்மாத்திரம்தட்டச்சுசெய்தோ கையெழுத்திலோ சமர்ப்பிக்க முடியும்.

ஆக்கங்கள்ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 2016. 03.24 ஆகும்.நல்லூர் பிரதேச செயலகத்தில் மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் குறித்த திகதிக்கு முன் ஆக்கங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

போட்டியில் வெற்றியீட்டுவோருக்கு பரிசில்களும் சான்றிகழ்களும் வழங்கப்படும்.

கிராம உத்தியோகத்தரின் அத்தாட்சிப்படுத்தலுடன் ஆக்கங்கள் சமர்ப்பிக்கப்படுவது கட்டாயமானதாகும்.

நல்லூர் பிரதேச செயலகத்தில்கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் இப் போட்டிகளில் பங்கு பற்றுவது தவிர்க்கப்பட்டுள்ளது.

**கவிதை**

பெண்ணியம் சார்ந்த தலைப்பில் பத்து செய்யுளடிகளுக்கு உட்பட்ட கவிதையாகவும் புதுக் கவிதையாயின் முப்பது வரிகளுக்கு உட்பட்டதாகவும் அமைய வேண்டும்.


**சிறுகதை**

பெண்ணியம் சார்ந்த தலைப்பில் பொதுவான சிறுகதை அமைப்புவிதிகளுக்குஅமைய வேண்டும்.

**கட்டுரை**

பெண்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள்,அவற்றுக்கான தீர்வுகள், பிரச்சினை களிலிருந்து மீள்வதற்கான வழிகாட்டல்கள் சம்பந்தமான கருப்பொருளில் 1500-2000 சொற்களில் இருத்தல் வேண்டும். (இ-5)

## விழிப்புணர்வு பதாகை திரைநீக்கம்



பனை அபிவிருத்திச் சபையின் அபிவிருத்திப் பகுதியால் பனை வள அழிவினை தடுத்து பாதுகாக்கும் நோக்கில் யாழ்.மாவட்டத்தின் பிரதேச செயலர் பிரிவுகளில் விழிப்புணர்வு பதாகைகள் மக்கள் பார்வையில் படும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன.

இதன்முதற்பதாகையினை தெல்லிப்பழை பிரதேச செயலக நுழைவாயிலில் மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி அண்மையில் திரைநீக்கம் செய்து வைத்தார்.

இப்பதாகையின் முதல் செய்தி "தறிக்காதே தரணிக்கு நான் தேவை" என்றும் பனை மரத்தின் இடைமரத்தில் "எமது வளம் பாதுகாப்போம்" எனும் குறியீடும் அமைந்துள்ளது. (இ-9)

## ஒளிமயமான நகரம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரியில் "ஒளிமயமான நகரம்" எனும் கருத்திட்டத்தில் நகரசபை எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் வீதி விளக்குகள் பொருத்தப்பட உள்ளதாக நகராட்சி மன்ற செயலாளர் கா.சண்முகதாசன் தெரிவித்தார்.

நகரில் பிரதான வீதிகள் மற்றும் முக்கிய சந்திகளில் தற்சமயம் வீதி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. எனினும் நகரின் அனைத்து பகுதிகள் மற்றும் வீதிகளுக்கும் விளக்குகளை பொருத்தி நகரை முழுமையாக ஒளிமயமாக்குவதே எமது திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்திற்கு நகராட்சி மன்றத்தின் 2016 ஆம் ஆண்டு வரவுசெலவுத்திட்டத்தில் சுமார் பத்து இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் இவ்வேலைகள் எதிர்வரும் வாரத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் நகராட்சி மன்ற செயலாளர் மேலும் தெரிவித்தார்.(இ-89)

# செய்தித்துளிகள்

## வாகன விபத்தில் 9 வயது சிறுமி பலி

கலேவெல - கெக்கிராவ வீதியில், பல்பெதியாவ பிரதேசத்தில் நேற்றுக்காலை இடம்பெற்ற வாகன விபத்தில் 9 வயது சிறுமி பலியாகியுள்ளார். ஆட்டோ எதிர்த் திசையில் வந்த சிறிய ரக லொறி ஒன்றில் மோதியதால் ஏற்பட்ட விபத்திலேயே குறித்த சிறுமி உயிரிழந்துள்ளார்.

ஆட்டோவில் பயணித்த 3 சிறுமிகள் காயமடைந்த நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது ஒரு சிறுமி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். தேவஹூவ பிரதேசத்தைச் சேர்ந்த சிறுமியே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-5)

## மகளிர் தின நிகழ்வு இன்று

(சித்தங்கேணி)

பெண் விடுதலை சிந்தனை அமைப்பினால் நடத்தப்படும் மகளிர் தின நிகழ்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இல.62,கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையில் திருமதி ஸ்ரீலேக்கா பேரின்பகுமார் தலைமையில் இடம் பெறும்.

இந் நிகழ்வில் யு.என்.எச்.சி.ஆர்.நிறுவன கிளிநொச்சி சமூக சேவை உத்தியோகத்தர் திருமதி வைதேகி பாலமுரளியின் சிறப்புரையும் பண்டத்தரிப்பு மறுமலர்ச்சி மன்றத்தின் விவாதநிகழ்வுமற்றும் கலைநிகழ்வுகளும் இடம்பெறும். (இ-17)

## இலங்கை - கனடா இடையேயான உறவை விருத்தி செய்ய நடவடிக்கை

கனடாவுக்கான இலங்கையின் உயர்ஸ்தானிகர் அஹ்மட் ஜவாட் கனேடிய பொதுச்சபையின் சபாநாயகர் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது இலங்கையில் கனடாவின் முதலீடுகள் குறித்து ஆராயப்பட்டுள்ளது.

அத்துடன் இலங்கையினதும் கனடாவினதும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் உறவை விருத்தி செய்துகொள்வது தொடர்பாகவும் இதன்போது ஆராயப்பட்டுள்ளதாக இலங்கையில் உள்ள கனேடிய உயரஸ்தானிகரம் தெரிவித்துள்ளது.

எனினும் பேச்சுவார்த்தை இடம்பெற்ற நாள் குறித்த தகவல்களை அது வெளியிடவில்லை. (இ-5)

## துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் மனைவி பலி; கணவன் காயம்

செவனகல, அம்பிலிப்பிட்டிய பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் பெண் ஒருவர் பலியானதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் பெண்ணின் கணவர் கடும் காயங்களுக்கு இலக்காகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், சம்பவத்தின் பின்னணி குறித்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (இ-5)

## வடக்கு மாகாணத்தில் பொருளாதார வளர்ச்சி பற்றிய கலந்துரையாடல்

யாழ்.முகாமையாளர் சம்மேளன ஏற்பாட்டில் "வடக்கு மாகாணத்தின் பொருளாதார வளர்ச்சி" பற்றிய கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30மணிக்கு யாழ்.யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் யாழ்.இந்தியத்துணைத்தூதர் ஆ.நடராஜன் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றவுள்ளார்.

ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (இ-5)

## சிவபூமி கோட்டம் திறப்பு விழா இன்று

பளை இயக்கச்சி கொற்றாண்டார் குளம் வீதியில் அமைக்கப்பட்டுள்ள சிவபூமி கோட்டம் திறப்பு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.22 - 4-55 மணி வரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது.

சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெறும்.இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக ஆன்மீகச் சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் கலந்து கொள்ளவுள்ளார்.

இயக்கச்சி வாழ் சிறார்களின் நன்மை கருதி அவர்களுக்கான அறநெறி வகுப்புக்களை நடத்தும் பொருட்டும் சில சமூகப் பணிகளை மேற்கொள்வதற்காகவும் இந் நிலையம் உருவாக்கப்பட்டுள்ளது. (2-3)

# தமிழ் சினிமா வரலாறு

120

## சிவாஜி கணேசன் நடித்த ‘திரும்பிப் பார்’

அப்போது கருணாநிதிக்கு அரசியல் தொடர்பான வேலைகள் அதிகமாக இருந்தன. எனவே, அவர் ஏ.வி.பி. ஆசைத்தம்பியை சிபார்சு செய்தார்.

அதற்கு சுந்தரம் சம்மதிக்கவே, ஆசைத்தம்பி சேலம் சென்று வசனம் எழுதினார்.

சர்வாதிகாரி படத்தில் போர்க்களக் காட்சிகள் பிரமாண்டமாக எடுக்கப்பட்டன. ஆங்கிலப் படத்தில் நடிகர்கள் எந்த மாதிரி உடை அணிந்திருந்தார்களோ அதே மாதிரி உடை தயாரித்துக் கொடுக்கப்பட்டன.

படம் வெற்றி பெற்றது.

### பெயர் மாற்றம் ஏன்?

இப் படத்துக்கு வீரவாள் என்ற பெயருக்குப் பதிலாக சர்வாதிகாரி என்ற பெயர் சூட்டப்பட்டதன் பின்னணியில் ஒரு சுவையான கதை இருக்கிறது.

படப்பிடிப்பு நடந்து கொண்டிருக்கும்போது காலை 8 மணிக்கு வரவேண்டிய இரண்டு சாரட்டு வண்டிகள் குறித்த நேரத்தில் வரவில்லை. அப்போது புரோடக்ஷன் மனேஜராக இருந்தவர் எம்.ஏ.வேணு. பிற்காலத்தில் சம்பூர்ண ராமாயணம் படத்தை தயாரித்தவர்

அவர் சாரட்டு வண்டிகளை வேறு இடத்துக்கு அனுப்பி விட்டார். இதை அறிந்த சுந்தரம் கோபம் அடைந்து அவரை அழைத்து டோஸ் விட்டார்.

என்ன மேன்! நான் ஒரு இடத்துக்கு வண்டியை அனுப்பச் சொன்னால், நீ வேறு இடத்துக்கு அனுப்புகிறாய்? நீ என்ன பெரிய சர்வாதிகாரியா? என்று சீறினார். அருகில் இருந்த எம்.ஜி.ஆர். இதைக் கேட்டுக் கொண்டிருந்தார்.



சற்று நேரம் திட்டிய பிறகு சுந்தரம் அமைதியானார். அதன்பின் அவரிடம் எம்.ஜி.ஆர். சென்றார்.

என்ன ராமச்சந்திரன்? ஏதாவது வேணுமா? என்று சுந்தரம் கேட்டார்.

ஒன்றும் வேண்டாம். ஒரு சிறு யோசனை? எதுவாக இருந்தாலும் தயங்காமல் சொல்லலாம்!

நம் படத்துக்கு வீரவாள் என்ற பெயர் வைத்திருக்கிறீர்கள்.

ஆமாம் அது தானே சரியான மொழி பெயர்ப்பு!

ஆனால் அதைவிட சர்வாதிகாரி என்று பெயர் வைத்தால் பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன் என்றார் எம்.ஜி.ஆர்.

சுந்தரம் கொஞ்சம் யோசித்தார் பிறகு பெரிதாக சிரித்தார்.

நான் வேணுவைத் திட்டும் போது சர்வாதிகாரி என்று சொன்னேன். இந்தப் படத்துக்கு சர்வாதிகாரி என்பது பொருத்தமான பெயர்! என்று கூறிவிட்டு, நல்ல யோசனை தெரிவித்ததற்காக எம்.ஜி. ஆரைப் பாராட்டினார்.

வீரவாள் என்ற பெயர் உடனடியாக சர்வாதிகாரி என்று மாற்றப்பட்டது.

### சிங்களப்படம்

1953 ஆம் ஆண்டு சுஜாதா என்ற பெயரில் சிங்களப் படம் ஒன்றை டி.ஆர்.சுந்தரம் தயாரித்தார். இலங்கையைச் சேர்ந்த குணரத்னா என்பவருடன் கூட்டாக சேர்ந்து தயாரித்த படம் இது.

படப்பிடிப்பின் பெரும் பகுதி இலங்கையில் நடந்தது. சிங்கள நடிகர்- நடிகைகள் நடித்தனர். படம் பிரமாதமாக ஓடியது. அதைத் தொடர்ந்து அடுத்த 7 ஆண்டுகளில் 7 சிங்களப் படங்களைக் கூட்டாக எடுத்தார் சுந்தரம். இடையிடையே தமிழ், தெலுங்கு, கன்னடப் படங்களும் தயாரிக்கப்பட்டன.

### திரும்பிப்பார்

இதற்கிடையே கருணாநிதி சிவாஜிகணேசன் அறிமுகமான பராசக்தி படம் வெளிவந்து வரலாறு படைத்தது.

கருணாநிதியும், சிவாஜிகணேசனையும் வைத்து மாடர்ன் தியேட்டர் சார்பில் படம் தயாரிக்க சுந்தரம் விரும்பினார். கருணாநிதி அரசியலிலும், திரைப்படத்துறையிலும் பிசியாக இருந்த போதிலும் சுந்தரத்தின் அழைப்பை ஏற்று, திரும்பிப் பார் கதையை உருவாக்கி, வசனத்தையும் எழுதிக் கொடுத்தார்.

இந்தப்படத்தில் சிவாஜிக்கு ஆன்டி ஹீரோ வேடம். *(தொடரும்)*

---

### சிறுநீரக நோயிலிருந்து மக்களைப் பாதுகாக்க

# நான் பேச்சுடன் மட்டும் நின்றுவிடாது அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றேன்

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

பேச்சுடன் மட்டும் நின்றுவிடாது நிலையான நிகழ்ச்சித் திட்டம் ஒன்றினூடாக சிறுநீரக நோயிலிருந்து நாட்டையும் மக்களையும் விடுவிக்கும் தேசிய பொறுப்பை நிறைவேற்றுவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். நேற்று முன்தினம் முற்பகல் மதவாச்சி மைத்திரிபால சேனாநாயக்க தேசிய பாடசாலையில் இடம்பெற்ற சர்வதேச சிறுநீரக தின தேசிய நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார்.

சிறுநீரக நோயாளிகளின் வாழ்க்கை அவலங்களை நன்கு தெரிந்த ஒருவர் என்ற வகையில் அதன் பிடியிலிருந்து அப்பாவிப் பொதுமக்களை மீட்பதற்கு தான் மிகுந்த அர்ப்பணிப்புடன் உள்ளதாக தெரிவித்த ஜனாதிபதி, நாட்டிலுள்ள எல்லா மக்களினதும் இலங்கைக்கு உதவி வழங்கும் நட்பு நாடுகளினதும் உதவியுடன் இந்தச் சவாலை வெற்றி கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

சிறுநீரக நோய் ஒழிப்பு தொடர்பில் எவ்வித வரையறைகளுமின்றி பௌதீக வளங்களை பெற்றுக் கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும் சிறுநீரக நோய் ஒழிப்புப் பிரிவை பலப்படுத்தி இந் நோயை தவிர்ப்பதற்கான பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுத்துள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

சிறுநீரக நோய்க்கு விவசாய சமூகத்தினர் பெருமளவு பாதிக்கப்படுவதற்கு பீடை கொல்லி, கிருமிநாசினிகள் மற்றும் இரசாயன உரப்பாவனை போன்றவையே முக்கிய காரணமாகும் என இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள ஆய்வுகளிலிருந்து கண்டறியப்பட்டுள்ளதுடன், அதற்கு தீர்வாக கூட்டு உரங்களை அறிமுகப் படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும் அதற்கு எத்தகைய விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டாலும் இன்றுவாழும் மக்களைப் போன்றே நாளை பிறக்கவிருக்கும் பிள்ளைகளுக்காக மேற்கொள்ளும் கடினமான பணியென்ற ரீதியில் இப்பணியில் ஒன்றிணையுமாறு விவசாய சமூகத்தினருக்கு அழைப்பு விடுப்பதாக ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

இரசாயன உரப்பாவனை தொடர்பாக எமக்கு ஆலோசனை வழங்கிய எந்தவொரு அபிவிருத்தியடைந்த உலக நாடும் இன்றுவரை இரசாயன உரத்தினை பயன்படுத்துவதில்லையென்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

உலகின் அபிவிருத்தியடைந்த நாடுகள் இன்று பால்மா பாவனையிலிருந்து படிப்படியாக நீங்கிவருவதாகவும் பால்மா பாவனைக்குப் பதிலாக தேசிய பசும்பால் பாவனைக்கு மக்களை ஊக்கப்படுத்துவதன் மூலம் ஆரோக்கியமான ஒரு சமூகத்தை கட்டியெழுப்ப முடியும் என்றும் தெரிவித்தார்.

முப்படையினர் மற்றும் சிவில் பாதுகாப்புப் பிரிவின் ஒருநாள் சம்பளம் சிறுநீரக நிதியத்திற்கு அன்பளிப்பு செய்யும் நிகழ்வும் இதன்போது இடம்பெற்றது.

“சுவைய” சஞ்சிகையின் சிறுநீரக நோய் ஒழிப்பு விசேட இதழின் முதற்பிரதியும் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

சிறுநீரக நோய்க்கு ஆளான குடும்பங்களின் பிள்ளைகளின் ஆக்கங்கள் அடங்கிய வடமேல் மாகாண சபையினால் தயாரிக்கப்பட்ட நூலொன்றும் ஜனாதிபதியிடம் இச்சந்தர்ப்பத்தில் கையளிக்கப்பட்டது.

அனுராதபுர வைத்திய சாலையுடன் இணைந்ததாக நிர்மாணிக்கப்படும் சிறுநீரக நோயாளிகளின் தங்குமிட கட்டடத் தொகுதியின் திட்டமும் ஜனாதிபதியிடம் இதன்போது சமர்ப்பிக்கப்பட்டது.

கொழும்பு மியூஸியஸ் கல்லூரியின் பழைய சாரணர் சங்கத்தினால் ரம்பேவ பிரதேச செயலாளர் பிரிவின் அம்பகஹாவெவ கிராமத்தை முன்மாதிரிக் கிராமமாக அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டமும் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

சிறுநீரக நோயாளிகள் உள்ள குடும்பங்களின் பிள்ளைகளுக்காக சிறுநீரக நோய் ஒழிப்பு ஜனாதிபதி செயலணியினால் வழங்கப்பட்ட புலமைப் பரிசில்களும் இதன்போது வழங்கி வைக்கப்பட்டதோடு, அதன் அடையாளமாக சில பிள்ளைகளுக்கான புலமைப் பரிசில்களை ஜனாதிபதி வழங்கிவைத்தார்.

தெரிவு செய்யப்பட்ட சில குறைந்த வருமானம் பெறும் சிறுநீரக நோயாளர் குடும்பங்களுக்கு வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்காக தேசிய வீடமைப்பு அதிகார சபை, “மைத்ரி மித்ரோ” அமைப்பு, ஹொல்சிம் நிறுவனம், சம்சன் ரஜரட்ட டைல்ஸ் நிறுவனம் ஆகியன அனுசரணை வழங்குவதோடு சிவில் பாதுகாப்புத் திணைக்களமும் பங்களிப்புக்களை வழங்குகின்றது.

அமைச்சர் துமிந்த திஸாநாயக்க, சுகாதார, போசணை, சுதேச வைத்தியத்துறை அமைச்சராக பதிற்கடமை புரியும் மொகமட் காஸீம், முன்னாள் அமைச்சர் திஸ்ஸ கரலியத்த, ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ.அபேகோன், சுகாதார, போசணை, சுதேச வைத்தியத்துறை அமைச்சின் செயலாளர் அனுர ஜயவிக்ரம, ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் ரோகண கீர்த்தி திஸாநாயக்க, சிறுநீரக நோய் ஒழிப்பு ஜனாதிபதி செயலணியின் பணிப்பாளர் அசேல இத்தவெல ஆகியோர் உட்பட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (இ-5)

நியாயத்தை விட கருணை உயர்ந்தது. புனிதமானது.

-கர்மயோகி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## கொக்குக்கு நரி வைத்த விருந்தும் நரிக்கு கொக்கு வைத்த விருந்தும்

ஈ.வே.ரா பெரியாரின் வீட்டிற்கு ஒருமுறை ராஜாஜி என்றழைக்கப்படும் இராஜகோபாலாச்சாரியார் சென்றிருந்தார். பெரியார் கடவுள் இல்லை என்று வாதிடும் நாஸ்திகர்.

ராஜாஜியோ அதிக கடவுள் நம்பிக்கை கொண்ட பிராமண குலத்தவர். பெரியாரின் வீட்டில் தங்கிய ராஜாஜி அதிகாலைப் பொழுதில் குளியல் அறையில் நீராடி விட்டு வெளியே வருகிறார்.

அவர் வெளியே வருகின்றபோது பெரியார் திருநீற்றுத் தட்டுடன் காத்திருந்தார். ராஜாஜிக்கு பேரதிர்ச்சி.

கடவுளே! இல்லை என்ற கொள்கையுடைய பெரியார் திருநீற்றுத் தட்டுடன் நிற்பதே அதிர்ச்சிக்கான காரணம். நீங்கள்... என்றவாறு ஏதோ ராஜாஜி சொல்ல முற்படுகின்றார்.

பரவாயில்லை! எங்கள் வீட்டுக்கு வந்தவருக்கு என்ன தேவை என்பதை அறிந்து அதை நிறைவேற்றுவது என் கடமை என்று பதிலளிக்கிறார் பெரியார்.

வந்தவர்களை வரவேற்பது எப்படி என்ற தத்துவம் இங்கு உணர்த்தப்படுகிறது. தேவை அறிந்து செயற்படுவது அவசியம் என்பதே இங்கு கவனிக்கத்தக்க விடயம்.

யாருக்கு எது தேவை என்பதை அறிந்து செயற்படாவிட்டால் கொக்குக்கு நரி விருந்து வைத்த கதையாகவும் நரிக்கு கொக்கு சாப்பாடு கொடுத்த கதையாகவும் நிலைமை முடிந்து விடும். அது சரி கொக்கு... நரி... என்ன கதை அது என்று நீங்கள் கேட்பதும் புரிகிறது.

கொக்கும் நரியும் மிகவும் அந்நியோன்னியமாக நட்புக் கொண்டிருந்தன. ஒரு நாள் நரியார் கொக்கின் வீட்டிற்கு சென்றார். நரியின் வருகையால் மகிழ்சியடைந்த கொக்கு, நரியாரே! இன்று எங்கள் வீட்டில் நீங்கள் சாப்பிட்டுவிட்டுத்தான் செல்லவேண்டும் என்றது.

கொக்கின் உபசரிப்பை நரி ஏற்றுக்கொண்டது. அவசர அவசரமாக மீன் சுவழ் காய்ச்சிய கொக்கு அதனைத் தனது பாத்திரமாகிய சுசாவில் விட்டு நரிக்குக் கொடுத்தது.

என்ன செய்வது மீன் சுவழ் வாசனை மூக்கைத் துளைத்தாலும் நரியாரால் குடிக்கவே முடியவில்லை.

கொக்கின் சுரிய சொண்டு சுசாவில் உள்ள கூழைக் குடிப்பதற்கு உகந்தது. ஆனால் நரியார் தன் நாவால் தட்டி எடுத்துக் குடிப்பதால் எதுவும் செய்ய முடியாமல் சுவழ் நன்று எனக் கூறிவிட்டு விடைபெற்றுக் கொண்டார்.

இதேபோன்று நரியாரின் வீட்டுக்கு ஒருநாள் கொக்கு சென்றது. நன்றி மறவாமல் நரியும் கொக்குக்கு மீன் சுவழ் காய்ச்சி விருந்து வைத்தது.

தட்டையான கோப்பையில் கூழை ஊற்றி கொக்காரே கூழை நன்றாக சுவைத்துக் குடியும் என்றது.

தட்டையான பாத்திரத்தில் உள்ள கூழை சுரிய சொண்டால் எப்படிக் குடிக்க முடியும். கொக்கின் முயற்சி தோல்வியில் முடிய சுவழ் நன்று எனக் கூறிவிட்டு கொக்கு தன் வீடேகிறது.

நரியும் கொக்கும் விருந்து வைப்பதில் கவனம் செலுத்திய அளவில் பாத்திரம் தொடர்பில் கவனம் செலுத்தவே இல்லை. பாத்திரம் பொருத்தமாக இல்லாததால் இருவருமே கூழைக் குடிக்க முடியாமல் போயிற்று. இந்தக் கதையின் தத்துவம் மிகவும் முக்கியமானது.

எதையும் பொருத்தம் பார்த்து ஏற்புடையதா? என்று ஆராய்ந்து செய்வதே நல்லது.

தற்போது வடக்குக் கிழக்கில் 65 ஆயிரம் வீடுகள் அமைப்பதற்கான முயற்சிகள் நடந்து வருகின்றன. இதன் முதற்கட்டமாக கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் இந்த வீடுகள் அமைப்பதற்கான ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதில் சிக்கல் என்னவெனில், அமைக்கப்படும் வீடுகள் எங்கள் மக்களின் இல் இடத்துக்கு பொருத்தமானதல்ல என்பதுதான். பொருத்தமில்லாத ; மக்களுக்கு அசௌகரியமான; பழக்கப்படாதா வீட்டைக் கட்டிக் கொடுப்பதால் என்ற பயன் என்றுணர்வது கட்டாயம்.

அதிக செலவில் பொருத்தமில்லாத வீட்டைக்கட்டிக் கொடுப்பது என்பது, கொக்கும் நரியும் விருந்து வைத்த பாத்திரத்துக்கு ஒப்பானது என்பதால் குறித்த வீடுகள் தொடர்பில் மீளாய்வு செய்வது ராஜாஜி விடயத்தில் பெரியார் நடந்தது போல செயற்படுங்கள் என்பதே மக்களின் கோரிக்கை.

## நாணய நிதிய கருத்தரங்கு; நிதியமைச்சர் இந்தியா பயணம்

நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க இந்தியாவுக்கு புறப்பட்டுச் சென்றுள்ளதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் உயர்மட்ட கருத்தரங்கொன்றில் கலந்து கொள்வதற்காக நிதியமைச்சர் இந்தியா சென்றுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் இந்த கருத்தரங்கு புதுடெல்லியில் நேற்று ஆரம்பமாகி நாளை 13-ம் திகதி வரை நடைபெறவுள்ளது.

கருத்தரங்கில் ஆசிய பசுபிக் நாடுகளின் நிதியமைச்சர்கள், வங்கிகளின் தலைவர்கள், பொருளாதார நிபுணர்கள் உட்பட 400க்கும் அதிகமானவர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

பிராந்திய ரீதியில் நிலவும் பொருளாதார சவால்கள் மற்றும் அதற்கான தீர்வுகள் குறித்து இந்த கருத்தரங்கில் கலந்துரையாடப்பட உள்ளன. (செ-12)

## 28 பவுண் நகை திருட்டு

(பேசாலை)

மன்னார் பேசாலையில் உள்ள வீடு ஒன்றில் நேற்று வெள்ளிக்கிழமை திருட்டுச் சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

இதில் 28 பவுண் தங்க நகைகள் மற்றும் 80 ஆயிரம் ரூபாய் பணமும் திருடப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை வீட்டின் உரிமையாளர் பெறுமதியான பொருட்கள் வைக்கப்பட்டிருந்த அறையின் கதவை திறந்த நிலையில், குறித்த அறையில் வைக்கப்பட்டிருந்த அனைத்துப் பொருட்களும் சிதறிக் கொட்டப்பட்டிருந்ததுடன் மேற்படி திருட்டும் இடம்பெற்றுள்ளது கண்டறியப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக வீட்டின் உரிமையாளர் தலைமன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

வீட்டின் யன்னல் கம்பிகளை உடைத்து திருடர்கள் வீட்டுக்குள் நுழைந்து திருடியிருப்பதாக தெரிய வருகின்றது.

சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை எனத் தெரிவித்த பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-281)

## நடமாடும் சேவையில் 200 பேர் பயனடைவு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் நேற்று முன் தினம் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை நடமாடும் சேவையொன்று இடம்பெற்றது.

இந் நடமாடும் சேவையில் விவாகப் பத்திரம், பிறப்பு, இறப்பு பத்திரங்களை இதுவரை பெற்றுக் கொள்ளாதவர்கள் இலவசமாக பதிவுகளை மேற்கொண்டு பெற்றுள்ளனர்.

200 இற்கும் அதிகமான பொது மக்கள் பங்குபற்றி பயன் அடைந்ததாக ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் ய.அனுருத்திரன் தெரிவித்துள்ளார். (2-3-281)

## சரத்தின் நியமனத்தை எதிர்த்து மற்றுமொரு மனுத் தாக்கல்

(கொழும்பு)

பீல்ட் மார்ஷல் சரத் பொனசேகாவை நாடாளுமன்ற உறுப்பினராக நியமித்தது செல்லுபடியற்றது என அறிவித்து உத்தரவொன்றை பிறப்பிக்குமாறு கோரி தென் மாகாண சபையின் முன்னாள உறுப்பினரான மேஜர் அஜித் பிரசன்ன உயர்நீதிமன்றததில் நேற்று மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

சரத் பொன்சேகா, ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளராக போட்டியிடாத அவரை நாடாளுமன்ற உறுப்பினராக நியமித்துள்ளதன் மூலம் அந்தகட்சிமக்களின்உரிமையை மீறியுள்ளதாக மனுதாரர் குறிப்பிட்டுள்ளார்.

பொன்சேகா, ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் கபீர் ஹசீம், தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய, நாடாளுமன்ற செயலாளர் ஆகியோர் மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

பொன்சேகாவை நாடாளுமன்ற உறுப்பினராக நியமித்தமையை எதிர்த்து மாற்றுக் கொள்கைக்கான நிலையம் அண்மையில் அடிப்படை உரிமை மனுவை தாக்கல் செய்திருந்தது.

முன்னாள் காணியமைச்சர் எம்.கே.ஏ.டி.எஸ். குணவர்தனவின் மறைவை அடுத்து சரத் பொன்சேகா, ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், ராஜபக்ஷ ஆதரவாளரான மேஜர் அஜித் பிரசன்ன மேற்படி மனுவை தாக்கல் செய்துள்ளார். (செ-12)

## பொதுக்கூட்டம் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் 200ஆவது ஆண்டு விழா சம்பந்தமான பொதுக்கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி கூட்டம் நாளை 13ஆம்திகதிஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டபோதும் தவிர்க்க முடியாத காரணத்தால் 20.03.2016 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

அன்றைய தினம் பழைய மாணவர்கள் நலன்விரும்பிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறுவிழாஏற்பாட்பாளர்கள் அறிவித்துள்ளனர். (செ)

## ஜனாதிபதி வாய்ப்பினை இழந்த ஆன் சான் சூ கீ

மியன்மாரின் ஜனநாயக லீக் கட்சியின் தலைவி ஆன் சான் சூ கீ ஜனாதிபதி வாய்ப்பினை இழந்துள்ளார்.

ஜனநாயக லீக் கட்சி நடைபெற்று முடிந்த தேர்தலில் வெற்றியீட்டியுள்ளது.

கட்சியின் ஹிடின் கியாவ் மற்றும் வான் தியோவ் ஆகய இரண்டு பேரை ஜனாதிபதி பதவிக்காக பரிந்துரை செய்துள்ளது.

அரசியல் சாசனத்தின் அடிப்படையில் ஆன் சான் சூகியினால் ஜனாதிபதியாக பதவி வகிக்க சாத்தியம் கிடையாது.

சூகியின் நெருங்கிய சகவான ஹிடின் கியாவ் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ-5)

## இல்லமெய்வல்லுநர் திறனாய்வு

(சிவநகர்)

கிளி.சிவநகர் அ.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை அதிபர் ஐ.இராசரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், சிறப்பு விருந்தினராக பழைய மாணவனும் வைத்தியருமான ஜெயராசா சஞ்சயன், கௌரவ விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அதிகாரி எம். ஆர்.மோகனதாஸ் ஆகியோர் பங்குபற்றி சிறப்பிக்கவுள்ளனர். (2-3-254)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து **யாழ் பிரதேசத்தில** நாவாநதுறை, மீனாட்சிபுரம் வீதி, முத்தமிழ் வீதி, வில்லூன்றி, பண்ணைப்பிரதேசம், குருநகர், குருநகர் தொடர்மாடி கட்டடத்தொகுதி, டேவிட் வீதி (கடற்கரை வீதி சந்தி) கொன்வென்ட் பிரதான வீதி, கடற்கரை வீதி (பழைய பூங்கா வீதி சந்தி), குருநகர் ஐஸ் தொழிற்சாலை, சீனோர் ஸ்ரீலங்கா ஐஸ் தொழிற்சாலை, நிபாட் வலைத்தொழிற்சாலை ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில** மடுக்கந்தவிலிருந்து குடாகச்சக்கொடிய வரை, TMM கல்லுடைக்கும் ஆலை ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** முசலிப்பிரதேசம், பரிகாரிக்கண்டல், பூந்தீவுக்கண்டல், மடுக்கரை, புதுக்காமம், மருதமடு, பொன் னாச்சிக்குளம், மணற்குளம், மேதாவெளி, பொற்கேணி, கொககுப்படையான், தம்பட்டமுசலி, மறிச்சுக்கட்டி, கூழாங்குளம், புதுவெளி, அரிப்பு நீர்ப்பாசன சபை, சிலாவத்துறை, நறுவிலிக்குளம், தோமஸ்புரி, வங்காலை நீர்ப்பாசன சபை, வங்காலை கடற்படை முகாம், CECB, முள்ளிக் குளம் கடற்படை முகாம், சிலாவத்துறை கடற்படை முகாம் ஆகிய பிரதேசங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில** அறிவியல் நகர், Mas Intimate, Mas Acti ve, விவசாய பீடம், பார்ம் ஹவுஸ, North Gargills Agrifoods, பாரதிபுரம், மலையாளபுரம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



கடந்த காலத்திலிருந்துதான் எதிர்காலம் உருவாகிறது. எனவே உங்களால் எவ்வளவு முடியுமோ அந்த அளவுக்குத் திரும்பிப் பாருங்கள். பின்னால் உள்ள வற்றாத அந்த ஊற்றுக்களில் இருந்து நன்றாகப் பருகுங்கள். அதன்பின்னர் முன்னே பாருங்கள். பீடு நடை போட்டுச் செல்லுங்கள். நாட்டை முன்பிருந்ததை விட ஒளிமயமானதாக, சிறப்பானதாக, உன்னதமாக உருவாக்குங் கள்.

என் நம்பிக்கை உங்களிடம்தான் இருக்கிறது. உங்கள் நாட்டின் அழைப்பிற்குச் செவிசாய்ப்பீர்களா? என்னை நம்புவதற்கான துணிவு உங்களிடம் இருக்குமானால் உங்கள் ஒவ்வொருவருக்கும் பொன்னான எதிர்காலம் இருக்கும்.

பழங்காலத்தில் நமது முன்னோர்கள் மகத்தான காரியங்களைச் செய்திருக்கிறார்கள் என்பதில் நம்பிக்கை வைக்கவேண்டும். அந்த நம்பிக்கையிலிருந்தும் பழம் பெருமையைப் பற்றிய உணர்விலிருந்தும் முன்னைவிடச் சிறப்பான தொரு நாட்டை நாம் உருவாக்கவேண்டும்.

வாழ்க்கையை வளப்படுத்துகின்ற, மனிதனை உருவாக்குகின்ற, குணத்தை மேம்படுத்துகின்ற, கருத்துக்களை ஜீரணம் செய்யத்தக்க கல்வியே நாம் வேண்டுவது.

# பயிற்சிப் போட்டியிலும் தோல்வி; இலங்கையை பந்தாடியது நியூசிலாந்து

இருபது- 20 உலகக்கிண்ண பயிற்சிப் போட்டியில் நியூசிலாந்து 74 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலங்கையை வீழ்த்தியது.

மும்பை வான்கடே மைதானத்தில் நேற்று முன்தினம் நடந்த மற்றொரு பயிற்சிப் போட்டியில் இலங்கை- நியூசிலாந்து அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற நியூசிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

இலங்கை அணியின் பந்து வீச்சை பிரித்து மேய்ந்த நியூசிலாந்து 20 ஓவரில் 4 விக்கெட்டுக்கு 226 என்ற இமாலய ஓட்டங்களை எட்டியது.

அதிகபட்சமாக கோலிங் முன்றோ 34 பந்தில் 67 ஓட்டங்களும் (7 சிக்சர்), அண்டர்சன் 29 பந்தில் 60 ஓட்டங்களும் (4 பவுண்டரி, 5 சிக்சர்) எடுத்தனர்.

தவிர, குப்தில் 41 ஓட்டங்களும், எலியாட் ஆட்டமிழக்காமல் 36 ஓட்டங்களும் குவித்தனர். இலங்கை அணி தரப்பில், தசுன் ஷனாக 2 விக்கெட் வீழ்த்தினார்.

பின்னர் 227 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு இலங்கை அணி இறங்கியது. தொடக்க வீரர் டில்ஷான் (0), சந்திமால் (8) சொற்ப ஓட்டங்களில் வெளியேறினர்.

திரிமன்னே 41 ஓட்டங்களும், கபுகெடரா 38 ஓட்டங்களும் எடுத்தனர். அணித்தலைவர் மத்யூஸ் (25), சிறிவர்த்தனே (15) ஓரளவு ஓட்டங்கள் குவித்தனர்.

ஏனைய வீரர்கள் சொற்ப ஓட்டங்களே எடுத்த நிலையில், அந்த அணியால் 20 ஓவர் முடிவில் 7 விக்கெட்டுக்கு 152 ஓட்டங்களே எடுக்க முடிந்தது. இதனால் 74 ஓட்டங்களால் இலங்கை தோல்வியைத் தழுவியது.

நியூசிலாந்து அணி தரப்பில், மில்னே 3 விக்கெட்டுகளும், இஷ்சோடி 2 விக்கெட்டுகளையும் எடுத்தனர். (க)



## கிரிக்கெட்டே வேண்டாம் தற்கொலை செய்ய நினைத்தேன்

### ரெய்னா தெரிவிப்பு



இந்திய கிரிக்கெட் வீரர் சுரேஷ் ரெய்னா தான் தற்கொலை செய்து கொள்ள நினைத்தது பற்றிய தகவலை வெளியிட்டுள்ளார்.

இந்திய அணியின் அதிரடி துடுப்பாட்ட வீரரான சுரேஷ் ரெய்னா, தற்போது இருபது-20 உலகக்கிண்ண தொடரில் விளையாடி வருகிறார்.

இந்நிலையில் கிரிக்கெட்டின் ஆரம்ப காலத்தில் லக்னோவில் உள்ள விளையாட்டு வீரர்களுக்கான விடுதியில் தான் சந்தித்த பிரச்சினைகளை பற்றி சுரேஷ் ரெய்னா செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.


அவர் கூறுகையில், "நான் லக்னோவில் உள்ள விளையாட்டு வீரர்களுக்கான விடுதியில் தங்கி இருக்கையில் மிகவும் சிரமமாக இருந்தது. அங்கு என்னை பலரும் தொடர்ந்து சீண்டிக் கொண்டே இருந்தனர். இதை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அதனால் தற்கொலை செய்து கொள்ளலாமா என்று நினைத்தேன்.

ஒருமுறை என்னையும், என் நண்பனையும் ஹொக்கி ஸ்டிக்கால் அடித்தனர். அந்த சம்பவத்தில் படுகாயம் அடைந்த என் நண்பன் கோமா நிலைக்கே சென்று விட்டான்.

இதனால் பயந்து போன நான் இந்த விடுதியே வேண்டாம் என்று ஒரே ஆண்டில் வீட்டிற்கு ஓடி விட்டேன். இதன்பிறகு என் சகோதரரின் அறிவுரைப்படி 2 மாதங்கள் கழித்து மீண்டும் விளையாட்டு வீரர்கள் விடுதிக்கு சென்றேன்" என்று கூறியுள்ளார். (க)

## இருபது-20 போட்டியில் 277 ஓட்டங்கள் பாகிஸ்தான் வீரர் புதிய சாதனை





பாகிஸ்தான் வீரர் ஒருவர் இருபது-20 போட்டியில் 277 ஓட்டங்கள் குவித்து அனைவரையும் வியக்க வைத்துள்ளார்.

பாகிஸ்தானில் நடந்த கிளப் போட்டி ஒன்றில் அகமது மீர் என்ற வீரர் 76 பந்தில் 277 ஓட்டங்கள் விளாசியுள்ளார். இதில் 26 சிக்சர்கள், 24 பவுண்டரிகளும் அடங்கும்.

ஆனால் இவருக்கு முன்னரே கடந்த 2007 ஆம் ஆண்டு இலங்கை வீரர் தனுக பத்திரண முதல் தர இருபது-20 போட்டியில் 72 பந்திலே 277 ஓட்டங்கள் குவித்திருந்தார். தற்போது இவரது சாதனையை அகமது மீர் சமன் செய்துள்ளார்.

முதல் தரப் போட்டிகளில் எளிதாக இமாலய ஓட்டங்களை வீரர்கள் எளிதில் எடுப்பது அதிகரித்து வருகிறது.

சமீபத்தில் பிரானாவ் தனவாடே பாடசாலைகளுக்கு இடையேயான போட்டியில் 1009 ஓட்டங்களை குவித்து உலகசாதனை படைத்தது குறிப்பிடத்தக்கது. (க)

## இந்தியா-தென்னாபிரிக்கா இன்று பயிற்சி ஆட்டம்

20 ஓவர் உலக கோப்பை கிரிக்கெட் போட்டியில் நேற்று முன்தினம் நடந்த பயிற்சி ஆட்டத்தில் இந்திய அணி 45 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மேற்கிந்திய தீவை வீழ்த்தியது.

2 ஆவது பயிற்சி ஆட்டத்தில் இந்திய அணி இன்று தென்னாபிரிக்காவுடன் மோதுகிறது. இந்த ஆட்டம் மும்பை வான்கடே மைதானத்தில் இரவு 7.30 மணிக்கு தொடங்குகிறது. முன்னதாக இம்மைதானத் தில் பிற்பகல் 3 மணிக்கு நடக் கும் போட்டியில் நியூசிலாந்து - இங்கிலாந்து அணிகள் மோதுகின்றன. (க)

## ஐ.பி.எல். அட்டவணை வெளியீடு

INDIAN PREMIER LEAGUE

8 அணிகள் பங்கேற்கும் 9 ஆவது ஐ.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் போட்டி ஏப்ரல் 9 ஆம் திகதி முதல் மே 29 ஆம் திகதி வரை நடைபெறும் என்று போட்டி அட்டவணையை வெளியிட்டு ஐ.பி.எல். நிர்வாகம் நேற்று முன்தினம் அறிவித்தது. ஏப்ரல் 9 ஆம் திகதி மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெறும் தொடக்க ஆட்டத்தில் நடப்பு சம்பியன் மும்பை இந்தியன்ஸ் அணியும், டோனி தலைமையிலான ரைசிங் புனே சுப்பர் ஜெயன்ட்ஸ் அணியும் மோதுகின்றன.

இறுதி ஆட்டமும் மும்பையிலேயே நடக் கிறது.

மொத்தம் 60 ஆட்டங்கள் மொகாலி, டில்லி, மும்பை, நாக்பூர், புனே, பெங்களூர், ஐதராபாத், கொல்கத்தா, ராஜ்கோட், ராய்ப்பூர் ஆகிய 10 நகரங்களில் நடைபெறுகிறது. சென்னை சுப்பர் கிங்சுக்கு தடை விதிக்கப்பட்டிருப்பதால் முதல் முறையாக சென்னையில் எந்த ஆட்டமும் நடத்தப்படவில்லை. (க)

# 14 தமிழ் அரசி...

அல்லது புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்வது தொடர்பான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என சட்டமா அதிபர் திணைக்களத்தால் மன்றில் தெரிவிக்கப்பட்டதை அடுத்து சந்தேக நபர்களை எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டதுடன் உணவு தவிர்பபில் ஈடுபட்டுள்ள கைதிகளை அவர்களின போராட்டத்தினையும் கைவிடுமாறும் கொழும்பு நீதவான் நீதிமன்ற மேலதிக நீதவான் ஆரணி ஆட்டிகல தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து கைதிகள் தமது உணவு தவிர்ப்பு போராட்டத்தை இடைநிறுத்தியுள்ளனர். (செ-9)

# நடேஸ்வராக்...

நடைபெறவுள்ளது. வலி வடக்கில் படையினரின் கட்டுப்பாட்டில் இருந்த பொதுமக்களின காணிகள் படிப்படியாக விடுவிக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் கடந்த மாதம் வலிவடக்கில் தெல்லிப்பழை, கோப்பாய் ஆகிய பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்டபகுதிகளில் 701.5 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டன.

காங்கேசன்துறை தெற்கு, பளை வீமன் காமம் வடக்கு, தையிட்டி தெற்கு ஆகிய பகுதிகளில் 213.5 ஏக்கர் காணியும், பலாலி வடக்கு, பலாலி தெற்கு, பலாலி கிழக்கு ஆகிய பகுதிகளில் 255 ஏக்கர் காணியும், வளலாய் பகுதியில் 233 ஏக்கர் காணியும் விடுவிக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் தற்போது வளலாய் பகுதியில் உள்ள அனைத்து காணிகளும் விடுவிக்கப்பட்டுள்ளன.

படையினரின் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்கப்பட்ட காணிகள், தோட்ட நிலங்களை உத்தியோகபூர்வமான சான்றிதழ்கள் ஊடாக பொதுமக்களிடம் கையளிப்பதுடன் நடேஸ்வராக்கல்லூரி உட்பட அதனை அண்டியுள்ள 109 ஏக்கர் நிலப்பரப்பும் கட்டுவன் பகுதியில் 120 ஏக்கர் நிலப்பரப்பும் ஜனாதிபதியால் இன்றையதினம் விடுவிக்கப்படவுள்ளதாக தெரிய வருகிறது.

மேலும் வடகிழக்கில் அமைக்கப்படவுள்ள 65 ஆயிரம் வீட்டுத்திட்டத்தின் கீழ் உரும்பிராய் செல்வபுரம் பகுதியில் அமைக்கப்பட்ட மாதிரி வீட்டினையும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்றையதினம் சென்று பார்வையிடவுள்ளார். (செ-4-9)

# 'கொள்ளையடிக்க...

அரசினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. நான் அண்மையில் பானம பகுதிக்கு சென்றிருந்தேன். அங்கு நீச்சல் தடாகங்களுடனான மூன்று மாளிகைகள் கட்டப்பட்டுள்ளன. ஆனால் வடக்கு மாகாணத்தில் உள்ள மக்கள ஒரு சிறு வீடேனும் இன்றி அவஸ்தைப்படுகின்றனர்.

இந்த கொள்ளை நடவடிக்கைகளின் பிரதிபலனாக நாம் எதிர்ப்பாராத விதமாக வரவு செலவு திட்டத்தில் செலவுகள் அதிகரித்தன. இந்நிலையில், இந்த கொள்ளைகளில் ஈடுபட்டவர்களை கண்டறியுமாறு நாடாளுமன்றத்திற்கு அறிவித்துள்ளேன் எனவும் பிரதமர் தெரிவித்தார். (செ-12)

# ராஜபக்ஷ வரி...

யாளப்படுத்த வேண்டியுள்ளது எனவும் அமைச்சர் ஹறின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் நிதியமைச்சின் செயலாளர், வெளிநாட்டு கடன்களை பெற்ற போது, இந்த விதத்தில் சென்றால், புதிதாக ஆட்சிக்கு வரும் ஒருவருக்கு அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல முடியாது என அன்றைய அரசாங்கத்தில் அமைச்சராக பதவி வகித்த விமல் வீரவன்ஸ கூறியிருந்தார்.

விமல் வீரவன்ஸவுக்கு அன்று ஞானம் பிறந்து கூறிய இந்த வார்த்தை தற்போது உண்மையாகியுள்ளது.

முன்னைய அரசாங்கம் வகை தொகையின்றி பெற்ற கடன்கள் காரணமாக பெறுமதி சேர் வரியை அதிகரிக்க நேரிட்டுள்ளது. இதனால், இது ராஜபக்ஷ வரி.

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் 6 வீத வட்டியில் கடனை பெற்றது. எனினும் தற்போதைய அரசாங்கம் 1.9 வீத வட்டியில் கடனை பெற்று வருகிறது என அமைச்சர் ஹறின் பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார். (செ-12)

# திருட்டில் அவனை...

கடந்த பாராளுமன்ற அமர்வின் போது கொழும்பு மாவட்ட ஐ.ம.சு.முன்னணி எம்.பி. தினேஷ் குணவர்த்தன உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் தொடர்பில் முன்வைத்த 23இன் கீழ் இரண்டில் எழுப்பிய கேள்விக்கு பிரதமர் நேற்று வெள்ளிக்கிழமை சபையில் பதில் வழங்கியதையடுத்தே இருதரப்பிற்குமிடையே கடும் வாதப் பிரதிவாதங்கள் இடம் பெற்றது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது பதிலில் எல்லை நிர்ணயப் பணிகள் பூர்த்தியடையாமலில்லை. எனவே உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை நடத்த முடியாது.

எனவே இவ்விடயத்தில் அரசுக்கு எந்த விதமான உள்நோக்கங்களும் கிடையாது. அத்தோடு கடந்த ஆட்சிக் காலத்தில் பஷில் ராஜபக்ஷவின் தேவைக்கமையவே எல்லை நிர்ணயங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றும் பிரதமர் தெரிவித்தார்.

பிரதமரின் இந்தப் பதிலை ஏற்காத தினேஷ் குணவர்த்தன எம்.பி. எல்லை நிர்ணய சபையின் கால எல்லை பல தடவைகள் நீடிக்கப்பட்டுள்ளன. இது தேர்தலை தள்ளிப்போடுவதற்கான ஒரு உபாயம் என்பது அனைவருக்கும் தெரியும்.

கடந்த வருடம் உள்ளூராட்சி சபைகளுக்கான காலம் முடிந்துவிட்டது. 300க்கும் மேலான உள்ளூராட்சி சபைகள் தற்போது கலைக்கப்பட்டுள்ளன.

ஜனநாயகத்தின் அடிப்படை உள்ளூராட்சி சபைகளில் தான் உள்ளது. எனவே உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களை தள்ளிவைக்கும் உடன்பாட்டை அரசு இனியும் தொடரக்கூடாது. உடனடியாக உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நடத்தப்படவேண்டும் என்றார்.

இதனையடுத்து சபையில் எழுந்த ஜே.வி.பி எம்.பி.அநுரகுமார திஸாநாயக்க பல உள்ளூராட்சி சபைகளில் இன்று மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் உள்ளது. இதனால் மக்கள் தமக்கான சேவைகளை பெற்றுக் கொள்ள முடியாதுள்ளது. எனவே தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என குறிப்பிட்டார்.

இதற்கான பதில்களை பொறுமையாக வழங்கிய பிரதமர் மேலும் கூறுகையில், கடந்த அரசாங்கத்தின் ஊழல் மோசடிகளால் தான அதிகளவான மில்லியன் ரூபாய்களை கடன்களுக்காக இழந்து கொண்டிருக்கிறோம் இனியும் எம்மால் பொறுத்துக்கொள்ள முடியாது.நாட்டின் நிதிநிலைமை மோசமடைவதற்குள் குறைகளை சரி செய்வோம்.

மூன்று மாத காலத்திற்குள் பண மோசடித் திருடர்கள் வெளிபடுத்தப்படுவார்கள். அவர்களின் திருட்டு முறைகள் வெளிப்படுத்தப்படும். சிறந்த சட்டத்தரணிகளை தெரிவு செய்து தயாராக வைத்துக் கொள்ளுங்கள்.

மகிந்த ராஜபக்ஷ ரெஜிமண்ட் அவன் இவன் என திருட்டுடன் சம்பந்தப்பட்டவர்கள் அனை வர் மீதும் பக்கச்சார்பற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

இதன்போது கம்மன்பில எம்.பி. அவன் இவன் என பிரதமர் முறையற்ற வகையில் கூறுவதாக குற்றம் சாட்டினார். அதன்போது நான் இவரைக் கூறவில்லை. அவ்வாறு கூறவுமில்லை. திருட்டுக்களுடன் சம்பந்தப்பட்டவர்களையே கூறுகின்றேன். வெளியில் உள்ளவர்களையே கூறினேன். அதில் இவரும் உள்ளாகின்றார் என்றால் என்னால் எதுவும் செய்யமுடியாது என்றார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. (செ-12)

# சட்ட விரோதமாக டைனமற் விற்பனை

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ அசராங்கம், அரசாங்க கொள்கைகளுக்கு புறம்பான வகையில் 100 மெற்றிக் தொன் டைனமற்றை விற்றுள்ளதாக பாரிய நிதி மோசடிகள் குறித்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகளின் மூலம தெரியவந்துள்ளது.

கடந்த அரசாங்க ஆட்சிக் காலத்தில் 100 மெற்றிக் தொன் டைனமற்றை கொளவனவு செய்து அது காலாவதியாகும் வரையில் வைத்திருந்து விற்பனை செய்துள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

வெலிசுரகடற்படை முகாமில் உள்ள களஞ்சியமொன்றில் வைத்திருந்து அரசாங்க நியதிகளுக்கு புறம்பான வகையில் காலாவதியாகும வரையில் டைனமற்களை வைத்திருந்து அதன் பின்னர் விற்பனை செய்த காரணத்தினால் 22 மில்லியன் ரூபாய் அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்பட்டுள்ளது.

ஜனாதிபதிஆணைக்குழு இந்த விபரங்களை நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

டைனமைற்கள் காலாவதியாக இருப்பதாக வெலிசர கடற்படை முகாம் அதிகாரிகள் பல தடவைகள் அப்போதைய பாதுகாப்பு அமைச்சின மேலதிக செயலாளர் தமயந்தி ஜயரட்னவிற்கு எழுத்து மூலம அறிவித்திருந்தனர்.

எனினும் இந்த அறிவிப்புக்களுக்கு எவ்வித உரிய பதிலும் கிடைக்கவில்லை என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (செ-12)

மணிவிழா வாழ்த்துக்கள்

"பொன்மனச் செம்மல்"
"கல்விக் காருண்யன்"

உயர்திரு.

E.S.P. நாகரத்தினம்

அவர்களின்

மணிவிழா சிறப்புற வாழ்த்துகிறோம்




(3868)

வாழ்த்துவோர் : சிறி மாதவன்
97, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

முல்லைக்குதேர் கொழுத்த பாரி வள்ளல்
பரம்பரையே வாழிய வாழிய வாழியவே



ஆறுதல் வேண்டுவோர்க்கு ஆறுதல் அளிக்கும் ஆலமரம் போன்ற ஆண்டவன் மறுபிறப்பே ஆராரோ வந்து வீழ்ந்து செல்கின்றனர். ஆரவாரமின்றி 30 ஆண்டுகள் கொடுத்துசிவந்தகரத்தோனே E.S.P என்னும் அப்பா நாமத்தின் காவலனே கறை தெரியாது ஏங்கும் ஏழைகளின் - தோழனே கல்விக் கரை சேர தெப்பமாக தோழ கொடுக்கும்தோழனே எம்மக்களுக்கும் மாணவர்க்கும் இன்று போல என்றும் 300 ஆண்டுகளும் அதற்கு மேலும் நாம் கொண்ட அழியாது தொடர உரமிட்ட உத்தமனே எம் தலைவன் வழியில் சளைக்காது நிமிர்ந்து நடை உடை வேந்தே வள்ளலே வாழிய வாழிய வாழியவே!

(சி-3966)

TCT குழுமம்
நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

அந்தியேட்டி அழைப்பு

கடந்த 12.02.2016 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்ப குல விளக்கு

அமரர்
சிவசம்பு கனகம்மா



அவர்களின் அந்தியேட்டிக் கிரியை கள் இன்று (12.03.2016) சனிக்கிழமை காலை 5.00 மணியளவில் கீரிமலை தீர்த்தக் கரையில் நடைபெறும். மறுநாள் 13.03.2016 ஞாயிற்றுக்கிழமைஅன்னாரின் இல்லத்தில் நடைபெறும் சபீண்டிகரண நிகழ்விலும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு, நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறோம்.

சாமியன் அரசடி,
கரவெட்டி மத்தி, கரவெட்டி.

இங்ஙனம் :
குடும்பத்தினர்

# அமைச்சர் சரத் பொன்சேகா...

எனினும்பொன் சேகாவின் குற்றச் சாட்டை பசில் ராஜ பக்ஷ, அரசியல் வேட்டை என வர் ணித்துள்ளார்.

பொன் சேகா கூறியது, முற்றிலும் பொய்யானது, அப்படியான சம்பவம் நடைபெறவே இல்லை.

பொன்சேகாவுடன் நான் அப்படியான எதனையும் பேசவில்லை.

இதுஅவரதுகருத்துக்கு அமைய கூறிய விடயமல்ல. ஒரு நீண்டகால இலக்கு ஒன்றை குறிவைத்து மேற்கொள்ளப்படும அரசியல் வேட்டையாடல் நடவடிக்கை என்று எமது சட்டத்தரணிகள் கருதுகின்றனர் என பசில ராஜபக்ஷ கூறியுள்ளார்.

அதேவேளை விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு சொந்தமான வங்கிகள் மற்றும் வேறு விதமாக கைப்பற்றிய தங்கத்தை மீண்டும் வடக்கு, கிழக்கு மக்களுக்கு வழங்கிய போதிலும் அதில் ஒரு பகுதி காணாமல் போயுள்ளதாக அமைச்சர் சரத் பொன்சேகா நாடாளுமன்றத்தில் கூறியிருந்தார்.

இதற்கு பதிலளித்த பசில் ராஜபக்ஷ, தங்கத்தை மீண்டும் மக்களிடம் கையளிக்கும் நடவடிக்கைக்கும் தனக்கும் சம்பந்தம் இல்லை என்பதால், அது பற்றிய மேலதிக தகவல்கள் தனக்கு தெரியாது என்றார்.

இதேவேளை, ராஜபக்ஷ அரசாங்கத்தின் அமைச்சர் என்ற வகையில், கூட்டுப் பொறுப்பின் அடிப்படையில், பொன்சேகாவின் குற்றச்சாட்டை மறுக்கின்றேன். கைப்பற்றிய தங்கத்தை மீண்டும் கையளித்தமை சம்பந்தமான சட்ட ரீதியான பின்னணி எனக்கு தெரியாது என்றார்.

தங்கத்தை மீண்டும் வழங்கியமை தொடர்பில் தேவையெனில் விசாரணைகளை நடத்துவதில் எவ்வித தவறையும் தான் காணவில்லை எனவும் பசில்ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார். (செ-12)


பளை, இயக்கச்சி

## சிவபூமி கோட்டம்

திறப்பு விழா அழைப்பிதழ்

காலம் : 12.03.2016 சனிக்கிழமை
பி.ப. 3.22 - 4.55 வரையுள்ள சுபவேளையில்
இடம் : கொற்றாண்டார்குளம் வீதி, இயக்கச்சி, பளை.
தலைவர் : செஞ்சொற்செல்வர் கலாநிதி. ஆறு. திருமுருகன் (தலைவர், சிவபூமி, அறக்கட்டளை)
பிரதமவிருந்தினர் : ஆன்மீகச்சுடர் ரிஷி. தொண்டுநாதன் சுவாமிகள் (அமெரிக்கா)

அவர்களால் சிவபூம் கோட்டம் திறந்து வைக்கப்படும்.

வணக்கம்

சிவபூமி அறக்கட்டளையின் எதிர்கால வாழ்வாதார முயற்சியாக பளை, இயக்கச்சியில் நிலம் கொள்வனவு செய்யப்பட்டு விவசாயப் பணி நடைபெற்று வருகிறது. இயக்கச்சி வாழ் சிறார்களின் நன்மை கருதி அவர்களுக்கான அறநெறி வகுப்புக்களை நடாத்தும் பொருட்டும் சில சமூகப் பணிகளை மேற்கொள்வதற்காகவும் இந் நிலையம் உருவாக்கப்பட்டுள்ளது. உங்கள் அனை வரது ஆசிகளையும் நல்லாதரவுகளையும் வழங்கி பணி சிறக்க அன்புடன் அழைக்கின்றோம்.

தலைமை அலுவலகம் சிவபூமி
கோட்டாவில் கிழக்கு, கோண்டாவில்

நிர்வாகசபை,
சிவபூமி அறக்கட்டளை.

(3861)



யா/யாழ் இந்து மகளிர் கல்லூரி
பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம்

எமது கல்லூரியின் பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும் 22.03.2016 செவ்வாய்க்கிழமை பி.ப. 3 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறும். அனைத்து பழைய மாணவிகளையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்

(C-3958)



மணிவிழா வாழ்த்துக்கள்



கல்விக் காருண்யன்
E.S.P. நாகரத்தினம்
அவர்கள்

மணிவிழாக் காணும்
இந் நன்நாளில்
அவர் தம் குடும்பத்தினருடன்
சீரும் சிறப்புடனும்
பல நூறு வருடங்கள்
வாழ இறைபதம்
தொழுகின்றோம்.

அபிநயா பிறிண்டேர்ஸ்
நல்லூர், யாழ்ப்பாணம்.

(3851)



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



ஆங்கில வகுப்பு

தரம் 02, 03,04, 05, 06, 07, 08, 09, 10 ஆம் O/L, A/L மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தொழில் புரிபவர்களுக்கு மான English Spoken with Grammar வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:-
0767070069
M.Suren (3850)



மணிவிழா வாழ்த்துக்கள்



கல்விக் காருண்யன்
E.S.P. நாகரத்தினம்

வாரி வழங்கி வள்ளல் என்று
பெயரெடுத்து உலகையே உன்பக்கம்
திரும்பி பார்க்கச் செய்து தனக்கென
ஒரு தனிவழி அமைத்து நடைபோடும்
வள்ளலை வாழ்த்துகின்றோம்.

- சண் ஜெயா விருந்தினர் விடுதி
- சண் ஜெயா உணவகம்
- சண் ஜெஸ் மல்ரி மார்க்கட்டிங்

414,713 Hospital Road,
Jaffna.
உரிமையாளர் :
லயன் அ. ஜெயந்திரன் குடும்பம்

(3857)



கண்ணீர் அஞ்சலி



சிறப்பு தலைமை கிராம
அலுவலர் மூத்த
ஊடகவியலாளர்
விளையாட்டுத்துறை
விற்பனர் பொறுப்புக்களை
சம காலத்தில் சலிப்பின்றி
செயற்படுத்திய செயல் வீரன்

அமரர் நாகராசா
நவரத்தினராசா

அவரது மறைவால் துயருறும்
அவர்தம் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபத்தை
தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி பெற
இறைவனை வேண்டுகிறோம்.

வலிகாம விளையாட்டுத்துறை வீரர்கள் சார்பாக
நா.துஷ்யந்தன்
சிரேஷ்ட உடற்கல்வி ஆசிரியர்

(3862)



சொன்னபடி செய்தது சிகரம்!

யாழில் 6 மாத கற்கைநெறியை பூர்த்திசெய்த
5 பேர் வெளிநாட்டு விசா அனுமதி பெற்றனர்

பகுதிநேர/ முழுநேர வேலைவாய்ப்பு & வருமானத்துடன் கூடிய
Dip in Hotel Management
Leading to
University of Sunderland - UK

NO IELTS, Bank Balance, Interview



2ம் அணியில் இணைந்த ஒரு தொகுதி மாணவர்கள்
பல்கலைக்கழக அனுமதி கடிதம் பெற்றனர்

நீங்களும் இணைந்துகொள்ள அழையுங்கள் 077 36 16 798

புதிய பிரிவு ஆரம்பம் மார்ச் 14

வெளிநாடு செல்ல விரும்பாதவர்களுக்கு
உள்நாட்டு வேலைவாய்ப்பு ஏற்பாடு

SIKARAM HOTEL SCHOOL

மேலதிக விபரங்களுக்கு:
www.sikaram.lk
275-2/1 மணிக்கூட்டுக்கோபுர வீதி,
யாழ்ப்பாணம் (வைத்தியசாலை பின்புறம்)

(C-3968)



யாழ் மகாள் விடுதி

AC, NON AC றூம்கள் அல்லது 7 றூம்களைக் கொண்ட வீடாகவும், நாள் கிழமை மாதம் வாடகைக்கு கொடுக்கப்படும்.

இடம் - இல.63, கலட்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணம்,
T.P :- 077 026 0180

(3838)



மணிவிழா வாழ்த்துக்கள்



பெருமதிப்பிற்குரிய ஈகையாளன்
E.S.P. நாகரத்தினம்
அவர்களின் மணிவிழா
சிறப்புற வாழ்த்துவதுடன்
அவர் நலமுடனும் சீரும்
சிறப்புடனும் வாழ்ந்து இந்த தேசத்திற்கு
இன்னும் பல சேவை வழங்க வேண்டி
வாழ்த்துகின்றோம்.

(3852)

உரிமையாளர்களும்
நிர்வாகத்தினரும், ஊழியர்களும்
தனியார் சிற்றூர்தி சேவைச் சங்கம், காரைநகர்



ஓர் அரிய சந்தர்ப்பம்!

உங்கள் கனவுகளை
இன்றே அடைந்திட!

இலங்கையில் 54 வருடங்கள் மக்களிற்கு சேவையினை வழங்கி வரும் சிறிலங்கா இன்சூரன்ஸ் கிளிநொச்சி கிளையில் காப்புறுதித்துறையில் பணியாற்றிட ஆர்வமுள்ள இளைஞர், யுவதிகள், ஓய்வுபெற்ற அரச மற்றும் தனியார் நிறுவன உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்களை கோருகின்றது.

விண்ணப்பத்தாரிகள்:
01. 18வயதிற்கு மேற்பட்டவராயிருத்தல் வேண்டும்.
02. கல்வி பொதுத் தர சாதாரணதரப்பரீட்சையில் கணிதம், தமிழ் உட்பட ஆறு பாடங்கள் சித்தி
03. கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மாவட்ட வதிவிட விண்ணப்பத்தாரிகள் மட்டும் விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்ப முகவரி – முகாமையாளர் சிறிலங்கா இன்சூரன்ஸ்
இல. 31, A9 வீதி, கிளிநொச்சி.

(C-3957)

விண்ணப்பமுடிவுத்திகதி : 31.03.2016



கிளி எடிசன் கல்லூரி

வலயக்கல்வி பணிமனை முன்பாக கிளி நொச்சி சமுர்த்தி, கிராம அலுவலர் போட்டிப் பரீட்சைக்காக வகுப்புக்கள் ஆரம்பம் 12.03.2016 சனிக்கிழமை பி.ப. 2 மணிக்கு ஆரம்பமாகின்றது.

Y.தவசேகர்
077 548 3470

(C-3967)



ஆட்கள் தேவை

கிளிநொச்சியில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள உயர்தர அசைவ உணவகத்திற்கு சகலவிதமான வேலையாட்களும் தேவை.

தொடர்புகளுக்கு :
0777 474 111

(3857)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.03.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.